Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 32 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :233 ஆடி 04ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 19 ஜூலை 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## பாடசாலைகள் ஆரம்பமாகாது

யாழ்ப்பாணம், ஜுலை 19
அனைத்து பாடசாலைகளுக்கும் நாளை தொடக்கம் இன்னொரு வாரம் இடைக்காலத் தவணை விடுமுறை கல்வி அமைச்சால் அறிவிக்கப்பட்டுள்ளது.
ஜுலை 20ஆம் திகதி 27

# சமஷ்டி அடிப்படையில் தன்னாட்சியே தீர்வு

### தேர்தல் அறிக்கையில் தமிழ்க் கூட்டமைப்பு வலியுறுத்து தமிழ் மக்களை ஆணை வழங்குமாறு அறைகூவல்

யாழ்ப்பாணம், ஜுலை 19
தமிழ்பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான தன்னாட்சி ஏற்பாடொன்றை இலங்கைத் 31



## மாணவன் மீது கத்திக் குத்து

யாழ்ப்பாணம், ஜுலை 19
யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்களுக்கு இடையே ஏற்பட்ட கைகலப்பில் ஒருவர் கத்திக்குத்துக்கு இலக்காகியுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 11 மணியளிவில் நடந்துள்ளது.
யாழ்ப்பாணம் பரமேஸ்வராச் சந்திக்கு அருகில் மாணவர்கள் தங்கும் தனியார் விடுதியிலேயே இந்தச் சம்பவம் நடந்துள்ளது. 30

## இராவணன் தொடர்பான வரலாற்று ஆய்வு நூல்கள் கோரல்

கொழும்பு, ஜுலை 19
இராவணன் என்ற மன்னன் இலங்கையை ஆண்டான் என்பது கட்டுக்கதை என்று எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்திருந்த நிலையில், இராவணன் முஸ்லிம் மன்னன் என்றுஉலமாக்கட்சிகுறிப்பிட்டிருந்த நிலையில், இராவணன் தொடர்பான விவகாரத்தில் சர்ச்சை எழுந்திருந்தது. இந்த நிலை 29

# தமிழீழத்தையே கேட்கின்றது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

### தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பில் கொதித்தெழுகிறது மஹிந்த அணி

கொழும்பு, ஜூலை 19
நாட்டின் அரசமைப்புக்கு முரணாகத் தனித்தமிழீழத்தைப் பிரகடனப்படுத்தியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் அறிக்கையை வெளியிட்டுள்ளது. இவ்வாறு மஹிந்த அணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, டியூ குணசேகர ஆகியோர் கூட்டாக குற்றம் சுமத்தியுள்ளனர். 31

## சுவரொட்டி போட்டியில் ஐவர் காயம்

சாவகச்சேரி, ஜுலை 19
தேர்தல்சுவரொட்டிகளை ஒட்டும்போது எழுந்த வாக்குவாதம் கைகலப்பானதில் இரு பெண்கள் உட்பட ஐவர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு மட்டுவிலில் நடந்துள்ளது.
ஒரு கட்சியினர் தேர்தல் சுவரொட்டியை ஒட்டிவிட்டுச் சென்றபின்னர், அதன்மீது மற்றொரு கட்சியினர் சுவரொட்டி ஒட்டியதை அடுத்தே வாக்குவாதம் 29

### தேசிய வீடமைப்பு அதிகாரசபை
## வீட்டுத் திட்டத்தை கையளித்த ராணுவம்

யாழ்ப்பாணம், ஜுலை 19
விடுதலைப் புலிகளால் அழிவடைந்த வடக்கை முப்படையினர் அர்ப்பணிப்புடன் மீளக் கட்டியெழுப்பி வருகின்றனர் என்று இராணுவக் கட்டளைத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.
யாழ்ப்பாணத்துக்கு நேற்றுமுன்தினம் இரவு வருகை தந்திருந்த இராணுவத் தளபதி சவேந்திர சில்வா, தேசிய வீடமைப்பு அதி 31

## தமிழர்களின் தாயகத்தை தமிழீழமாக ஏற்கவேண்டும்

### தமிழ் அரசு கோரிக்கை

மட்டக்களப்பு, ஜுலை 19
தமிழீழம் என்பது தமிழ் மாநிலம் என்கின்ற வகையில் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலர் கி.துரைராஜசிங்கம் தெரிவித் 32

## தமிழ்த் தேசியத்தைக் காக்க வாக்கு ஆயுதத்தை ஏந்துங்கள்

### கே.வி.தவராசா அறைகூவல்

யாழ்ப்பாணம், ஜுலை 19
எமது தாய் மண்ணையும் தமிழ்த் தேசியத்தையும் பாதுகாக்க இளைஞர்கள் ஆயுதம் ஏந்தியது போல் இன்று எம் வீட்டையும் தமிழ்த் தேசியத்தையும் பாதுகாப்பதற்கு எம் இளைஞர் 29

## நன்மைகள் செய்வதாக இராணுவம் பாசாங்கு

### விக்கி குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜுலை 19
எவ்வளவு தான் படையினர் உங்களுக்கு நன்மைகள் செய்வதாகப் பாசாங்கு காட்டினாலும் அவர்கள் ஒரு அடிப்படைத் திட்டத்தின் 30

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.66,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே
அதிகபட்ச இரகசியத் தன்மை
சிநேகபூர்வமான உடனடி சேவை
சிறந்த பாதுகாப்பு
இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது,
செலான் தங்கக் கடன்
011 200 88 88
செலான் வங்கி
Brand Finance Rating "A +" Fitch Rating: "A" (lka)

### நல்லூரில்
## 500பேரை அனுமதிக்குமாறு மகிந்த உத்தரவு

யாழ்ப்பாணம், ஜுலை 19
நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந் திருவிழாவில் 500 பக்தர்கள் கலந்து கொள்வதற்கு அனுமதிக்கு மாறு கொரோனா தடுப்புச் செயலணியின் தலைவரும், இராணுவத் தளபதியுமான சவேந்திர சில்வாவுக்கும், 31

ராஜ் ஜுவல்லர்ஸ்
அடகு பிடிப்பவர்கள்
1 பவுண் -22 கரட்டிற்கு
75,000/=
வட்டி வீதம் குறைக்கப்பட்டுள்ளது.
1 வருட கால அவகாசம் உங்களுக்கு நாங்கள் தருகின்றோம்
இல.31C. ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (சந்தைக்கு அருகில்).
Tel:021 221 7287, 076 636 1238



# கர்தினால் பதவியை அரசியலுக்கு ஒருபோதும் பயன்படுத்த மாட்டேன்

## இப்படிச் சொல்கின்றார் பேராயர் மல்கம் ரஞ்சித்

**கொழும்பு, ஜூலை 19**

**கர்தினால் பதவியை அல்லது என்னை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசியலில் ஈடுபடுத்தப் போவதில்லை என்று பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.**

கர்தினால் மல்கம் ரஞ்சித்துடன் எடுத்துக்கொண்ட புகைப்படத்தை அரசியல்வாதியொருவர் தேர்தல் பரப்புரைகளில் பயன்படுத்துகின்றமை தொடர்பில் தெளிவுபடுத்துகையிலேயே பேராயர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் கர்தினால் மல்கம் ரஞ்சித்தால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

இம்முறை பொதுத் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர் ஒருவர் அவரது தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளின் போதும் பரப்புரைக் கையேடுகளிலும் எனது புகைப்படத்தை பயன்படுத்தியுள்ளதாக தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. குறித்த வேட்பாளர்கள் ஆரம்பத்தில் என்னை சந்திப்பதற்காக வருகைதந்தபோது என்னுடன் எடுத்துக் கொண்ட புகைப்படத்தையே இவ்வாறு பயன்படுத்தியுள்ளார் என்றும் தெரியவந்துள்ளது.

இவ்வாறான புகைப்படங்களைப் பயன்படுத்துவதற்கு முன்னர் என்னுடைய அனுமதியையோ அல்லது விருப்பத்தினையோ இவர் பெறவில்லை என்பதை தெரிவிக்க விரும்புகின்றேன்.

என்னை அல்லது பேராயர் பதவியை எவ்வித அரசியல் கட்சி அல்லது அரசியல் குழுவுடன் கட்சி அரசியலில் ஈடுபடுத்த மாட்டேன் என்பதையும் தெளிவாகக் கூறுகின்றேன். தமது மனசாட்சியின் பிரகாரம் தாம் விரும்பும் வேட்பாளர் ஒருவருக்கு வாக்களிக்கும் உரிமை நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரஜைக்கும் காணப்படுகிறது. இந்த ஜனநாயக உரிமையை எதற்காகவும் நீக்கிக் கொள்ளத் தேவையில்லை என்பதை சுட்டிக்காட்டுகின்றேன் - என்றுள்ளது. (ம)

# கொரோனாவை கட்டுப்படுத்த மற்றொரு பரிசீலனை தயார்

கொழும்பு, ஜூலை 19

கொரோனா நோயின் தாக்கத்தின் மத்தியில் தேர்தல்கள் தொடர்பாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் சம்பந்தமாக அவசியமற்ற அதிகாரங்களைக் கோரி தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள பொதுச் சுகாதார பரிசோதகர்களின் அடிப்படையற்ற செயற்பாட்டினால் சுகாதார சேவைகள் வீழ்ச்சியடையாத வகையில் செயற்படுத்துவதற்கு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சில பரிந்துரைகளை முன்வைத்துள்ளது.

இது தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் சார்பில் இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் உள்ள பரிந்துரைகளாக, சுகாதார வைத்திய அதிகாரிகளினால் மேற்கொள்ள வேண்டிய கடமைகளை செவ்வனே மேற்கொள்ள சகல வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தல்.

போதியளவு எண்ணிக்கையான வைத்திய அதிகாரிகளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்கு நியமனம் செய்தல்.

கொரோனா நோயினைக் கட்டுப்படுத்துவதற்கு தேவையான மனிதவளங்கள் சம்பந்தமாக மாற்று வழிகளைச் சிந்தித்து அவர்களை சுகாதார வைத்திய அதிகாரிகளின் மேற்பார்வையில் அவர்களின் தொழிநுட்ப ஆலோசனையின் பிரகாரம் சேவையில் இணைத்தல் இவை அமைந்துள்ளன. (ம)



# ஒவ்வொரு 2 மணி நேரத்துக்கும் ஒரு குழந்தை மீது துர்நடத்தை!

## ஒவ்வொரு நாளும் 4 பெண்கள் பாலியல் துஷ்பிரயோகம்

கொழும்பு, ஜூலை 19

நாட்டில் ஒவ்வொரு இரு மணி நேரத்துக்கும் ஒரு குழந்தை துஷ்பிரயோகத் துக்கு உள்ளாக்கப்படுகின்றது என்றும், ஒவ்வொரு நாளும் குறைந்தது 4 பெண்கள் பாலியல் துஷ்பிரயோகத் துக்கு உட்படுத்தப்படுகின்றனர் என்றும் குற்றம் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட குற்றப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த ஜயகொடி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த வருடத்தில் மட்டும் 5 ஆயிரத்து 292 சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவாகியுள்ளன. கடந்த ஆண்டு ஆறு மணித்தியாலத்துக்கு ஒரு பெண் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். அதனடிப்படையில் கடந்த ஆண்டு ஆயிரத்து 642 பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டுக்கு அமையவே இந்தத் தரவுகள் அமைந்துள்ளன. ஆனால் இதுபோன்ற சம்பவங்களைப் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யாதபோக்கு நாட்டில் காணப்படுகின்றது.

சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக சிறப்புக் கவனம் எடுக்கப்படுகின்றது. 44 பொலிஸ் பிரிவுகளில் 44 பிரதேச பணியக பிரிவுகள் காணப்படுகின்றன. அவைகள் தொடர்ந்தும் செயற்பாட்டிலேயே உள்ளன. துஷ்பிரயோகம் தொடர்பில் மாத்திரமன்றி, துஷ்பிரயோக சம்பவங்களுக்கு இணையான சம்பவங்கள் தொடர்பிலும் முறைப்பாடு செய்ய முடியும்- என்றார். (ஏ)

# முழுமையாகத் திறக்கப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஊதியக் குறைப்பு நடைமுறைகள் பொருந்தமாட்டாது

## தொழில் திணைக்களம் அறிவுறுத்தல்

கொழும்பு, ஜூலை 19

தனியார் துறையினருக்கு 50 சதவீதம் அல்லது ஆகக் குறைந்தது 14 ஆயிரத்து 500 ரூபா சம்பளத்தை வழங்குவதற்கு செப்ரெம்பர் மாதம்வரை காலஅவகாசம் வழங்கப்பட்டமை வீடுகளிலிருந்து வேலை செய்பவர்களுக்கு மாத்திரமே. எனவே முழுமையாகத் திறக்கப்பட்டுள்ள தனியார் தொழிற்சாலைகளில் அல்லது நிறுவனங்களில் வந்து தொழில்புரிவோருக்கு முழுமையான சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்று தொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தொழில் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ஆர்.பி.ஏ.விமலவீர இது தொடர்பில் தெரிவித்ததாவது:

கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக வேலைதளத்தில் செயற்பாடுகள் வரையறுக்கப்பட்டுள்ள தனியார் நிறுவனங்கள் அல்லது தொழிற்சாலைகளுக்கு 14 ஆயிரத்து 500 ரூபா குறைந்தளவு சம்பளம் அல்லது 50 வீத சம்பளம் வழங்குவதற்கான கால அவகாசம் செப்ரெம்பர் மாதம் வரை நீடிக்கப்படுவதாக கடந்த வாரம் அரசாங்கம் அறிவித்தது. எனினும் இந்த அறிவித்தல் இது வரையில் முழுமையாகத் திறக்கப்படாத அல்லது வழமையான செயற்பாடுகளை ஆரம்பிக்காத நிறுவனங்களுக்கு மாத்திரமேயாகும். மாறாக தொழிற்சாலைகளுக்கு அல்லது நிறுவனங்களுக்கு வந்து தொழில்புரிபவர்களுக்கு இவ்வாறு குறைந்தளவு சம்பளத்தை வழங்க முடியாது. அவர்களுக்கு முழுமையான சம்பளம் வழங்கப்பட வேண்டும். எனவே இந்தக் காலப்பகுதியில் வேலைத்தளங்களில் முழுமையான பணிகள் நடைபெற்றால் அவர்களது சம்பளத்தை குறைக்க முடியாது. அவ்வாறில்லாத தனியார் துறையினருக்கே இந்த சலுகை வழங்கப்பட்டுள்ளது என்றார். (ம)

# அடையாள அட்டை இன்றிய வாக்காளர்கள் கிராம அலுவலர்கள் ஊடாகப் பெறமுடியும்!

## தேர்தல்கள் ஆணைக்குழு

கொழும்பு, ஜூலை 19

செல்லுபடியாகும் அடையாள அட்டை இன்றிய வாக்காளர்கள் தமக்கான தற்காலிக அடையாள அட்டைகளை கிராம அலுவலர்கள் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும் என்று சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இம்மாதம் 29ஆம் திகதிக்கு முன்னர் இதற்கான விண்ணப்ப படிவத்தை கிராம சேவையாளரிடம் ஒப்படைக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தேசிய அடையாள அட்டை, செல்லுபடியான கடவுச்சீட்டு, சாரதி அனுமதிப்பத்திரம், அரசாங்க சேவை, ஓய்வூதியர் அடையாள அட்டை, ஆட்பதிவு திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள மதகுருமார்களுக்கான அடையாள அட்டை, 2020 நாடாளுமன்றத் தேர்தலுக்காக ஆட்பதிவு திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய அடையாள அட்டை, தகவல்களை உறுதிப்படுத்துவதற்கான கடிதம் என்பவற்றில் செல்லுபடியான எந்தவொரு அடையாள அட்டையும் தன் வசம் இல்லாதவர்கள் தற்காலிக அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். குறித்தவொரு பிரிவின் கிராம அலுவலர் அல்லது தோட்ட மேலதிகாரி ஊடாக தேர்தல்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்படும் தற்காலிக அடையாள அட்டையொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் தற்காலிக அடையாள அட்டை தேவைப்படும் ஒருவரால் கிராம அலுவலரிடமிருந்து இதற்கான விண்ணப்பத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் - என்றுள்ளது. (ம)

# நல்லூருக்கு கூடுதலான பக்தர்கள்!

## சக்திகிரீவன் கோரிக்கை

வரலாற்று புகழ்மிக்க நல்லூர் கந்தசுவாமி கோவில் மகோற்சவ காலத்தில் பக்தர்களை ஆலயத்தில் அனுமதிக்கும் விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் கண்ணியமாக நடந்து கொள்ள வேண்டும் இவ்வாறு அறிக்கை விடுத்துள்ளார் யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் தலைவரான சி.சக்திகிரீவன்.

இது தொடர்பில் அவரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது.

தற்போது உலகில் பரவியுள்ள கொரோனாத் தொற்றை ஆயுதமாக வைத்து ஆலயத்தில் நடைபெறும் மகோற்சவத்துக்கு பொருத்தமற்ற கட்டுப்பாடுகளை விதிப்பதை தவிர்க்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றோம்.

நல்லூர் ஆலயத்தைப் பொறுத்த வரையில் அதன் பரப்பளவு அரச விதிமுறைகளை நடைமுறைப்படுத்தக்கூடிய அளவில் காணப்படுகின்றது. ஆகையால் முருகப்பெருமானின் அடியார்கள் மனதைப் புண்படுத்தும் வகையில் நடந்து கொள்வதைத் தவிர்க்குமாறு சம்பந்தப்பட்டவர்களை மிகுந்த வினயத்தோடு கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (ம)

# யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்

## நாடாளுமன்றத் தேர்தல் - 2020

**எனது அன்புக்குரிய வாக்காளப் பெருமக்களே!**

☆ 2001 ஆம் ஆண்டு தொடக்கம் 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தல் தேசியத் தலைவரின் கட்டுப்பாட்டுக்குள் இயங்கிய அரசியலில் நாடாளுமன்றத் தெரிவுக் காலப்பகுதி

☆ 2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரைக்கும் இறுதி யுத்தகாலப் பகுதியும் தேசியத் தலைவரையும் எமது சகோதரங்களையும் தேசியத்தையும் அழிப்பதற்குத் துணைபோன காலப்பகுதி

☆ 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 வரைக்கும் நீங்கள் போட்ட வாக்குகளால் எமது தேசமும் எமது மக்களும் முழுமையாக ஏமாற்றப்பட்டு சிதறடிக்கப்பட்ட காலப்பகுதி

☆ 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு காலப்பகுதி நான்காவது தடவையாக முற்று முழுதாகத் தமிழ்த் தேசம் சின்னாபின்னமாக்கப்பட்டு சிதறடிக்கப்பட்டு, இன்றைய தலைமுறை இளைஞர்களை வாள்வெட்டுக்கு அழைத்துச்சென்று, போதைப்பாவனை, கஞ்சாப்பாவனை, கடத்தல், கொள்ளை, கலாச்சார சீரழிவு மற்றும் பல பல பல...... பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் தேசமாக எங்களுடைய தேசத்தைக் கொண்டு சென்ற அரசியல் வாதிகளின் காலப்பகுதி... தொடர்வதற்கு அனுமதியோம்

☆ 2020 ஆம் ஆண்டுத் தேர்தலில் நான் உங்களிடம் கேட்பது, எங்களுடைய தமிழ்த் தேசத்தை பொருளாதார ரீதியாக கட்டியெழுப்புவதற்கு பல்லாயிரக்கணக்கான இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கான திட்டம் என்னிடம் இருக்கிறது. இந்தத் திட்டத்தின் மூலம் தமிழ்த் தேசம் அபிவிருத்தியடையும் என்பதை உங்களுக்கு உறுதிபடக் கூறுகின்றேன்.

**2020 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல், வரலாற்றில் மிக முக்கியமான தேர்தல்.**

- நாட்டின் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச அவர்கள் ஆட்சி செய்யும் காலம்.
- மகிந்த ராஜபக்ச அவர்கள் முன்னாள் ஜனாதிபதியாகவும் தற்போதைய பிரதமராக ஆட்சி செய்யும் காலம்.
- முன்னாள் ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேன அவர்கள் அங்கம் வகிக்கும் அரசாங்கமாக அமையப் போகின்றது.

ஒரே நேர் கோட்டில் மூன்று ஜனாதிபதிகள் ஆட்சி செய்யும் அரசாங்கத்தில் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை நன்றாகத் தெரிந்தவர்கள் என்ற முறையிலும் ஒரு யுத்தத்தை முடித்தவர்கள் என்ற ரீதியிலும் நான் அவர்களுடன் எங்களுடைய மக்களின் முழுப் பிரச்சினைகளுக்கும் நீங்களே பொறுப்பானவர்கள் என்றும், அதற்குரிய சகல பொறுப்புக்களில் இருந்தும் நீங்கள் விலகி விடமுடியாதென்றும், மக்களுடைய சகல பிரச்சினைகளுக்கும் நீங்கள் முகம்கொடுக்க வேண்டும் என்றும் கேட்கும் உரிமையை எனக்கு நீங்கள் வாக்களிப்பதன் மூலம் தந்தால், நான் நாடாளுமன்றத்தின் பெரும்பான்மைக் கட்சியில் இருந்து குரல் கொடுப்பேன் என்று உங்களிடம் உறுதியாகக் கூறுகின்றேன்.

தமிழ்த் தேசத்தின் எங்கள் மக்களுடைய எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு நாடாளுமன்றத்தில் இருந்து கிடைக்கவேண்டும் என்பதில் எந்த வித ஐயப்பாடும் இல்லை.



## பரநிருபசிங்கம் வரதராஜசிங்கம் (விண்ணன்)

X 5

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி

### தமிழ்த் தேசியமும் தமிழ்த் தாயும் வாழ்க.

### "உங்கள் வாக்கு உங்கள் உரிமை சரியான முறையில் வாக்களியுங்கள்!"

## உண்மைகள் யாவும் அம்பலத்திற்கு....

# ஏமாற்றுவதில் தேர்ந்தவரான டக்ளஸ் போன்றோருக்குப் பாடம் புகட்டுங்கள்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் சரவணபவன் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், ஜூலை 19**

**நீதிமன்றத்தையும், தேர்தல்கள் ஆணைக்குழுவையும் லாவகமாக ஏமாற்றும் டக்ளஸ் தேவானந்தா மக்களை ஏமாற்ற மாட்டார் என்று உறுதி கூற முடியுமா?. இவர்களைப் போன்றவர்களுக்கு மக்கள்தான் தீர்ப்பளிக்க வேண்டும் இவ்வாறு தெரிவித்துள்ளார் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடுபவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன்.**

மக்கள் சந்திப்பொன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு ஏமாற்றுவதில் கைதேர்ந்தவர் டக்ளஸ் தேவானந்தா. உதயன் பத்திரிகை வெளியிட்ட செய்திக்காக ஆயிரம் மில்லியன் ரூபா நட்டஈடு கேட்டு வழக்குத் தாக்கல் செய்தார் டக்ளஸ் தேவானந்தா. இந்த வழக்கு 2013 செப்ரம்பர் 16ஆம் திகதி யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அன்று முறைப்பாட்டாளரான டக்ளஸ் கட்டாயமாக நீதிமன்றுக்கு வந்திருக்க வேண்டும். ஆனால் நோய்வாய்ப்பட்டு பாதிக்கப்பட்டிருப்பதால், வெளியே நடமாட முடியாமல் இருப்பதால் நீதிமன்றத்துக்கு வர முடியவில்லை என்று அவரது சட்டத்தரணி நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராசா முன்னிலையில் அப்பட்டமான பொய்யைக் கூறினார். படுக்கையில் சுகமில்லாமல் இருந்த டக்ளஸ் அன்று யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியில் யாழ் பல்கலைக்கழக கல்லூரிக்கான அடிக்கல்லை நட்டார்.

அடிக்கல் நடும் விழாவில் அப்போதைய அமைச்சர் டளஸ் அழகப்பெரும, ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, அன்று டக்ளஸின் வலதுகரமாக நின்ற சந்திரகுமார் ஆகியோரும் கலந்துகொண்டனர். அதை உதயன் புகைப்படத்துடன் வெளிப்படுத்தியிருந்தது. சில தினங்களுக்கு மன்னாருக்குச் சென்ற டக்ளஸ் லியோன் தேவாலயத்தில் பங்குத் தந்தையின் தலைமையில் தேர்தல் பரப்புரை செய்துள்ளார். அதற்கான ஒளி, ஒலி நாடாக்களுடன் ஊர்வாசி ஒருவர் மன்னார் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்துள்ளார். அதைப் பரிசீலனை செய்த மன்னார் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் தேவாலயத்தில் தேர்தல் பரப்புரை இடம்பெற்றதை உறுதி செய்து அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் சம்பவத்தை அறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டிய பொலிஸார், டக்ளஸ் தேவாலயத்துக்கு சென்றது உண்மை. ஆனால் அவர் சாமி கும்பிடத்தான் சென்றார் என்று முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்க முற்பட்டுள்ளனர். ஆலயங்களில் சுவாமிக்குத்தான் மாலை போடப்படும். இங்கு டக்ளஸ் மாலை பேர்ட்டுக் கொண்டு ஒரு நாயகனாக அமர்ந்து பரப்புரை செய்வது ஊடகங்களில் புகைப்படத்துடன் வெளியாகின.

ஏழு வருடங்களின் முன் தனது சட்டத்தரணி மூலம் நீதிமன்றத்தை ஏமாற்றிய டக்ளஸ் ஏழு வருடங்களின் பின் பொலிஸாரைக் கொண்டு தேர்தல் ஆணைக்குழுவை ஏமாற்றியுள்ளார். இந்த டக்ளஸ் தில்லுமுல்லு செய்வதிலும் ஏமாற்றுவதிலும் கைதேர்ந்தவர். நீதிமன்றத்தையும், தேர்தல் ஆணைக்குழுவையும் ஏமாற்றிய அமைச்சர் டக்ளஸ் நாளை நம்பிய மக்களை ஏமாற்றமாட்டார் என்று கூற முடியுமா?. இப்படியான ஏமாற்றுக்காரர்களுக்கு மக்கள் சரியான தீர்ப்பை வழங்க வேண்டும் என்றார். (ம)

# நவக்கிரகங்கள் போன்று தமிழரசு வேட்பாளர்கள்!

## தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் வேட்பாளர் சுரேஸ் இப்படித் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 19

தமிழரசுக் கட்சிக்குள் ஒருமித்த கொள்கையோ ஒருமித்த கருத்தோ இல்லாமல் ஒருவருக்கு ஒருவர் முகங்கொடுத்து பேச முடியாதவர்களாக முரண்பட்ட நிலையில் உள்ளனர். அந்தக் கட்சியில் இருக்கக் கூடிய சகல வேட்பாளர்களும் நவக்கிரகங்கள்போல ஒவ்வொருவரும் ஒவ்வொரு மூலைகளுக்குள் நிற்கின்ற நிலைதான் உள்ளது இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் வேட்பாளருமான சுரேஸ் பிரேமச்சந்திரன்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இன்றைக்கு இருக்கக்கூடிய ஒரே தெரிவாக ஒருமித்துச் செயற்படுகின்ற தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியே இருக்கின்றது என்றும் அவர் தெரிவித்தார். யாழ் ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்கள் ஒரு விடயத்தை மிகத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். அதாவது யுத்தம் முடிவுற்று பத்து வருடங்கள் நிறைவடைந்தாலும் கூட ஆயிரக்கணக்கான நாட்களாக எங்களது தாய்மார் தங்களது பிள்ளைகள் உறவுகளைத் தேடி தொடர்ச்சியாகப் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுடைய போராட்டத்திற்கு அரசாங்கம் சொல்லக் கூடிய பதில் அவர்கள் ஒன்றில் இறந்திருப்பார்கள் அல்லது வெளிநாட்டிற்கு தப்பிப் போயிருப்பார்கள் போன்ற விதமாகத்தான் அமைகின்றது.

ஆனால், உண்மையாகவே அவ்வாறான பதில்கள் காயப்பட்ட மக்களுக்கு வலி சுமந்த மக்களுக்கு மேலும்மேலும் வலியை உருவாக்குவதாகத்தான் இருந்து வருகிறது. ஏனெனில் இவர்கள் யுத்தத்தில் கொல்லப்பட்டவர்கள் அல்லர். இவர்கள் நேரடியாக சரணடைந்தவர்கள் அல்லது நேரடியாக வீடுகளிலோ முகாம்களிலோ கைதுசெய்யப்பட்டவர்கள். பொதுமக்களுக்கு முன்னால் அழைத்துச் செல்லப்பட்டவர்கள். ஆகவே இவர்கள் இறந்திருப்பார்கள் யுத்தத்தில் கொல்லப்பட்டிருப்பார்கள் என்ற பேச்சிற்கே இடமில்லை. தமிழரசுக் கட்சிக்குள் பல குழப்பங் கள் இருக்கின்றது. இருக்கக் கூடிய சகல வேட்பாளர்களும் நவக்கிரகங்கள் போல ஒவ்வொருவரும் ஒவ்வொரு மூலைகளுக்குள் நிற்கக் கூடியதைத் தான் நாங்கள் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது- என்றார் (ம)

# வவுனியாவில் இளைஞர் குழு நேற்று அடிதடி

## வீதியால் சென்றவர்கள் மீதும் தாக்குதல்

வவுனியா, ஜூலை 19

வவுனியா வைரவபுளியங்குளம் பகுதியில் இளைஞர் குழு ஒன்று வீதியில் அடிதடியில் ஈடுபட்டதுடன், கற்களைக் கொண்டும் தாக்குப்பட்டுள்ளனர். வீதியால் சென்றவர்கள் மீதும் அவ்வாறு தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

வவுனியா, வைரவபுளியங்குளம் பகுதியில் உள்ள ஒரு மதுபான விடுதிக்கு முன்னதாக இந்த அடிதடி இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிசாருக்கு தெரியப்படுத்தியதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிசார் குறித்த சம்பவம் தொடர்பில் இரு இளைஞர்களை கைது செய்துள்ளதுடன், சிலரைத் தேடி வருகின்றனர். மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ம)

# கஞ்சாவுடன் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களுக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஜூலை 19

மண்டைதீவுப் பகுதியில் 111 கிலோகிராம் கேரளக் கஞ்சாவுடன் கைதுசெய்யப்பட்ட நபர்கள் இருவரையும் எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க ஊர்காவற்துறை நீதிவான் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.

மண்டைதீவு கடற்பகுதி ஊடாக படகு ஒன்றின் மூலம் 111 கிலோ கஞ்சாவைக் கடத்த முற்பட்ட நபர்கள் கடற்படையின் புலனாய்வுத் துறையினரால் கைதுசெய்யப்பட்டிருந்தனர். சந்தேக நபர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். இருவரும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக ஊர்காவற்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் இருவரையும் நீதிமன்றில் முற்படுத்தியபோது நீதிவான் ஏ.யூட்சன் சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (ம-25)



# 13க்குப் பல்லைப் பிடுங்கி 19க்கு சமாதி கட்டுவோம்!

## உதய கம்மன்பில கூறுகின்றார்



**கொழும்பு, ஜூலை 19**

**அரசமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டத்தை ஒழித்துக்கட்டி, 13இலுள்ள விஷப் பற்களை பிடுங்குவதற்கு மக்கள் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தை எமக்கு வழங்கவேண்டும். இவ்வாறு பிவிதுரு ஹெலஉறுமய கட்சியின் தலைவரும், பொதுஜன பெரமுனவின் கொழும்பு மாவட்ட வேட்பாளருமான உதயகம்மன்பில தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று முற்பகல் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2015ஆம் ஆண்டு எமது நாட்டில் உருவான அரசுக்கு உலகில் பலம் பொருந்திய நாடுகளின் ஆதரவு இருந்தது. நாடாளுமன்றத்திலுள்ள கட்சிகளும் நேசக்கரம் நீட்டின. அத்தகையதொரு அரசாங்கத்தை எதிர்ப்பது, கருங்கல்லில் தலையை முட்டும் செயலுக்கு ஒப்பானதாகும் என சிலர் கருத்து வெளியிட்டனர். ஆனால் நாம் எதிர்த்து நின்றோம். கருங்கல்லை சிதறடிக்கவைத்து, ஆட்சிக்கு முடிவுகட்டினோம்.

நாட்டுக்காக அரசுக்குள் இருந்தபடி எமது போராட்டம் தொடரும். தேர்தலில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை பெறமுடியாமல்போனால் கூட ரிஷாட் பதியுதீன்போன்ற அடிப்படைவாதிகளின் ஆதரவை பெறக்கூடாது. பெறவிடவும் மாட்டோம்.

அதேபோல் அடிப்படைவாதத்தை ஒழிப்பதற்கும், பொதுவானதொரு சட்டத்தை கொண்டுவருவதற்கும், நாட்டு வளங்களை பாதுகாப்பதற்கும் அன்று எதிரணியில் இருந்து முன்னெடுத்த போராட்டத்தை அரசாங்கத்துக்குள் இருந்தும் செய்வோம் என மக்கள் நம்புகின்றனர். நிச்சயம் அதனை செய்வோம் என்ற உத்தரவாதத்தை மக்களுக்கு வழங்குகின்றோம்.

19ஆவது திருத்தச்சட்டத்தை மைத்திரிபால சிறிசேனகூட விமர்சிக்கின்றார். அது நீக்கப்படவேண்டும். 13இல் உள்ள விஷப்பற்களை பிடுங்கியெறியப்படவேண்டும். புதியதொரு அரசமைப்பை உருவாக்குவதற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை அவசியம். அதனை மக்கள் வழங்குவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது - என்றார். (எ-44)

# மன்னாரில் வீடு மீது குண்டுத் தாக்குதல்!

## ஒருவர் படுகாயம்

மன்னார், ஜூலை 19

மன்னார், பட்டித்தோட்டத்தில் உள்ள வீடோன்றில் நேற்றுமுன்தினம் இரவு நாட்டு வெடிக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இரு பிள்ளைகளின் தந்தையான சேமாலை சந்தியோகு (வயது56) என்பவரே படுகாயமடைந்துள்ளார். இவர் மன்னார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை சந்தியோகுவின் மகனுடன் அந்தக் கிராமத்தில் உள்ள சில இளைஞர்கள் தர்க்கத்தில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. அன்று இரவே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இரவு 9.45 மணியவில் நாட்டு வெடிகுண்டு வீசப்பட்டுள்ளது. சம்பவ இடத்துக்குச் சென்று பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். நேற்றுக் காலை தடயவியல் நிபுணத்துவப் பொலிஸார் மற்றும் மன்னார் பொலிஸ் நிலையப் பொலிஸார் தாக்குதல் நடத்தப்பட்ட வீட்டுக்குச் சென்று விரிவான விசாரணைகளை மேற்கொண்டனர். (எ-56)

# பரீட்சைகள் எப்போது? திங்களே அறிவிப்பு!

கொழும்பு, ஜூலை 19

கல்வி பொதுத்தராதர உயர்தர பரீட்சை மற்றும் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைகள் நடத்தப்படும் தினம் தொடர்பான அறிவித்தல் எதிர்வரும் திங்கட்கிழமை விடுக்கப்படவுள்ளது. கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ராஜாங்கனை மற்றும் வெலிக்கந்தை கல்வி வலயத்தில் உள்ள எந்தவொரு பாடசாலையும் ஓகஸ்ட் மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் திறக்கப்படமாட்டாது என கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (எ)

# கதிர்காமம் செல்லத் தடை

கொழும்பு, ஜூலை 19

கொரோனா வைரஸ் தொற்று அதிகரித்துள்ளதால் சுகாதார பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு கதிர்காம புனித பூமிக்குப் பொதுமக்கள் வருவது எதிர்வரும் 21ஆம் திகதி தொடக்கம் ஓகஸ்ட் மாதம் 4ஆம் திகதி வரையில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்று மொனராகலை மாவட்டச் செயலர் தெரிவித்துள்ளார்.

ஆடி வேல் விழாவில் பெரஹர நடைபெறும் முழுமையான கால எல்லையில் மக்களுக்கு பார்வையிடுவதற்கோ கலந்துகொள்வதற்கோ சந்தர்ப்பம் வழங்கப்படாது எனவும் மொனராகலை மாவட்ட செயலாளர் தெரிவித்துள்ளார்.


கதிர்காமம் புனித திருத்தலத்தின் வருடாந்த ஆடி வேல் விழா இந்த மாதம் 21ஆம் திகதி ஆரம்பமாகி ஓகஸ்ட் மாதம் 4ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது. சுகாதாரப் பிரிவின் வழிகாட்டி ஆலோசனைகளுக்கு அமைவாக மத அனுஷ்டானங்களுக்கு மாத்திரம் முக்கியத்து வம் வழங்கி இந்தமுறை கதிர்காமம் புனித திருத்தலத் தின் வருடாந்த ஆடி வேல் விழாவை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (எ)

# தோல்விப் பயத்தால்தான் எதிர்க்கட்சிகள் கொரோனாவை காரணம் காட்டுகின்றன

## மஹிந்த இப்படித் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 19

எதிர்க்கட்சிகள் தோல்விப் பயத்தில் கொரோனா வைரஸ் தொற்றைக் காரணம் காட்டி பொதுத்தேர்தலைத் தொடர்ந்து ஒத்திவைக்குமாறு உளறுகின்றன இவ்வாறு தெரிவித்தார் பிரதமர் மஹிந்த ராஜபக்ச.



வடக்கில் இராணுவப் பிரசன்னம், தெற்கில் கொரோனா. இதன் காரணமாக நீதியான தேர்தல் நடைபெறுவது சந்தேகம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தமை தொடர்பில் கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனாவால் பொதுத்தேர்தல் ஏற்கனவே இரண்டு தடவைகள் ஒத்திவைக்கப்பட்டிருந்தது. மூன்றாம் தடவையும் தேர்தலை ஒத்திவைக்க வேண்டிய கட்டாயம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு ஏற்படவில்லை. ஏனெனில், கொரோனாவின் தாக்கம் கட்டுப்படுத்தப்பட்டுவிட்டது. கொரோனாவின் தாக்கம் இம்மாதம் முடிவதற்குள் மீண்டும் அதிகரித்தால் தேர்தலை நடத்துவது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுதான் முடிவெடுக்க வேண்டும். ஆனால், அப்படியான நிலைமை ஏற்படாது. சுகாதாரப் பிரிவினரும் முப்படையினரும் களத்தில் முழுமூச்சுடன் செயற்படுகின்றார்கள். கொரோனாவின் இரண்டாவது அலை ஏற்பட்டுள்ளது என்று சிலர் பொய்யுரைக்கின்றார்கள். சுகாதார அமைச்சு இந்தக் கருத்துக்களை நிராகரித்துள்ளது. பாதுகாப்பு நிமித்தம் காரணமாகவே வடக்கு உட்பட நாடெங்கும் இராணுவத்தினர் நிலைநிறுத்தப்பட்டுள்ளனர். அவர்களினால் தேர்தல் பணிகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. தேர்தல் சுதந்திரமாக நடைபெறுவதற்காக எம்மாலான அனைத்து ஒத்துழைப்புகளையும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்கி வருகின்றோம். தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு எவ்வித அழுத்தங்களையும் நாம் பிரயோகிக்கவில்லை. இந்தநிலையில், எதிர்க்கட்சிகளின் போலியான குற்றச்சாட்டுக்களை அடியோடு நிராகரிக்கின்றோம் - என்றார். (ம-22)

# எவருக்கும் நாங்கள் அடிபணியமாட்டோம்

## ரணிலின் கருத்துக்கு தேசப்பிரிய பதிலடி

கொழும்பு, ஜூலை 19

தேர்தல்கள் ஆணைக்குழு சுயாதீனக் குழுவே. எனவே, நாம் சுதந்திரமாகவே இயங்குகின்றோம். எவருக்கும் அடிபணிய வேண்டிய அவசியம் எமக்கில்லை. அரசுக்குச் சார்பாகச் செயற்பட வேண்டிய கட்டாயமும் எமக்கில்லை இவ்வாறு தெரிவித்தார் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய.

வடக்கில் இராணுவப் பிரசன்னம், தெற்கில் கொரோனா. இதன் காரணமாக நீதியான தேர்தல் நடைபெறுவது சந்தேகம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தமை தொடர்பில் கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

எதிரணிகள் அரசை விமர்சிப்பதுபோல் எம்மையும் கண்டபடி விமர்கின்றார்கள். அது தொடர்பில் நாம் அலட்டிக்கொள்ள மாட்டோம். நாட்டின் தற்போதைய நிலைமையின் பிரகாரம் திட்டமிட்டபடி எதிர்வரும் ஓகட்ஸ் 5ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றே தீரும். தேர்தலை ஒத்திவைக்க வேண்டிய தேவை தற்போது ஏற்படவில்லை. சுகாதாரப் பாதுகாப்புடன் சுதந்திரமாக நீதியாக தேர்தல் நடைபெறும் என்பதை உறுதியளிக்கின்றேன். தேர்தல் நடவடிக்கைகளில் இராணுவத்தினரின் தலையீடு எதுவும் இருக்கவேமாட்டாது என்பதை மீண்டும் மீண்டும் தெரிவித்துக்கொள்கின்றேன் - என்றார். (ம-22)

# வன்னியில் தமிழ்க் கூட்டமைப்பு அதிக ஆசனங்களைப் பெறும்

## முன்னாள் போராளி நம்பிக்கை

மன்னார், ஜூலை 19

**இம்முறை நடக்க இருக்கின்ற தேர்தலிலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்னித் தேர்தல் தொகுதியிலே கடந்த வருடத்தைப் பார்க்கிலும் அதிகமான ஆசனங்களைப் பெறும் என்று முன்னாள் போராளி பிரேம் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாங்கள் அனைவரும் ஏன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரிக்க வேண்டும்? அதில் செல்வம் அடைக்கலநாதனையும், வினோநோகராதலிங்கத்தையும் நாங்கள் ஏன் வெற்றி பெறச் செய்ய வேண்டும்? மாற்று அணிகள் தமிழர்களின் ஒற்றுமையை இல்லாதொழிக்க வேண்டும் என்பதற்காக சிங்களத்தலைமைகளால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளனர். எங்களது வாக்குகளைச் சிதறடித்து எமது ஒற்றுமையை இல்லாதொழிப்பதே அவர்களது ஒரே நோக்கமாகும். அவர்கள் மக்களுக்குச் சொல்வது தமிழ்த் தேசியக்கூட்டமைப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த இவர்கள் இவ்வளவு நாள்களாக எங்களுடைய மக்களுக்காக எதைச் செய்தார்கள், தமிழ்ச் சமூகத்துக்காக எதைச் செய்தார்கள் என்பதாகும்.

2009 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் நாங்கள் இவ்விடத்திலே நிற்கின்றோம், எங்களுடைய சொந்த இடங்களில் இருக்கின்றோம் என்றால் அதற்கு காரணம் அவர்கள் தேசியத்தின் பால் கொண்ட கொள்கையில் தடம் மாறாது பயணிப்பதேயாகும். . அதை நாங்கள் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். எங்களுடைய தமிழ் அழிந்து கொண்டிருக்கின்றது. தமிழ் இல்லாமல் ஆக்கப்படுகின்றது. தமிழைக்காக்க வேண்டியது உங்களுக்கும் எனக்கும் கொடுக்கப்படுள்ள கடமையாகும். தமிழையும் தேசத்தையும் ஜனநாயக வழியில் காப்பாற்ற தமிழீழ விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை நாம் அனைவரும் ஆதரிக்க வேண்டிய ஒரு கடைப்பாட்டுக்குள் இருக்கின்றோம். நீண்டகாலமாக அரசியலிலே இருந்து தமிழ்த்தேசியக் கொள்கையில் இருந்து பின்வாங்காது பயணித்துக் கொண்டிருக்கின்ற தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதனைக் கண்டிப்பாக ஆதரிக்க வேண்டிய ஒரு கடப்பாடு நமக்குள்ளது.

அநேக முன்னாள் போராளிகள் மாற்றுக் கட்சிகள் , மாற்று அணிகளிலே பயணித்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் விரைவாகவே எம்முடன் இணைந்து பயணிப்பார்கள். தேசிய நீரோட்டதில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து பயணிக்கக்கூடிய ஒரு சந்தர்ப்பம் உருவாக வேண்டும் என செல்வம் அடைக்கலநாதன் கூறியிருந்தார். கண்டிப்பாக இம்முறை நடக்க இருக்கின்ற தேர்தலிலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்னி தேர்தல்தொகுதியிலேகடந்தவருடத்தைப் பார்க்கிலும் அதிகமான ஆசனங்களைப் பெற்று தடம் புரண்டுள்ள ஏனையவர்களையும் எங்களுடன் இணைத்து தமிழ்த்தேசியத்தைக் கட்டியெழுப்பும் - என்றார். (ஐ)

---

# எமது அரசியல் போராட்டத்தில் பெண்கள் மீண்டெழ வேண்டும்

## *என்கிறார் சசிகலா ரவிராஜ்*

கொடிகாமம், ஜூலை 19

தன்னம்பிக்கையற்ற நிலையில், பெண்கள் களைத்துவிட்டார்கள். அவர்கள் முன்னால் வர வேண்டும், இதற்கான அடியை நான் முன்னோக்கி வைத்துள்ளேன் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் திருமதி சசிகலா ரவிராஜ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் காணப்படுகின்ற அரசியல் ஓர் அரசியல் போராட்டமாக போய்க் கொண்டிருக்க வேண்டும். அரசியல் போராட்டம் என்பது எமது பெண்கள் மீண்டெழ வேண்டும். போராளிகள் அவர்களுடைய பல்வேறுபட்ட மனநிலைகள் சூழ்நிலைகள் எல்லாவற்றிலும் இருந்து மீண்டெழ வேண்டும். சரியான ஒரு சமூகக் கட்டமைப்புக்குள் கொண்டு வரப்பட வேண்டும். இவ்வாறான நிலைமைக்கு நாம் மாற வேண்டும். இனிமேலும் நாம் அந்தப் பழைய நிலையில் இருக்கக் கூடாது இதற்கான வழிமுறைகளைச் செய்வதற்காக நீங்கள் ஒரு சரியான அரசியல் கட்சியைத் தேர்ந்தெடுங்கள். அதாவது ஜனநாயகப் போராளிகள் கட்சி என்ற ஒன்று இருக்கிறது அந்தக் கட்சியை எமது கட்சி ஏற்றுக்கொண்டுள்ளது. போராளிகளின் துன்பங்களையும் பிரச்சினைகளையும் நன்றாக ஏற்றுக் கொண்டுள்ளது. எனவே உங்களுக்கு மட்டுமல்ல எல்லா சமூகங்களுக்கும் சார்ந்த ஒரு கட்சியாக எமது கட்சி காணப்படுகிறது. இந்த நிலையில் இந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த நாங்கள் உங்கள் முன் வந்திருக்கிறோம்

எமக்கு ஒரு தேவையுண்டு. எமது தேவை உங்களுக்கான தேவை. இந்த நிலையில் தென்மராட்சி பிரதேசத்தை பிரதிநிதித்துவப்படுத்த அதாவது முக்கியமாக எனது கணவர் செய்த செயல் திட்டங்களையும் அவருடைய வேலைத் திட்டங்களையும் அவர் உங்கள் மனதில் எவ்வாறு காணப்பட்டார். அவர் இன்றும் ஆத்மார்த்தமாக வாழ்கிறார் என்பதை முன்வைத்து நீண்ட இடைவெளியை நிரப்புவதற்காக இந்த தென்மராட்சியில் போட்டியிடுகின்றேன். இதற்கான அறிமுகம் எனது கணவர் அரசியலில் ஈடுபட்ட போது நான் பின்னுக்கு இருந்து செயற்பட முடிந்தது.

பெண்கள் பிரதிநிதியாக தமிழ் அரசுக் கட்சியின் ஒரே வேட்பாளராகக் களம் இறங்கியுள்ளேன் பெண்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகள் நிறையக் காணப்படுகின்றன வாழ்வாதாரப் பிரச்சினைகள் எனப் பல பெண் தலைமைத்துவக் குடும்பப் பிரச்சினைகள் நான் சந்திக்கும் பெண்கள் மிகவும் தன்னம்பிக்கை அற்ற நிலையில் அவர்களுக்குத் தேவையான விடயங்கள் ஒரு சிறு விடயத்திற்கு கூட நீண்ட முயற்சி எடுக்க வேண்டி இருக்கிறது. அவர்கள் மிகவும் களைப்படைந்து காணப்படுகிறார்கள். அவர்களுக்கு ஒரு தன்னம்பிக்கை வளர வேண்டும் - என்றார். (ப-159)

---

# மத அடிப்படைவாதிகளுடன் ஒருபோதும் கூட்டணி வைக்கோம்

## *உதய கம்மன்பில தெரிவிப்பு*

கொழும்பு, ஜூலை 19

புதிய அரசாங்கத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்காக மத அடிப்படைவாதிகளுடன் ஒருபோதும் கூட்டணி அமைத்துக் கொள்ளமாட்டோம் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார் தேசிய சுதந்திர முன்னணியின் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் எமது நாட்டில் புரையோடியுள்ள இஸ்லாமிய அடிப்படைவாதத்தைப் பகிரங்கப்படுத்தியது.

குண்டுத்தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் அப்போதைய அரசாங்கத்தால் பாதுகாக்கப்பட்டார்கள்.

எமது ஆட்சியில் இவர்கள் நிச்சயம் கைது செய்யபட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படுவார்கள்" எனவும் அவர் தெரிவித்தார். (ஐ)

---

# நல்லாட்சி அரசாங்கத்தை விடவும் சஜித் அரசில் நன்மை கிடைக்கும்

## ஜனகன் விநாயகமூர்த்தி நம்பிக்கை

கொழும்பு, ஜூலை 19

நல்லாட்சி அரசாங்கத்தை விடவும் , சஜித் பிரேமதாசவின் தலைமையிலான அரசாங்கத்தால் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பலநன்மைதரும்விடயங்களைச் செய்யமுடியும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் ஜனகன் விநாயகமூர்த்தி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாட்டு மக்கள் அரசாங்கத்தின் மீது கொண்டிருந்த நம்பிகையை இழந்துள்ளனர். இதனால் எதிர்வரும் பொதுத் தேர்தலில் சஜித் பிரேமாதசவின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள ஐக்கிய மக்கள் சக்திக்கே மக்கள் ஆதரவைப் பெற்றுக்கொடுக்க இருக்கின்றனர். இந்நிலையில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் எங்களால் 113 ஆசனங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை எமக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினதோ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினதோ ஆதரவு எமக்குத் தேவையில்லை. எமது கட்சியின் கொள்கைக்கமைய செயற்படுவதற்கு இணக்கம் தெரிவித்து நேர்மையாக செயற்பட கூடியவர்கள் எங்களுடன் இணைந்துகொள்ள விரும்பினால் அவர்களை இணைத்துக் கொண்டு செயற்படுவோம். தேர்தல் பிரசாரங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் மீண்டும் கொரோனா வைரஸ் பரவல் தொடர்பான அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளன என அரசாங்கம் தெரிவித்திருக்கின்றது.

அப்படி என்றால் அரசாங்கம் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லையா? இதனால்தான் அவர்களால் வைரஸ் பரவலை வெற்றி கொள்ள முடியாமல் போயுள்ளதா? என்ற கேள்வி எமக்குத் தோற்றம் பெற்றுள்ளது. நல்லாட்சி அரசாங்கத்தை விடவும், சஜித் பிரேமதாஸவின் தலைமையிலான அரசாங்கத்தால் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பல நன்மை தரும் விடயங்களைச் செய்யமுடியும். நல்லாட்சி அரசாங்கத்தில் மைத்திரிபால சிறிசேனவும், ரணில் விக்கிரமசிங்கவும் மாறுபட்ட வகையிலேயே செயற்பட்டிருந்தனர். இதனால்தான் அக்காலப்பகுதியில் முறையான திட்டங்கள் எதனையும் செயற்படுத்த முடியாமல் போனது - என்றார். (ஐ)




---

# ஐ.ம. சக்தி எதிர்க்கட்சி பதவியைக்கூட பெறாது

கொழும்பு, ஜூலை 19

ஐக்கிய மக்கள் சக்திக்கு பிரதான எதிர்க்கட்சி பதவியைக்கூட பெறமுடியாத நிலை ஏற்படும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

கொத்மலை பகுதியில் நேற்று மாலை நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தின் பின் ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

'குருணாகலை சம்பவம் தொடர்பில் எனக்கு தெரியாது. ஆனால், தொல்பொருள் பெறுமதிமிக்க இடமொன்று உடைக்கப்பட்டிருக்குமானால் அது தவறு ஐக்கிய தேசியக்கட்சி புது வழியை நோக்கி பயணிக்க முயற்சித்தாலும் அதற்கு கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஒருபோதும் இடமளிக்கமாட்டார். ஐக்கிய தேசியக் கட்சி இன்று இரண்டாக பிளவு பட்டுள்ளது. சஜித்துடன் 80 வீதமானோரும், ரணில் பக்கம் 20 வீதமானோரும் உள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியால் மீண்டெழ முடியாது. அதேபோல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட எதிர்க்கட்சிகள் பெறும் ஆசனங்களைவிட சஜித் அணி குறைவாகவே பெறும்.

பிரதான எதிர்க்கட்சி அந்தஸ்த்தை கூட பெறமுடியாமல் போகும். என்றார். (ஐ)

# கூட்டமைப்பின் கரங்களை பலப்படுத்துங்கள்

## அதன் வேட்பாளர் உதயகுமார் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜுலை 19

தமிழ் மக்களின் இருப்பு தொடர்ந்தும் பாதுகாக்கப்பட வேண்டுமாயின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கரங்களை மேலும் பலப்படுத்த வேண்டியது வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்களின் பொறுப்பு வாய்ந்த கடமையாகும் என்று கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் மாணிக்கம் உதயகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;

தமிழ் மக்களின் உரிமைகளுக்காக தொடர்ந்தும் குரல்கொடுத்து எமது மக்களின் இருப்பைப் பாதுகாத்து வருகின்ற ஒரேயொரு கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே. நடைபெற இருக்கின்ற நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் வடக்கு கிழக்கில் பல தமிழ் கட்சிகள் போட்டியிட்டாலும் த.தே.கூ தவிர்ந்த ஏனைய கட்சிகள் அனைத்துமே பேரினவாத கட்சிகளின் பங்காளி அல்லது ஆதரவுக் கட்சிகளாகவேதான் உள்ளமையைக் காணலாம் இதனைத் தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். தற்போதுள்ள அரச கட்சியானது வடக்கு- கிழக்கு வாழ் தமிழ் மக்களை மேலும் அடக்கி ஒடுக்க நினைக்கின்றது. இதன் ஒரு செயற்பாடுதான் அண்மையில் கிழக்கில் உருவாக்கப்பட்டுள்ள தொல்பொருள் ஆய்வுக்குப் பொறுப்பான ஜனாதிபதி ஆணைக்குழு. இவ்வாணைக் குழுவில் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர்கூட இடம்பெறவில்லை. பெரும்பாண்மை இனத்தைப் பிரதிபலிக்கின்ற பௌத்த மதம் சார்ந்த இராணுவ மயமாக்கப்பட்ட ஓர் ஆணைக்குழுவாகவேதான் இது காணப்படுகின்றது. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பெரும் எதிர்ப்புக் காரணமாக தனது இத் திட்டங்களை பூரணமாக நடைமுறைப்படுத்துவதற்கு முடியாமல் உள்ளதனால் த.தே.கூட்டமைப்பினை எப்படியாவது பலவீனப்படுத்த வேண்டும் என பல சூழ்ச்சிகளை இலங்கை அரசு மேற்கொண்டாலும் அவை பலனளிக்கவில்லை என்றே கூறலாம் - என்றார். (ப)




# முஸ்லிம் மக்களை ஏமாற்றும் ஹக்கீமின் பம்மாத்து அரசியல்

## சீறிச் சினக்கிறார் சேகுதாவூத்

**மட்டக்களப்பு, ஜூலை 19**

**முஸ்லிம் அரசியல் தலைவர்கள் செய்த மோசமான உழைப்பு அரசியல், வஞ்சனை அரசியல், முஸ்லிம் சமூகத்தை விற்றுப் பிழைக்கும் அரசியல், முஸ்லிம் சமூகத்தைக் காட்டிக் கொடுக்கும் அரசியல், பாதுகாப்பை கேள்விக்குட்படுத்துகின்ற அரசியல் காரணமாக எமது சமூகம் இன்று மோசமான சூழ்நிலையில் உள்ளது என ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் தவிசாளரும், மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளருமான பசீர் சேதாவூத் தெரித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

ரவூப் ஹக்கீம் தேர்தல் காலங்களில் மகிந்த அரசாங்கத்திற்கும், குடும்பத்திற்கும் அவதூறாகப் பேசுவார், பின்னர் அவர்கள் ஆட்சி அமைத்ததும் வந்து ஒட்டிக்கொண்டு அமைச்சுப் பதவி பெற்றுக் கொள்ளையடிப்பார், அதனை வைத்து உழைப்பார். அடுத்த தேர்தல் வந்தததும் வெளிநாட்டவர்கள் பணம் வழங்குவார்கள் அதனை வீட்டில் பதுக்கி வைத்து விட்டு முஸ்லிம் சமூகத்தை ஏமாற்றப் புறப்பட்டு அவர்களுக்கெதிராக வேலை செய்வார். மீண்டும் மகிந்த ராஜபக்ச ஆட்சியமைப்பார்கள், மீண்டும் அவரும் போய்ச் சேர்ந்து விடுவார்.

இடையில் பிரச்சினைகள், வரவு செலவுத் திட்டம் வரும் போது மஹிந்த அரசைத் தோற்கடிப்பதற்கு வெளிநாட்டவர்களிடமிருந்து பெறப்படும் பணத்தைப் பெற்று இடையிலே மாறுவார். திரும்ப வருவார். இவ்வாறு முஸ்லிம் சமூகத்தினுடைய அரசியலை மாத்திரமல்ல. முஸ்லிம்களுடைய பாதுகாப்பையும் கேள்விக்கு உட்படுத்தியுள்ளார். முஸ்லிம் சமூகம் இன்று இருக்கின்ற நிலைமைக்குக் காரணம் இவர்களுடைய பம்மாத்து அரசியல், உழைக்கும் அரசியல் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

உயிர்த்த ஞாயிற்று தாக்குதல் மட்டுமல்ல இன்று முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினை. முஸ்லிம்களின் பாதுகாப்பு, வாழ்க்கையில் எதிர்நோக்கும் பிரச்சினை, இஸ்லாமிய வழிபாடுகளில் எதிர்நோக்கும் பிரச்சினை, முஸ்லிம் வியாபாரிகள் இந்த நாட்டில் எதிர்நோக்கும் பிரச்சினை என்பவற்றுக்குக் காரணம் முஸ்லிம் தலைவர்களின் எண்ணங்களை கேள்விக்குறியாக்கியது, எங்களை காட்டிக் கொடுத்து முஸ்லிம் சமூகத்தை விற்றுப் பிழைத்ததை யாரும் மறந்து விட முடியாது- என்றார்..

(ப-150)

# அரசு சார்பு கட்சிகளுடன் இணைவோம்

## ஐ.ச.கூ. தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜுலை, 19

முஸ்லிம்கள் ஒற்றுமையாக வாழ வேண்டுமாக இருந்தால் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படக் கூடிய கட்சிகளுடன் நாங்கள் செயற்பட வேண்டும். அவ்வாறு செயற்படுவதன் மூலம் எங்களது பிரச்சினைகள் மற்றும் தீர்வுகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் கலாநிதி எம்.பி.முஸம்மில் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

கடந்த காலங்களைப் போன்று நாம் மக்களை ஏமாற்ற முடியாது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்கு முஸ்லிம் மக்கள் மற்றும் தமிழ் மக்கள் மீது எந்த கோபமும், சந்தேகமும் கிடையாது. முஸ்லிம் தலைவர்களிடத்தில் மாத்திரம் வெறுப்பாக உள்ளனர்.

முஸ்லிம்கள் ஒற்றுமையாக வாழ வேண்டுமாக இருந்தால் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படக் கூடிய கட்சிகளுடன் இணைந்து நாங்கள் செயற்படவேண்டும். அவ்வாறு செயற்படுவதன் மூலம் எங்களது பிரச்சி னைகள் மற்றும் தீர்வுகளைப் பெற்றுக் கொள்ள முடியும் - என்றார். (ப-150)

# மட்டு.நகரில் அரசின் செல்லப்பிள்ளைகள்

## தமிழ் பிரதிநிதித்துவத்தைச் சூறையாட களத்தில் என்கிறார் கமலநேசன்

மட்டக்களப்பு, ஜுலை 19

மட்டக்களப்பு மாவட்டத்தில் நான்கு தமிழ்ப் பிரதிநிதித்துவ ஆசனத்தை இல்லாமல் செய்வதற்கு தற்போதைய அரசாங்கத்தின் செல்லப்பிள்ளைகள் களமிறங்கப்பட்டுள்ளனர் என வாழைச்சேனைப் பிரதேச சபை உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கோறளைப்பற்றுக் கிளைச் செயலாளருமான க.கமலநேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

வடக்குகிழக்கில்தமிழ்த்தேசியக்கூட்டமைப்பை உடைக்க வேண்டும் என்பதற்காக தற்போதைய அரசாங்கத்தின் உதவி மூலம் சில கட்சிகளும், பல சுயேச்சைக் குழுக்களும் களமிறங்கப்பட்டுள்ளன. ஆனால் இவர்களால் எந்தவித ஆசனத்தையும் பெறமுடியாது. மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தற்கால அரசியல் சூழ்நிலையில் நான்கு ஆசனங்கள் பெறுவதற்குரிய வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன. ஆனால் அதனைப் பிரித்து மாற்றுச் சமூகத்துக்கு வழங்கும் பாணியில் எமது தமிழ்ப் பிரதிநிதிகள் களமிறங்கியுள்ளனர்.

இந்த விடயமானது எமது சமூகத்துக்குச் செய்யும் பெரும் துரோகச் செயலாகவே நாம் கருத வேண்டியுள்ளது. மாறாக எஞ்சி இருக்கின்ற தமிழ்த் தேசிய வாதிகளையும் எமது கட்சியானதமிழ்த்தேசியக்கூட்டமைப்பையும், இல்லாமல் செய்வதற்கும் தமிழர் தாயக நிலங்களை ஆக்கிரமிப்புச் செய்து கிழக்குப் பகுதியில் தொல்பொருள் என்ற பெயரில் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை மேலோங்கச் செய்வதற்காகவுமே எமது மாவட்டத்திலுள்ள அரசாங்கத்தின் செல்லப்பிள்ளைகள் ஒப்பந்தம் செய்து கொண்டு வந்துள்ளார்கள் என்பதை மக்கள் மறந்து விடக்கூடாது-என்றார். (ப)

# மாவீரரை வைத்து பலர் அரசியல்!

## பிள்ளையான் ஆதரவு அணி கூறுகிறது

மட்டக்களப்பு, ஜுலை 19

கடந்த காலங்களில் தமிழ் மக்களுக்காக உயிரைத் தியாகம் செய்த மாவீரர்களையும். மக்களையும் வைத்து பலர் அரசியல் செய்கின்றனர். இழக்கப்பட்ட உயிர்களை வைத்து தமது சொகுசு வாழ்க்கையை மேற்கொண்டு வருகின்றவர்கள், தமிழர்களுக்கான இருப்பையோ, உரிமையையோ, யாரும் பெற்றுத் தருவதாக இல்லை. இந்நிலையில் ஏனையோர் எமது நிலங்களைச் சூறையாட வருகின்றார்கள். இதனைத் தடுப்பதற்கு இளைஞர்கள் ஒன்றுபட வேண்டும் என்று நாம் தமிழர் சமூக சேவை ஒன்றிணையத்தின் நிர்வாக உறுப்பினர் கணேசமூர்த்தி விசாந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இழக்கப்பட்ட அபிவிருத்திகளையும், எமது தனித்துவத்தையும் மீட்டெடுப்பதற்காக நடைபெற இருக்கின்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியை ஆதரிப்பதற்காக நாங்கள் செயற்படவுள்ளோம். எமது அமைப்பு இதுவரை காலமும் எதுவித அரசியல் சாயமும் இல்லாமல் சமூக சேவைகளை மேற்கொண்டு வந்தது. அதற்கு அரசியல் பலம் இல்லாமல் இருந்ததும் ஒரு காரணமாகும். இந்நிலைமையினைக் கருத்திற் கொண்டுதான் நாங்கள் மேற்கொள்ளும் சமூக சேவைக்கு அப்பால் அரசியல் ரீதியாக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியை ஆதரிப்பதற்குத் தீர்மானித்துள்ளோம். தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் சிவனேசதுரை சந்திரகாந்தன் கிழக்கில் முதலமைச்சராக இருந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி கடந்த 5 வருட காலத்தினுள் இல்லாமல் போயுள்ளது. அக்காலத்தில் எமது தமிழ் மக்கள் இருப்பையும், காணிகளையும் இழந்துள்ளார்கள். இதற்கு தமிழ் மக்கள் மத்தியில் சரியான தலைமைத்துவம் இன்மையே காரணமாகும். எமது நாம் தமிழர் சமூக சேவை ஒன்றிணையத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 2000 இளைஞர்கள் ஒன்று சேர்ந்து செயற்பட்டு வருகின்றோம். எம்முடன் ஏனைய இளைஞர்களும் ஒன்றிணைந்து செயற்பட்டு சிவனேசதுரை சந்திரகாந்தனை இம்முறை நாடாளுமன்றம் அனுப்பி தமிழர்களின் அபிவிருத்தியையும், இருப்பையும் வென்றெடுக்க வேண்டும். என்பதுவே எமது வேண்டுகோளாகும் - என்றார். (ப)

# பிரசாரக் கூட்டங்களின்போது பின்பற்றவேண்டிய சுகாதார வழிமுறைகள்

## வெளியானது வர்த்தமானி

**கொழும்பு, ஜூலை 19**

**தேர்தல் பிரசார கூட்டங்களின் போதும் வாக்கெடுப்பு நிலையங்களிலும் வாக்கெண்ணும் நிலையங்களிலும் பின்பற்றப்பட வேண்டிய சுகாதார வழிமுறைகளை உள்ளடக்கிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நள்ளிரவு சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சியினால் வெளியிடப்பட்டுள்ளது.**

1973/40 ஆம் இலக்கத்தின் 222 ஆம் அத்தியாயமான தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு தொடர்பான கட்டளைச் சட்டத்தின் கீழ் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது;

**கூட்ட ஒழுங்கமைப்பாளர் கவனிக்க வேண்டியவை**

ஏற்பாடு செய்யப்படும் கூட்டங்களில் கலந்து கொள்வோரது எண்ணிக்கை 300 ஐ விட அதிகரிக்கப்படாமலிருக்க வேண்டும். எனினும் கூட்டத்திற்கு குறித்தவொரு அரசியல் கட்சியின் தலைவர் அல்லது சுயாதீனக் குழுவின் தலைவர் கலந்து கொள்வாராயின் அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வோரின் எண்ணிக்கை 500ஐ விட அதிகரிக்கக் கூடாது.

கூட்டத்தில் கலந்து கொள்பவர்களது பெயர் , அடையாள அட்டை இலக்கம் மற்றும் தொடர்பு விவரங்கள் பதிவு செய்யப்படுதல் அத்தியாவசியமாகும். அத்தோடு அவர்களுக்கு கைகளைச் சுத்தமாகக் கழுவுதவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்க வேண்டும். கூட்டத்திற்கு தலைமை வகிப்பவர்கள் உட்பட ஏனையோருக்கிடையில் ஒரு மீற்றர் இடைவெளி பேணப்பட வேண்டும். மேலும் கூட்டங்களில் கலந்து கொள்ளும் அனைவரும் முகக்கவசம் அணிந்திருத்தல் அத்தியாவசியமானதாகும். அங்கு பயன்படுத்தப்படும் ஒலிபெருக்கி சாதனங்கள் பாவனையின் பின்னர் உடனடியாக தொற்று நீக்கப்பட வேண்டும்.

**வீடுகளுக்குச் சென்று பிரசாரம் செய்தல்**

வேட்பாளர்கள் ஆதரவாளர்களின் வீடுகளுக்குச் சென்று துண்டுப் பிரசுரங்களை அல்லது கையேடுகளை வழங்கச் செல்லும் போது செல்பவர்களின் எண்ணிக்கை 5 ஆக மட்டுப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். இவ்வாறு செல்பவர்கள் முகக்கவசம் அணிந்திருத்தல் கட்டாயமானதாகும் என்பதோடு தமக்கிடையிலும் பிரசாரங்களுக்குச் செல்லும் வீடுகளில் வசிப்பவர்களுக்கிடையிலும் ஒரு மீற்றருக்கு குறையாத சமூக இடைவெளி பேணப்பட வேண்டும். வீட்டினுள் இருப்பவர்கள் துண்டுப் பிரசுரங்களை விநியோகிப்பதற்கு முன்னர் தமது கைகளை கிருமி நீக்கம் செய்தல் வேண்டும்.

**வேட்பாளர் கவனத்தில் கொள்ள வேண்டியவை**

வேட்பாளர்கள் ஒவ்வொருவரும் தேர்தல் அலுவலகத்திற்கு அல்லது அதனை அண்மித்த பகுதிகளுக்குச் செல்லும் போது கைகளைச் சுத்தமாகக் கழுவுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் அவசியமாகும். அத்தோடு சமூக இடைவெளியைப் பேணுதல் , முகக்கவசம் அணிந்திருத்தல் என்பனவும் கட்டாயம் பின்பற்றப்பட வேண்டும்.

குறிப்பாக இவ்வாறான அலுவலகங்களில் மதுபானம் கொண்டு செல்லப்படாதிருப்பதற்கும் உட்கொள்ளப்படாதிருப்பதற்குமான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். அலுவலக வளாகத்தினுள் விளையாட்டுக்கள் அல்லது திறனாட்டங்கள் எவற்றையும் விளையாடாதிருப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

**வாக்கெடுப்பு , வாக்கெண்ணும் நிலையங்களில் கவனத்தில் கொள்ள வேண்டியவை**

வாக்கெடுப்பு நிலையத்திலும் அதன் வளைவுகளிலும், வாக்கெண்ணும் நிலையங்களிலும் அதன் வளவுகளிலும் தேர்தல் ஆணைக்குழு அலுவலகத்திலும் அதன் வளவுகளிலும் உள்ள ஒவ்வொருவரும் அவற்றினுள் பிரவேசிப்பதற்கு முன்னர் கைகளைச் சவர்க்காரத்தினால் அல்லது கிருமி நீக்கியினால் சுத்தமாகக் கழுவ வேண்டும். நபர்களுக்கிடையே ஒரு மீற்றருக்குக் குறையாத சமூக இடைவெளி பேணப்பட வேண்டும். அனைத்து சந்தர்ப்பங்களிலும் முகக் கவசம் அணிய வேண்டும்- என்றுள்ளது. (ப)




# விபுலாநந்தருக்கு குல்லா அணிந்து அவரையும் ஹாஜியார் என்பார்கள்

## வவுனியாவில் கருணா தெரிவிப்பு

வவுனியா, ஜூலை 19

எதிர்வரும் தேர்தலில் தமிழர்கள் தவறிழைப்பார்களாக இருந்தால் காந்திசிலைக்கும், விபுலாநந்தர் சிலைக்கும் குல்லா அணிந்துவிட்டு அவர்களும் "ஹாஜியார்" என்பார்கள் என்று முன்னாள் பிரதி அமைச்சரும் தமிழர் ஐக்கிய சுதந்திர முண்ணயின் தலைவருமான கருணா என்று அழைக்கபடும் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரித்தார்.

வவுனியாவிற்கு நேற்று வந்த அவர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

வன்னியில் முஸ்லிம் அரசியல் தலைவர்களால் திட்டமிட்ட வகையில் தமிழ் மக்கள் ஒடுக்கப்படுகின்றார்கள். காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தடுப்பதற்கு வன்னியில் உள்ள தமிழ் மக்கள் உணர்வுடன் செயற்பட்டு எம்மை ஆதரிக்கவேண்டும் என்று பணிவாகக் கேட்டுக்கொள்கின்றேன். எந்த இனத்தைச் சார்ந்தவர்கள் என்றாலும் காணி இல்லாத மக்களிற்கு காணிகள் வழங்கப்படவேண்டும். மஹிந்த சிந்தனையில் ரந்திம என்ற ஒப்பந்தம் அதற்காகவே உருவாக்கப்பட்டது. எனினும் அத்து மீறி வருகின்ற குடியேற்றங்களை நாம் ஒருபோதும் வரவேற்கப்போவதில்லை. முஸ்லிம் மக்களுக்கு எதிரானவர்கள் நாம் அல்லர். ஆனால் முஸ்லிம் அரசியல்வாதிகள் தீவிரவாதப் போக்கிலே தமிழர்களைத் திட்டமிட்டு ஓரம்கட்டும் வேலைகளில் ஈடுபடுகின்றனர். அதாவுல்லா அண்மையில் கூறினார் தமிழ்த் தலைவர்கள் அரசியலைக் கற்றுக்கொள்வதானால் அவரின் பின்னால் சில வருடங்கள் பைல் தூக்கவேண்டுமாம். அவருக்கு என்ன அருகதை இருக்கின்றது அதனைச் சொல்வதற்கு. அதேபோல வடகிழக்கு இணைந்தால் இரத்த ஆறு ஓடும் என்று ஹிஸ்புல்லா கூறுகின்றார். அதனை ஓட வைப்பதற்கு அவர் யார் . அதேபோல ரிஷாத் பதியுதீன் இங்கு தீவிரவாதச் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தார். கையாலாகாத தமிழ்த் தலைவர்கள் இருந்தால் தான் தங்களது விடயங்களைச் சாதிக்கலாம் என்பது முஸ்லிம் தலைவர்களின் நீண்டகாலத் திட்டம். சிவப்பு குல்லா அணிந்த அரசியல்வாதி இராவணன் முஸ்லிம் என்று ஓர் அறிக்கை விட்டிருந்தார். இது ஒரு வேடிக்கையான விடயம். எனவே நாம் தவறிழைப்போமாக இருந்தால் காந்திசிலைக்கும் விபுலாநந்தர் சிலைக்கும் குல்லா போட்டுவிட்டு அவர்கள் ஹாஜியார் எனச் சொல்வார்கள் - என்றார். (ப-110)

# 'சுபீட்சமான எதிர்காலம்' திட்டம் புதிய அரசாங்கத்தில் செயற்படும்

## பிரதமர் மஹிந்த தெரிவிப்பு

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் 'சுபீட்சமான எதிர்காலம்" கொள்கைத் திட்டம் புதிய அரசாங்கத்தில் செயற்படுத்தவுள்ளதால் பொதுஜன பெரமுன பொதுத்தேர்தலுக்கான கொள்கைப் பிரகடனத்தை வெளியிடவில்லை. துறைசார் நிபுணர்கள் ஊடாகவே சுபீட்சமான எதிர்காலம் கொள்கைத் திட்டம் உருவாக்கப்பட்டது என பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

துறைசார் நிபுணர்களால், உருவாக்கப்பட்ட சுபீட்சமான எதிர்காலக் கொள்கைத் திட்டத்தை புதிய அரசாங்கத்தில் முழுமையாக நடைமுறைப்படுத்துவதே எமது பிரதான நோக்கமாகும். ஜனாதிபதியின் கொள்கைத் திட்டங்களை ஏற்றுக் கொண்டு 69 இலட்சம் மக்கள் அவருக்கு ஆதரவு வழங்கினார்கள். அவரது கொள்கைத் திட்டங்களை முழுமையாகச் செயற்படுத்த இடம்பெறவுள்ள பொதுத்தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவைப் பெறுவது அவசியமாகும். ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் பெரமுன வெளியிட்ட சுபீட்சமான எதிர்காலக் கொள்கைத் திட்டம் மக்கள் மத்தியில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதன் காரணமாகவே இம்முறை பொதுத்தேர்தலுக்கான கொள்கைப் பிரகடனத்தை வெளியிடவில்லை. வகுக்கப்படும் கொள்கைகள் உறுதியாக இருந்தால் மாத்திரமே அரச நிர்வாகத்தை முறையாக முன்னெடுத்துச் செல்ல முடியும். அடிக்கடி கொள்கைத்திட்டங்கள் மாற்றமடையும்போது அது அரசாங்கத்தின் பலவீனத்தை உணர்த்தும். வீழ்ச்சியடைந்துள்ள துறைகளை மீளக் கட்டியெழுப்பும் வழிமுறைகளை அரசியலுக்கு அப்பாற் சென்று துறைசார் நிபுணர்களின் ஆலோசனைகளுக்கு அமைய வகுத்துள்ளோம் என்றார். (ப)

# கொரோனாத் தொற்று நோயாளிகளின் எண்ணிக்கையை மறைக்கிறது அரசு

## முன்னாள் எம்.பி. சமன் ரத்னபிரிய குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 19

ஸ்ரீலங்கா அரசாங்கம் கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கையை மறைத்து வருவதுடன் தேவையான அளவுக்கு பரிசோதனைகளை நடத்துவதில்லை. ஆபத்தான நாடுகள் பட்டியலில் எமது நாடும் இடம்பிடித்துள்ளது என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தாதியர் தொழிற்சங்கச் செயற்பாட்டாளருமான சமன் ரத்னபிரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஸ்ரீலங்கா அரசாங்கம் சில பிரதேசங்களை திருட்டுத்தனமாக மூடி விட்டு கொரோனா வைரஸ் பரவலின் இரண்டாவது அலையை மறைக்க முயற்சித்து வருகிறது. கொரோனா ஒழிக்கப்படுமாயின் அதனை நாங்கள் மிகவும் விரும்புவோம். இதனை ஒழிக்க முடியுமா? என்ற விடயம் சம்பந்தமாகப் பிரச்சினை உள்ளது. உலக சுகாதார அமைப்பின் அறிக்கைகளுக்கு அமைய கொரோனா வைரஸ் பரவலைச் சிறப்பாகக் கட்டுப்படுத்திய நாடுகள் பட்டியலில் இலங்கை இல்லை. எனினும் கொரோனாவைக் கட்டுப்படுத்திய சிறந்த நாடுகள் பட்டியலில் இலங்கை இருப்பதாக அதன் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி கூறுகிறார். பிரித்தானியா பயணக் கட்டுப்பாடுகளை நீக்கிய நாடுகள் பட்டியலில் ஸ்ரீலங்கா இல்லை. அடுத்ததாக அமெரிக்கா ஆபத்தான நாடுகள் பட்டியலை வெளியிட்டது. அந்தப் பட்டியலில் ஸ்ரீலங்காவும் உள்ளது. இதிலும் பரஸ்பர முரண்பாடுகள் உள்ளன. யார் இந்த முரண்பாட்டைத்தீர்ப்பது என்ற பிரச்சினை இருக்கின்றது. தயவு செய்து இதனை தெளிவுபடுத்துமாறு அரசாங்கத்தைக் கேட்கிறோம். இதனை தெளிவுப்படுத்துமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கோருகிறோம்- என்றார். (ப)

**O/L அல்லது A/L க்கு பின் விசேட புலமைப்பரிசிலுடன் உங்கள் உயர்கல்வியை வெளிநாடுகளில் தொடருங்கள்**

**இலங்கை மருத்துவ சபையினால் (SLMC)**

**அங்கீகரிக்கப்பட்ட உலகின் தலைசிறந்த பல்கலைக்கழகங்களில் மருத்துவ மேற்படிப்பை தொடருங்கள்.**

**(AUSTRALIA, UK, USA, CANADA, BELARUS, ARMENIA, RUSSIA, MALAYSIA, CHINA)**

**100% பல்கலைக்கழக நுழைவு உத்தரவாதம்**

**கனடா - பிரான்ஸ் - ஆஸ்திரேலியா**

- O/L & A/L க்கு பின் மேற்படிப்பு!
- 100% வேலைவாய்ப்பு உத்தரவாதம் (3 வருடங்கள்)
- நிரந்தர குடியுரிமைக்கு (PR) விண்ணப்பிக்கும் வாய்ப்பு
- IELTS தேவை இல்லை.

விசா உத்தரவாதம் 100%

மேலதிக விபரங்களுக்கு
கல்வி ஆலோசகர்

**Dr. Harry Prasad 0777 30 10 80**

ANC Future Center - Jaffna Branch | No. 14, Point Pedro Road, Jaffna.

www.medicalplacements.org






# பெறுமதிமிக்க இடங்களை விற்பனை செய்து பணத்தைக் கைப்பற்றுவதே அரசின் நோக்கம்

## பாட்டலி சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு

**கொழும்பு, ஜூலை 19**

**தற்போதைய அரசாங்கம் நாட்டின் பெறுமதிமிக்க இடங்களை விற்பனை செய்து அதில் கிடைக்கப்பெறும் பணத்தைக் கைப்பற்றுவதையே நோக்காகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது என ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.**



ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

குருநாகலில் புராதன சிறப்புமிக்க மண்டபம் ஒன்று இடிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்ட போதிலும் எவ்வித நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லை. இச்சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களுக்கு எதிராக உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும். பிரதமர் மஹிந்த ராஜபக் ஷவின் கடந்தகால ஆட்சியின் போது கொழும்பு பகுதிகளில் காணப்பட்ட சிறப்புமிக்க இடங்கள் விற்பனை செய்யப்பட்டன. அந்த இடங்களில் ஹோட்டல்களும் கட்டப்பட்டுள்ளன. தற்போது இந்த நிலைமை குருநாகலையிலும் காணப்படு கிறது. இதுதொடர்பில் பிரதமர் மற்றும் ஜனாதிபதி ஆகியோர் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இதே வேளை இதற்கு எதிராக அஸ்கிரிய மல்வத்து பீடத்து மாநாயக்க தேரர்கள் தங்களது கருத்தை தெரிவிப்பதுடன். சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்திடம் வலியுறுத்த வேண்டும். எமது ஆட்சிக் காலத்திலே இவ்வாறு வரலாற்றுச் சிறப்புமிக்க சமயத் தலங்கள் மற்றும் விகாரைகளின் வளர்ச்சிக்காக பெரும் பங்காற்றியுள்ளோம்.

எங்களைக் கைதுசெய்வதற்கு குறுகிய காலத்திற்குள் நடவடிக்கை எடுத்த அரசாங்கம். புராதன சிறப்பு மிக்க கட்டிடமொன்றை இடித்துள்ள நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமல் இருப்பது ஏன்? எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

# விபத்தில் ஒருவர் காயம்

வவுனியா, ஜூலை 19

வவுனியா மணிக்கூட்டுச் சந்தியடியில் நேற்றுமுன்தினம் இரவு 9மணியளவில் நிகழ்ந்த விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார். வவுனியா ரயில் நிலைய வீதியூடாக வவுனியா நகர் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் மணிக்கூட்டு சந்தியூடாக கண்டி வீதிக்கு ஏற முற்பட்ட சமயத்தில் கண்டி வீதியூடாக பயணித்த முச்சக்கரவண்டியுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

மோட்டார் சைக்கிளில் பயணித்தவரே (வயது-28) காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ரி1-18)

# வாகன விபத்தில் ஒருவர் பலி

மட்டக்களப்பு, ஜூலை 19

மட்டக்களப்பு கொழும்பு பிரதான வீதி மாவடிச்சேனைப் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார் என வாழைச்சேனைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தெரிவித்தார். மாவடிச்சேனை பாடசாலை வீதியில் வசிக்கும் நாஸர் நஜாத் (வயது 19) என்ற இளைஞரே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார் எனத் தெரிய வந்துள்ளது.

இவ் விபத்து தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

இந்த இளைஞர் மாவடிச்சேனை பாடசாலை வீதியிலிருந்து பிரதான வீதிக்கு மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த போது மட்டக்களப்பு பகுதியில் இருந்து பொலநறு வைப் பகுதிக்குச் சென்று கொண்டிருந்த கனரக வாகனத்தில் மோதுண்டே உயிரிழந்துள்ளார் என வாழைச்சேனைப் பொலிஸார் தெரி வித்துள்ளனர். (ரி2- 150)

# 2ஆவது அலையை தடுப்பதற்கு பரிந்துரைகள்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் முன்வைப்பு

கொழும்பு, ஜூலை 19

கொவிட்19 இரண்டாவது அலையைத் தடுப்பதற்கு பின்பற்ற வேண்டிய விடயங்கள் தொடர்பில் பரிந்துரைகளை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் முன்வைத்துள்ளது.

அந்தப் பரிந்துரைகளாவன:

நோயாளிகளுடன் தொடர்புபட்டவர்களை எதுவித தவறுகளும் இன்றி இனங்காணும் பொருட்டு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஊழியர்களையும் இராணுவ புலனாய்வு உறுப்பினர்களையும் வினைத்திறனாகப் பயன்படுத்துதல் வேண்டும்.

நாளொன்றுக்கான பி.சி.ஆர். பரிசோதனைகளின் அளவை அதிகரிப்பதோடு நோயாளர்களை மிகத்துரிதமாக பரிசோதனை செய்வதோடு அடிக்கடி பி.சி.ஆர். புரிசோதனைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

நோயாளிகள் இனங்கானப்படும் பிரதேசங்களை அறிந்து அவர்கள் வசிக்கும் பகுதிகளுக்கு வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்காக அப்பகுதிகளை முடக்குதல்.

முழு நாடும் உள்ளடங்கும் வகையில் விஞ்ஞானபூர்வமான பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுத்து இலங்கையில் நோயின் பரம்பலை அறிந்து தெளிவூட்டுதல்.

கடற்படை முகாம் மற்றும் கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் குழுக்களாக உருவாகியுள்ள நோயாளிகளின் மூலம் நாம் கற்றுக்கொள்ளும் பாடத்தினூடாக ஆபத்தான பகுதியில் உள்ள வேலைத்தளங்களில் வேலையாள்களைப் பகுதியாக பிரித்துப் பயன்படுத்துவதன் ஊடாக குழுக்களாக நோயாளிகள் உருவாகுவதைத் தவிர்த்தல் ஆகிய பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. (ரி1)

# விபத்தில் மயக்கமடைந்த லண்டன் வாசி உயிரிழப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 19

தாயாரைப் பார்ப்பதற்காக லண்டனில் இருந்து வந்த நபர் விபத்தில் சிக்கி மயக்கமடைந்தார். அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

உரும்பிராய் கிழக்கைத் தற்காலிகமாகக் கொண்ட ஜெகதேவன் கீதாமோகன் (வயது 49) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

லண்டனில் இருந்து ஜனவரி மாதம் வருகை தந்த நபர், கொரோனா காரணமாக லண்டன் செல்ல முடியாது இருந்தார்.

கடந்த 3 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இருந்து பலாலி நோக்கி முச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டிருந்த போது, உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு அண்மித்த பகுதியில் இ.போ.ச பஸ்ஸுடன் ஏற்பட்ட விபத்தில் மயக்கமடைந்தார். அவர் யாழ்.போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்ற நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-26)

### மத்திய மாகாணத்தில் இடைநிறுத்தப்பட்ட

# தேயிலைத் தொழிற்சாலைகளின் உற்பத்தி நடவடிக்கைகளை மீளவும் ஆரம்பிக்குக!

## பிரதமர் மஹிந்த ஆலோசனை

கொழும்பு, ஜூலை 19

மத்திய மாகாணத்தில் உற்பத்தியை நிறுத்தியுள்ள தேயிலைத் தொழிற்சாலைகள் தொடர்பில் உரிய சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து ஒரு வார காலத்துக்குள் அந்த தொழிற்சாலைகளின் உற்பத்தியை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக் ஷ தேயிலை சபைக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். 13 தேயிலைத் தொழிற்சாலைகளின் உற்பத்திகளை நிறுத்துவது குறித்து எடுக்கப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பில் வழங்கப்படக்கூடிய தீர்வு தொடர்பில் கலந்துரையாடும் போது நேற்றுமுன்தினம் முற்பகல் அலரிமாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலொன்றின்போதே பிரதமர் இவ்வாறு ஆலோசனை வழங்கினார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவ தாவது:

உரிய சோதனையின்றி மத்திய மாகா ணத்தில் 13 தேயிலைத் தொழிற்சாலை களின் உற்பத்தியை நிறுத்துவதற்கு தேயிலைச் சபை நடவடிக்கை எடுத்துள்ளமையால் சுமார் ஒரு இலட்சம் பேர் வரையிலானோர் இதுவரையில் கடும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

இதனால் உரிய சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து அந்தத் தொழிற்சாலைகளின் உற்பத்தியை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு மத்திய மாகாண தேயிலை தொழிலாளர்கள் இதன்போது பிரதமரிடம் கோரிக்கை விடுத்தனர்.

குறித்த தேயிலைத் தொழிற்சாலைகள் தொடர்பில் தனித்தனியாக சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து விரைவில் தொழிற்சாலைகளின் உற்பத்திப் பணிகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு பிரதமரால் தேயிலைச் சங்கத்தின் தலைவருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. அதேபோன்று சட்டவிரோதமான முறையில் தேயிலை உற்பத்திகள் தொழிற்சாலைகளுக்குள் இடம்பெறுமாயின் அது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் பிரதமர் இதன்போது மேலும் தெரிவித்தார். (ரி2)

# சம்பளக் குறைப்புக்கு எவரும் இணங்கவில்லை

## அனைத்து நிறுவன ஊழியர் சங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 19

தனியார்துறை ஊழியர்களின் சம்பளக் குறைப்புக்கு சகல தொழிற் சங்கங்களும் இணங்கவில்லையென அனைத்து நிறுவன ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது ஊழியர்களின் சம்பளக் குறைப்புத் தொடர்பில் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள், தொழில் அமைச்சர் மற்றும் முதலாளிமார் இணங்கியுள்ளனர் என்றும் இதனைப் பின்பற்றல் செப்ரெம்பர் மாதம் வரை அமுலில் இருக்குமெனவும் அமைச்சர் பந்துல குணவர்தன கூறினார் என வெளியாகியுள்ள செய்திகள் பொய்யானவையாகும்.

கடந்த ஜூலை 8ஆம் திகதி தேசிய தொழில் ஆலோசகர் சபை தொழில் அமைச்சர் தினேஸ் குணவர்தன தலைமையில் கூடியது.

இதன்போது தனியார் துறை ஊழியர்களுக்கு தமது சம்பளத்தில் 50 சதவீதம் அல்லது 14,500 ரூபா பெற்றுக்கொடுப்பதை ஜூலை மாதம் முதல் செப்டெம்பர் வரை நீடிப்பது குறித்தே பேசப்பட்டது.

மேலும், மே மற்றும் ஜூன் மாதங்களில் சம்பளத்தை வழங்குவதில் முதலாளிமார் மோசமாக நடந்து கொண்டுள்ளமையால் இந்தச் சம்பளக் குறைப்புக்கு இணங்க வேண்டாமென அனைத்து நிறுவன ஊழியர் சங்கத்தின் சார்பில் அதன் செயலாளர் சட்டத்தரணி ஜானக அதிகாரி கேட்டுக்கொண்டிருந்தார்.

பல தொழிற்சங்கங்கள் எமது நிலைபாட்டிலேயே இருந்தன. அதனால் அனைத்துத் தொழிற் சங்கங்களும் சம்பள குறைப்புக்கு இணங்கியுள்ளன என அமைச்சர் பந்துல குணவர்தன கூறியுள்ளமை பொய்யான விடயமாகும் எனவும் அனைத்து நிறுவன ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

(ரி3)

# வங்கி ஊழியர்களின் பிரச்சினைகள் பிரதமர் கவனத்துக்கு!

கொழும்பு, ஜூலை 18

அரச வங்கிகளின் தற்போதைய நிலைமை தொடர்பில், பிரகதி வங்கி ஊழியர் சங்கத்திற்கும் பிரதமருக்கும் இடையில் நேற்றுமுன்தினம் காலை அலரி மாளிகையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

அரச வங்கி ஊழியர்களின் ஓய்வூதிய முறையின் பலன்களை அதிகரிப்பதுடன், ஓய்வூதிய பலன்களை இழந்த ஏனைய அரச வங்கிகளுக்கு ஓய்வூதியத்தை வழங்குதல் தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டது.

1996 ஆம் ஆண்டு அரச வங்கி ஊழியர்களுக்கு இழக்கப்பட்ட ஓய்வூதியம், பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த 2014 ஆம் ஆண்டிலேயே வங்கி ஊழியர்களுக்கு கிடைத்துள்ளது.

அந்த நன்மை ஓய்வுபெற்ற வங்கி ஊழியர்களுக்கும் வங்கி ஊழியர்களின் குடும்பங்களின் வளர்ச்சிக்கும் காரணமாகியதைச் சுட்டிக்காட்டி பிரகதி வங்கி ஊழியர்களின் சங்கத்தின் அதிகாரிகள் அதன் நன்மை தற்போதைய காலப்பகுதியிலும் பொருத்தமான வகையில் அதிகரிப்பது ஓய்வு பெற்ற வங்கி ஊழியர்களுக்கு நிவாரணமாகும் எனச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன், வங்கிக் கடன் வீதத்தைக் குறைத்தல் மற்றும் ஊழியர்களின் நலன் தொடர்பிலும் பிரகதி வங்கி ஊழியர்கள் சங்கம் பிரதமரின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

வங்கி ஊழியர்களின் சிக்கல்கள் தொடர்பில் அவதானம் செலுத்தி, தேவையான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகலவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ரி2)

# 95 மாணவர்களுக்கு கல்விக் கொடுப்பனவு

மன்னார், ஜூலை 18

மன்னார் துயர்துடைப்பு மறுவாழ்வு சங்கத்தின் 35வது வருட நிகழ்வு மன்னார் வயல் வீதியில் அமைந்துள்ள அலுவலக வளாகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

இந் நிகழ்வில் நானாட்டான் பிரதேச செயலாளர் மா.சிறிஸ்கந்த குமார் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இந் நிகழ்வில் வறிய நிலையிலுள்ள மாணவர்கள் 95 பேருக்கான உலருணவுப் பொதிகள் மற்றும் கல்விக் கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டன.

(ரி1-213)

# வடக்குக் கடற்பரப்பில் கண்காணிப்பு இறுக்கம்

கொழும்பு, ஜூலை 19

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையேயான வடக்குக் கடற்பரப்பின் கண்காணிப்பு கடந்த ஜூலை மாதம் 15ஆம் திகதி முதல் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது என்று கடற்படையினர் தெரிவித்தனர். அந்தப் பகுதியில் சந்தேகத்துக்கிடமாக நடமாடும் கப்பல்கள் சோதனையிடப்படுகின்றன என்று வடக்கு கட்டளை பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்று அதிகரித்துள்ள நிலையில் இந்தியாவில் வசிக்கும் தமிழ் அகதிகள் சிலரும், இந்திய கடத்தல்காரர்களும் இலங்கைக்கு தப்பி வருகின்றமை அதிகரித்துள்ளதை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வடக்கு கட்டளைப் பிரிவு தெரிவித்துள்ளது.

(எ)

# மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இதன்படி நாளை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ்.மாவட்டத்தில்** மண்டான் பிரதேசம், அண்ணா சிலையடி, கள்ளுவம் ஆகிய இடங்களிலும், **வவுனியா மாவட்டத்தில்** பத்தினியார் மகிழங்குளம் கிராமம், அரசடிகுளம், காந்திநகர் ஆகிய பிரதேசங்களிலும் , மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார்.

# இன்றைய நாள்

**மேடம்:** ரகசியங்களை பாதுகாப்பதில் அதிக அக்கறை செலுத்துவீர்கள். கணவன் மனைவி இடையே புரிதல் அதிகரிக்கும். கலைஞர்களுக்கு மனதில் வீண் பயங்கள் தோன்றும். நண்பர்களால் உற்சாகமடைவீர்கள்.

**இடபம்:** பெற்றோரின் நீண்ட நாளைய கனவுகளை நனவாக்குவீர்கள். உறவினர்கள்வீட்டுவிருந்து,விசேஷங்களில் பங்கேற்பீர்கள். கலைத் துறையினரின் செயல்களில் நேர்த்தி நிறைந்திருக்கும்.

**மிதுனம்:** பல காலமாக இருந்து வந்த துன்பங்களிலிருந்து மீளுவீர்கள். பெண்களுக்கு பணவரவு திருப்திகரமாக இருக்கும். சுபச் செலவுகள் அதிகரிக்கும்.

**கடகம்:** குடும்பத்தின் பொருளாதார பிரச்னைகளை சரிசெய்வீர்கள். பெண்கள் எதிலும் கவனமாக இருக்க வேண்டும். உறவினர் வகையில் சிறிய அளவில் மனகசப்பு ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** தாழ்வு மனப்பான்மை நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். பெண்களுக்கு எதிர்பார்த்த பண வரவு இருக்கும். உத்தியோகத்தில் பணிச்சுமையைச் சமாளிப்பீர்கள்.

**கன்னி:** எதிர்கால வாழ்வில் நம்பிக்கை அதிகரிக்கும். அக்கம் பக்கத்தினருடன் கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால் பேச்சில் கவனம் தேவை. பிரிந்து சென்ற உறவினர்கள் உங்களைத் தேடி வருவார்கள்..

**துலாம்:** வேலையில் கவனமாக இருந்து மேலதிகாரியிடம் பாராட்டுப் பெறுவீர்கள். தொழில் வளர்ச்சியைப் பெருக்கிக் கொள்ள புதிய வாய்ப்புகள் உருவாகும். உறவினர் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** கலைஞர்களுக்கு மன கஷ்டம் உண்டாகும். ஆரோக்கியத்தில் சற்று மந்தநிலை காணப்படும். பெண்களுக்கு தந்தையின் அன்பும், ஆதரவும் உண்டு.

**தனுசு:** சவால்களை எதிர்கொண்டு கடுமையாக உழைத்து வெற்றி காண்பீர்கள். பெண்களுக்கு தேவையில்லாத குழப்பம் ஏற்பட்டு பின் சரியாகும்.

**மகரம்:** கடினமான பணிகளை எளிதாக முடித்து மேலதிகாரியிடம் பாராட்டைப் பெறுவீர்கள். தொழிலில் லாபம் அதிகரிக்கும். புதிய நண்பர்கள் அறிமுகமாவார்கள்.

**கும்பம்:** குடும்பத்தில் பிரச்சினைகள் மறைந்து அமைதி நிலவும். அலுவலகத்தில் சகஊழியர்கள் ஒத்துழைப்புடன் நடந்து கொள்வர்.

**மீனம்:** குடும்ப நிதிநிலை பெரிதாக ஏதும் பாதிக்க வாய்ப்பில்லை. வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் உண்டு. நெருங்கிய நண்பர்களால் மனக்கஷ்டம் உண்டாகலாம்.





# வெளியகப் பண அனுப்பல்கள் தொடர்பில் மத்திய வங்கி புதிய நடைமுறை

கொழும்பு, ஜூலை 19

நாணய ஒதுக்கு நிலைமையைப் பேணும் நோக்குடனும், கொவிட் 19 வைரஸ் பரவல் காரணமாக இலங்கையின் பொருளாதாரத்திற்கு ஏற்படக்கூடிய பாதக தாக்கங்களைக் கருத்திற்கொண்டும் மூலதனக் கொடுக்கல் வாங்கல்கள் மீதான வெளியகப் பண அனுப்பல்கள் தொடர்பில் மத்திய வங்கி புதிய நடைமுறைகளை அறிமுகப்படுத்தியிருக்கிறது.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட நடைமுறைகள் எதிர்வரும் 6 மாத காலத்துக்கு நடைமுறையிலிருக்கும் என்றும் மத்திய வங்கி தெரிவித்திருக்கிறது.

எந்தவொரு தொகை வரையிலுமான நடைமுறைக் கொடுக்கல் - வாங்கல் மீதான பண அனுப்பல்கள் அல்லது உயர்ந்தபட்சம் 20,000 அமெரிக்க டொலர் வரையிலான மூலதனக் கொடுக்கல்வாங்கல் தவிர, இலங்கையில் வசிக்கும் நபர்கள் வைத்திருக்கும் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் அல்லது தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளினூடாக வெளிமுகப் பண அனுப்பல்களும் இடைநிறுத்தப்படுகின்றன.

மேலும், முதல் தடவையாகப் புலம் பெயர் முற்கொடுப்பனவைக் கோருகின்ற புலம்பெயர் பவர்களுக்கான தகைமையுடைய புலம்பெயர் முற்கொடுப்பனவை உயர்ந்தபட்சம் 30,000 அமெரிக்க டொலராக மட்டுப்படுத்தல் மற்றும் ஏற்கனவே புலம்பெயர் முற்கொடுப்பனவைப் பெற்றிருந்த புலம் பெயர்ந்தவரால் கோரப்பட்ட புலம் பெயர் முற்கொடுப்பனவின் கீழான பண அனுப்பல்களை உயர்ந்தபட்சம் 20,000 அமெரிக்க டொலராக மட்டுப்படுத்தல் ஆகிய தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என மத்தியவங்கி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி2)

## காலாவதியான விசாவுடன் இந்தியர்கள் கைது

ஹற்றன், ஜூலை 19

காலாவதியான விசாவுடன் ஹற்றனில் தங்கியிருந்த இந்திய பிரஜைகள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசா காலாவதியாகி ஆறு மாதங்கள் ஆகியுள்ளன நிலையில் கைதுசெய்யப்பட்ட மூவரும் இந்தியாவின் பெங்களூரில் இருந்து சுற்றுலா வீசாவில் இலங்கைக்கு வந்து, ஹற்றன் பஸ் நிலையத்துக்கு அருகில் கடையொன்றை வாடகைக்குப் பெற்று வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)

# இராணுவ வைத்தியசாலை கிளிநொச்சியில் திறப்பு

கிளிநொச்சி, ஜூலை 19

கிளிநொச்சி இரணைமடு பகுதி யில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ ஆதார வைத்தியசாலையை இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா நேற்றுமுன்தினம் திறந்து வைத்தார்.

இரணைமடு படைத்தலைமையகத்தில் இராணுவத்தினருக்கான புதிய ஆதார வைத்தியசாலை அமைக்கப்பட்டுள்ளது. இந்த வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு, எக்ஸ்றே பிரிவு, பற்சிகிச்சை நிலையம், ஆய்வு கூடம் மற்றும் விடுதிகள் போன்ற வசதிகளுடன் அமைக்கப்பட்டுள் ளது.

திறப்பு விழாவில் மேஜர் ஜெனரல் குணரத்ன, கிளிநொச்சி மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் , கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளர் மற்றும் இராணுவ உயர திகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (ரி1)

## ரயில் கடவைகளில்

# வீதி ஒழுங்கைப் பேணாத சாரதிகள்; கவனமெடுப்பார்களா பொலிஸார்?

**வவுனியா, ஜூலை 19**

**வவுனியாவில் பிரதான ரயில் கடவைகளில் ரயில் வருகின்றபோது காத்திருப்பவர்கள் வீதி ஒழுங்குகளை உரிய வகையில் பேணுவதில்லை என்று சமூக ஆர்வலர்களால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.**




குறிப்பாக மன்னார்வீதி, புளியங்குளம் மற்றும் ரயில் நிலைய வீதியில் அமைந்துள்ள ரயில் கடவைப் பகுதிகளிலேயே இவ்வாறான நிலையை அதிகமாகக் காணமுடிகின்றது.

ரயில் வருகின்றபோது ரயில் கடவைகளில் அதிகமான வாகனங்கள் காத்திருக்கின்றன. அந்த வாகனங்களின் சாரதிகள் வீதி ஒழுங்கை பேணாது வீதி முழுவதையும் ஆக்கிரமித்து தமது வாகனங்களை நிறுத்தி வருகின்றனர்.

இதனால் ரயில் சென்றதும் ரயில் கடவையைக் கடந்து செல்வதற்காக எதிர்ப்பக்கமாக இருந்து வாகனத்தை செலுத்தி வரும் சாரதிகள் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றமையுடன் விபத்துக்கள் ஏற்படுகின்ற நிலைமையும் ஏற்படுகின்றது.

இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொலிஸாரிடம் சமூக ஆர்வலர்கள் கோரியுள்ளனர். (ரி1-110)

## வெளிநாட்டில் சிக்கிய 100 பேர் மீண்டனர்

கொழும்பு, ஜூலை 19

கொரோனாத் தொற்றுக் காரணமாக வெளிநாடுகளில் சிக்கியிருந்த மேலும் 100 பேர் இலங்கையை வந்தடைந்தனர்.

சீனா, ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் கட்டார் ஆகிய நாடுகளில் சிக்கியிருந்த இவர்கள், விசேட விமானங்கள் மூலமாக நேற்று இரவு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)

## யானை சடலமாக மீட்பு

வெல்லாவெளி பொலிஸ் பிரி வுக்குட்பட்ட விவேகானந்தபுரம் பகுதியில் யானையொன்று நேற்று முன்தினம் உயிரிழந்த நிலையில் காணப்பட் டுள்ளது. இது தொடர்பில் வெல்லாவெளி பொலிஸார் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த யானையின் சடலத்தை அங்கிருந்து அகற்றும் நடவடிக்கைகளை வனஜீவராசிகள் திணைக்களம் முன்னெடுத்துள்ளது எனவும், இது தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)

# 45 பௌத்த துறவிகள் தனிமைப்படுத்தலில்!

மொனராகலை, ஜூலை 19

மொனராகலை - படல்கும்புர, கல்லோயா பௌத்த துறவி கள் மடத்தில் 45 பௌத்த பிக்குமார் உட்பட 72 பேர் மடத்துக்குள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கந்தகாடு புனர்வாழ்வு முகாமில் இருந்து சென்ற இராணுவ அதிகாரி ஒருவர் கலந்துகொண்ட சமய நிகழ்ச்சியில் பங்குபற்றிய பிக்குகள் உட்பட புண்ணிய தான நிகழ்வில் கலந்துகொண்டவர்களே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என மொனராகலை சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆர்.பி.டி.கே.அதிகாரி தெரிவித்துள்ளார். இதேவேளை, பசறை பரகஹமங்கட பிரதேசத்தைச் சேர்ந்த இந்த இராணுவ அதிகாரி, வெல்கொல்ல பிரதேசத்தில் உள்ள தனது தாய் வீட்டுக்குச் சென்றுள்ளமையினால் அவரது குடும்பத்தினரும் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் இந்த இராணுவ அதிகாரி பஸ்ஸில் முதியங்கன விகாரைக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளமையுடன் சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற பதுளை மாவட்ட செயலகத்துக்கும் சென்றிருந்தார் எனத் தெரியவந்துள்ளது. இந்த தக வல்களின் அடிப்படையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் தெரி விக்கப்பட்டுள்ளது. (ரி3)

## மணல் அகழ்ந்தோர் பிணையில் விடுதலை

கிளிநொச்சி, ஜூலை 19

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரமந்தனாறுப் பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து இரண்டு டிப்பர் வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட இருவருக்கும் மணல் அகழ்வை நிறுத்தும்படி அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. மேலும் இவர்கள் பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். (ரி1-113)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# குருபரனுக்கு ஒரு ‘சல்யூட்’!

மீண்டுமொருமுறை யாழ். பல்கலைக்கழகம் எல்லோர் கவனத்தையும் ஈர்த்திருக்கிறது. வழக்கமாக தமிழின விடுதலைக்கு வலுச்சேர்க்கும் வகையில், ஏதேனும் துணிகரமான பொங்கு தமிழ் போன்றனவாக அத்தகைய கவனயீர்ப்புகள் இருந்தன. இம்முறை அதற்கு மாறாக, தமிழினத்துக்கு நேர்ந்த அநீதியை சட்டத்தின் துணைகொண்டு தட்டிக்கேட்க முற்பட்டதால், ஒரு விரிவுரையாளர் தன் பதவியையே தூக்கியெறிந்து அந்தக் கவனயீர்ப்பை நிகழ்த்தியுள்ளார்.

சட்டத்துறை விரிவுரையாளரான குருபரன், லண்டனில் தன்னுடைய மேற்படிப்பை முடித்துக் கொண்டு, அங்கேயே பணியாற்றியிருக்கலாம். ஆனால் தன்னுடைய சேவையை தாய்நாட்டில் தொடரவேண்டும் என்பதற்காக இங்கு வந்து, யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை தலைவராகவும் உயர்ந்தார். தனியே ஏட்டுச்சுரைக்காய்த் தனமான கல்விமுறையை வெறுத்த குருபரன், பிரயோக ரீதியானதாக சட்டக்கல்வியை மாற்ற முனைந்தார். அதற்குத் தானே முன்னுதாரணமாகவும் மாறினார். சட்டத்துறைத் தலைவர் என்ற ஒளிவட்டத்தைச் சூடிக்கொண்டு அவர் நான்கு சுவர்களுக்குள்ளேயே முடங்கி இருந்திருக்கலாம். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. பல பொதுநல வழக்குகளில் முன்னிலையானார். அப்படி அவர் கையில் எடுத்த வழக்குகளில் ஒன்றுதான் நாவற்குழியில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் காணாமல் ஆக்கப்பட்ட வழக்கு.

குருபரன் இந்த வழக்கில் களமிறங்கியதும் இராணுவத்துக்குக் கதிகலங்கியது. தன்னுடைய வாதத்திறமையாலும், சட்டப்புலமையாலும் தங்களின் கோர முகத்தை அவர் நீதிமன்றில் தோலுரித்துக் காட்டிவிடுவார் என்று படைத்தரப்பு பயந்தது. குருபரனை உளவியல் ரீதியாகப் பலவீனப்படுத்த, அவர் மீது குற்றச்சாட்டுக்களை பல்கலைக்கழகப்பேரவையிடம்அடுக்கியது. முள்ளந்தண்டுள்ள பேரவை என்ன செய்திருக்க வேண்டும்? படைத்தரப்புக்கு எதிராக நீதியை நிலைநாட்டப் போராடும் தங்கள் பல்கலைக்கழக விரிவுரையாளரின் கரத்தைப் பலப்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் படைத்தரப்பின் குற்றச்சாட்டுக்களுக்கு தாளம் போட்டார்கள். ‘விரிவுரையாளர் பணியில் இருக்கும் ஒருவர் நீதிமன்ற வழக்குகளில் முன்னிலையாக முடியாது’ என்று புதிய சட்டம் போட்டார்கள். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கும் அறிவித்து, அந்தச் சட்டத்தை உறுதிசெய்தார்கள்.

இந்த நிலையிலேயே குருபரன் தனக்கு நேர்ந்த அநீதிக்கு நியாயம்கேட்டு, நீதிமன்றத்தை நாடினார். அவர் மீதுள்ள நியாயத்தை உணர்ந்து கொண்ட நீதிபதிகள் இருவர், அந்த வழக்கை தாம் விசாரிக்க மனச்சாட்சி இடம் கொடுக்கவில்லை என விலகினர். ஆனால் அப்போதுகூட பல்கலைக்கழகப் பேரவையின் மனச்சாட்சி தூங்கி, குறட்டையும் விட்டுக் கொண்டிருந்தது. இந்த நிலையில்தான் தன் விரிவுரையாளர் பதவியைத் தூக்கியெறிந்து, வழக்குகளில் வாதிடப் போவதாகக் குருபரன் அறிவித்துள்ளார். நீண்டு கொண்டிருந்த மனவுளைச்சலுக்கு ஒரு முடிவு கட்டவே அவர் இந்த முடிவை எடுத்திருக்க வேண்டும். அவருக்காக பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமோ, பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமோ எந்தவொரு சலனத்தையும் வெளியிடாமல் கள்ளமௌனம் காத்தன. பகிடிவதை செய்து பல்கலைக்கழகத்தை விட்டு இடைநிறுத்தப்பட்டவர்களுக்காகக்கூட போராட்டங்களை நடத்தும் பல்கலை மாணவர் ஒன்றியம் ஏன் குருபரன் விடயத்தில் அவர் பக்கம் குரல் கொடுக்காமல் இருந்தது என்பது இன்னும் மர்மமே. குருபரனின் விலகல் என்பது உண்மையில் சட்டத்துறை மாணவர்களுக்கே ஒரு பெரும் புலமை இழப்பாக இருக்கப் போகின்றது.

ஆயினும் தனிமனிதனாக போராடிய குருபரன் தன்னுடைய பதவியையை உதற முடிவெடுத்ததன் மூலம், யாழ். பல்கலைக்கழகப் பேரவையின் குருட்டுத்தனமான போக்கை உலகுக்கு உணர்த்தியுள்ளார். ஆனால் இது உண்மையில் குருபரனுக்கு எதிரான தரப்புகளுக்கும் இலாபமே. அவர்கள் பல்கலைக்கழகத்தில் இப்படியான நீதியின் குரல்கள் இருக்கக் கூடாது என நினைத்தார்கள், அது நடந்துவிட்டது. இருப்பினும் அவர்களுக்கு இது ஒரு தற்காலிக சந்தோசம் மட்டுமே. ஏனெனில் இனித்தான் குருபரனின் நீதிக்கான குரல் பலமாக இருக்கப் போகின்றது.

‘இந்த ஆட்சிக்குள் புதிய அரசியலமைப்பை நிறை வேற்றாவிட்டால் என் பதவியை விட்டு விலகத் தயார்’ என்று பகிரங்கச்சவால் விடுத்தவர்களெல்லாம் பம்மிக் கொண்டு மீண்டும் பதவிக்காக வாக்குப்பிச்சை கேட்டுக் கெஞ்சிக் கொண்டிருக்கையில், பதவியாவது, மண்ணாங்கட்டியாவது என அதிகாரத்தரப்பின் முகத்தில் ஓங்கி அறைவது போல விரிவுரையாளர் பதவியைத் தூக்கியெறிந்த குருபரனுக்கு ஒரு ‘சல்யூட்’!

# நெருக்கடி நிலை இல்லையா அரசே பாசாங்கு வேண்டாம்!

## மருத்துவ நிபுணர்கள் சங்கம் வலியுறுத்து

**கொழும்பு,ஜூலை 19**

**நாட்டில் தற்போது எவ்வித நெருக்கடி நிலையும் இல்லை எனப் பாசாங்கு செய்வதை அரசு நிறுத்த வேண்டும். தேவையேற்படும் பட்சத்தில் நாட்டை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் முடக்க வேண்டும்.**

இவ்வாறு இலங்கை மருத்துவ நிபுணர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் மருத்துவ நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் மருத்துவ நிபுணர் எல்.ஏ.ரணசிங்க தெரிவித்ததாவது:

தாமதப்படுத்தாமல் உடனடியாக கொவிட் 19 கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்கு அவசியமான, உறுதியான கட்டுப்பாடுகளை விதிக்குமாறு அரசு வலியுறுத்தியுள்ளது.

நாட்டில் தற்போது காணப்படும் கொவிட் 19 கொரோனா வைரஸ் பரவல் நிலையானது அலட்சியப்படுத்தப்படும் பட்சத்தில், இலங்கை மற்றுமொரு பிரேஸிலாகவோ அல்லது இந்தியாவாகவோ மாறலாம்.

நாட்டில் ஒரு உடனடியான அல்லது ஏற்கனவே காணப்பட்ட கொரோனா வைரஸ் சமூகப்பரவல் நிலையொன்று இருக்கலாம்.

கடந்த 14 ஆம் திகதியிலிருந்து நாட்டில் தொற்றாளர்கள் கண்டறியப்பட்ட விதம், நிலைமை சற்றுத் தீவிரமடைந்திருப்பதை உணர்த்துகிறது. சிலர் இதனைக் கொத்தணி தொற்றுப்பரவல் என்கின்றனர். ஆனால் தற்போது கண்டறியப்பட்ட தொற்றாளர்களிடமிருந்து, அவர்கள் தொடர்புகளைப் பேணியவர்களுக்கும் இது பரவியிருக்க முடியும்.

அதேவேளை தேர்தல் பிரசாரங்கள் உள்ளிட்ட பொதுமக்கள் ஒன்றுகூடும் கூட்டங்கள் மற்றும் பிரத்தியேக வகுப்புக்கள் போன்றவற்றுக்குக் கட்டுப்பாடுகளை விதித்தல், பாடசாலைகளை மீளத் திறப்பது குறித்து நன்கு ஆராய்தல், பொதுப்போக்குவரத்துக்கான கட்டுப்பாடுகளை விதித்தல் ஆகியவை மிகவும் அவசியமானவை.

நாட்டில் மேலும் தொற்று ஏற்படுவதைத் தடுப்பதற்கு, தற்போது குறைந்த அளவிலேனும் கொரோனா வைரஸ் சமூகப்பரவல் நிலை ஏற்பட்டிருக்கிறது என்று நம்புவது விவேகமானது என்றே நாங்கள் கருதுகின்றோம். ஏனெனில் இது மிகவும் பயங்கரமான விடயமாகவே இருக்கின்றது - என்றார்.

அதேவேளை தொற்றுநோயைக் கட்டுப்படுத்துவதற்கு எமது நாட்டில் பற்றாக்குறையாக இருக்கும் மருத்துவ வசதிகள் தொடர்பில் சுட்டிக்காட்டியிருக்கும் சங்கத்தினர், தேசிய ரீதியில் பெருமளவானோருக்கு சிகிச்சையளிப்பதற்கு எம்மிடம் போதுமான மருத்துவ சுகாதார வசதிகள் இல்லை என்ற உண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டும். எனவே தாமதப்படுத்தாமல் உடனடியாக கொவிட் 19 கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்கு அவசியமான உறுதியான கட்டுப்பாடுகளை விதிக்குமாறும், சமூகத்தில் எழுமாற்றாக நபர்களைத் தெரிவு செய்து பி.சி.ஆர் பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அரசை வலியுறுத்தியுள்ளனர். (சு)

# இலங்கையின் ஏற்றுமதி கடுமையாக வீழ்ச்சி

கொழும்பு, ஜூலை 19

இந்த ஆண்டு ஜூன் மாதம் தொடக்கம் இலங்கையின் ஏற்றுமதி வருவாய் 906 மில்லியன் அமெரிக்க டொலராக பதிவானதோடு, இது முந்தைய ஆண்டைவிட 26 சதவீதம் வீழ்ச்சியைக் காட்டுவதாகத் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும், ஏற்றுமதி மேம்பாட்டு சபையின் கூற்றுப்படி, ஏப்ரல் மாதத்துடன் ஒப்பிடும்போது ஏற்றுமதி 327 சதவீதம் அதிகரித்துள்ளது,

எவ்வாறாயினும், கொரோனா வைரஸ் பரவல் காரணமாக சர்வதேச ரீதியில் இலங்கையின் ஏற்றுமதி கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது.

ஜூன் மாதத்தில் மாத்திரம் இலங்கை 106.46 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு சுகாதார ஆடைகளை ஏற்றுமதி செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கண்டி பெரஹெர நிகழ்வுகள் நாளைமறுதினம் ஆரம்பம்

கண்டி, ஜூலை 19

கண்டி தலதா மாளிகையின் பெரஹெரா நிகழ்வுகள் நாளைமறுதினம் 21 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் என்று தலாதா மாளிகையின் தியதன நிலமே நிலங்க தெரிவித்தார். சுகாதார அமைச்சின் அறிவுரைகளுக்கமைய கண்டி நகருக்குள் பொதுமக்களின் ஒன்றுகூடல் இன்றி பெரஹெரா நடத்தப்பட உள்ளதாக கண்டியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். (ஐ)

# கூட்டமைப்பு செய்தவை என்ன? அடுத்த வாரத்தில் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 19

கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செய்த வேலைத் திட்டங்கள் ஒரு வாரத்தில் மக்களுக்கு வெளிப்படுத்தப்படும் என்று கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியில் நேற்று இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலுக்கான தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடும் நிகழ்வின் போதே கூட்டமைப்பு இந்த அறிவித்தலை வழங்கியது.

தேர்தல் விஞ்ஞாபனத்தில், இனி வரப்போகும் ஐந்து ஆண்டுகளில் மேற்கொள்ளவேண்டிய வேலைத்திட்டங்கள், கொள்கைகள் தொடர்பான விடயங்கள் மாத்திரமே உள்ளடக்கப்பட்டுள்ளன என்றும், கடந்த ஐந்து ஆண்டுகளில் கூட்டமைப்பு மேற்கொண்ட வேலைத்திட்டங்கள், அரசுடன் இணைந்து கொள்கையின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட திட்டங்கள், அபிவிருத்திகள் தொடர்பில் அடுத்து வரும் ஒரு வாரத்தில் ஊடகவியலாளர் மாநாடொன்றின் மூலம் வெளிப்படுத்தப்படும் - என்று கூட்டமைப்பு அறிவித்தது. (ப)

## கூட்டம் இரத்து

யாழ்ப்பாணம்,ஜூலை 19

பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய யாழ்ப்பாண மாவட்டச் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

சங்கத்தின் நடவடிக்கைகள் ஊரடங்குச் சட்டத்தால் முடங்கப்பட்டு, தற்போது ஏற்பட்டுள்ள சுமுக நிலையால் ஓரளவு முன்னெடுக்கப்படுகின்றன.

மாவட்டத்தின் 15 பிரிவுச் சங்கங்களில் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, மருதங்கேணி ஆகிய பிரிவுச் சங்கங்களின் வருடாந்தப் பொதுக்கூட்டம் மார்ச் மாத முடிவுக்கு முன்னரும், மாவட்டச் சங்கத்தின் பொதுக் கூட்டம் ஏப்ரல் மாத முடிவுக்கு முன்னரும் கூட்டப்பட்டிருக்க வேண்டும்.


தற்போதைய நிலைமையில் சங்க நடவடிக்கைகளை முன்னெடுக்கும் முகமாக எதிர்வரும் இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

நாட்டில் தற்போது மீண்டும் கொரோனாத் தொற்று அதிகரிப்பதற்கு வாய்ப்புள்ளதாக சுகாதார பகுதியினர் தெரிவிப்பதால், பாதுகாப்பற்ற சூழ்நிலை ஏற்படுவதைக் கருத்தில் கொண்டு நிர்வாக சபைக் கூட்டத்தில் விசேட பொதுக் கூட்டத்தை இரத்துச் செய்வது எனவும், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் மீண்டும் தீர்மானிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்தை சகல அங்கத்தவர்களுக்கும் தெரியப்படுத்துகின்றோம் என்று மாவட்டச் சங்கச் செயலாளர் செ. சந்திரசேகரம் அறிவித்துள்ளார். (க)

# இராணுவத்தினரை மீறி எதுவும் செய்ய இயலாது

### குருபரன் விடயமே சான்று என்கின்றனர் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள்



வவுனியா,ஜூலை 19

**இராணுவத்தை மீறி வடக்கில் எதனையும் செய்ய முடியாது என்பதை சட்டதரணி குருபரனின் விடயம் உறுதிப்படுத்தியுள்ளது என்று வவுனியாவில் தொடர் போராட்டம் மேற்கொள்ளும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.**

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர்கள் இதனைத் தெரிவித்தனர். அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாடு அரசால் அங்கீகரிக்கப்பட்ட இராணுவ மயமாக்கத்துக்குள் சென்று பல ஆண்டுகள் கடந்து விட்டன. குறிப்பாக வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இராணுவத்தை மீறி கல்வி, நிர்வாகம், அபிவிருத்தி என எதனையும் செய்ய முடியாத நிலைதான் நீடிக்கிறது. அதன் மொத்த விளைவாகத் தான் யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை சிரேஷ்ட விரிவுரையாளரும், சட்டத்தரணியுமான கலாநிதி குமாரவடிவேல் குருபரன் விடயத்தில் நடந்தது.

சட்டத்தரணி குருபரன் பல்கலைக்கழகத்தில் பணியாற்ற முடியும், ஆனால் நீதிமன்றத்தில் பாதிக்கப்பட்ட தமிழருக்காக வாதாட முடியாது. இது நீதி நியாயத்துக்கு எதிரானது. பேராசிரியர் பீரிஸ் சட்டப் பள்ளியில் கற்பித்த போது, அவர் நீதிமன்றத்தில் பல வழக்குகளில் முன்னிலையாகி இருந்ததை நாம் அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும்.

அரசால் திருத்தப்பட்ட அல்லது புதிதாக உள்ளடக்கப்பட்ட புதிய சட்டங்கள் தொடர்பில் பல்கலைக்கழகப் பேராசிரியர்களுக்கு மட்டுமே நன்றாகத் தெரியும். அது மட்டுமல்ல உலகின் பிற பகுதிகளில் , நீதி மன்றத்தில் ஒரு முக்கியமான சட்ட வாதத்தை விவாதிக்க வேண்டியிருக்கும் போது, அவர்கள் சட்டப் பேராசிரியர்களைத் தான் அழைத்து வருகிறார்கள். மேலும் புதிய சட்டத்தை எவ்வாறு விளக்குவது என்பது பல்கலைக்கழகப் பேராசிரியர்களுக்குத் தான் தெரியும். கிரேக்க நாகரிகம், எகிப்திய நாகரிகம் மற்றும் நமது தமிழ் சிந்துவெளி பள்ளத்தாக்கு, நாகரிகங்கள் அனைத்திலும், பெரும்பாலான பங்கேற்பாளர்கள் படித்த நடுத்தர வர்க்கத்தினரே. இந்த நீதி மன்றத்திலிருந்து சட்ட பேராசிரியரை நீக்கி விட்டால், இலங்கையானது நாகரிகத்திலிருந்து விலகிச்செல்லுகிறது என்பது பொருள்.

நமது இறுதி இலக்காக இலங்கையின் மீறல்கள் மற்றும் நீதி அமைப்பில் தமிழருக்கான பாகுபாடு போன்ற விடயங்களைத் தீர்ப்பதற்காக அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியாவை நாம் அழைக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்த விரும்புகிறோம்.

நாடாளுமன்றத் தேர்தலில் தமிழர்கள் அனைவரும் ஒருமித்து செயற்படவேண்டிய சூழல் உருவாகியுள்ளது.எனவே படித்த விலை போகாத தலைமைகளை நாம் முன்கொண்டு வரவேண்டும் - என்றனர். (க-110)

## பஸ்களின் ஆசன எண்ணிக்கை மீறப்பட்டால் சட்ட நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 19

பஸ்களில் ஆசன எண்ணிக்கைக்கு மேலதிகமாக பயணிகளை ஏற்றிச் செல்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதாக பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரித்தார்.

கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்துவது தொடர்பாக முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

'கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் நாட்டில் அதிகரித்துள்ளதன் காரணமாக பஸ்களின் உரிமையாளர்களுக்கும், நடத்துநர்களுக்கும் சில ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

அதில் மிகவும் முக்கியமானதாக, ஆசனங்களின் எண்ணிக்கையை விட அதிகளவிலான பயணிகளை ஏற்றிச் செல்வதை தவிர்க்குமாறு அவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளோம்.

எனினும் இவற்றைக் கருத்திற் கொள்ளாமல் சில தனியார் பஸ்கள் தொடர்ந்தும் அதிகளவிலான பயணிகளை ஏற்றிச் செல்கின்றன என முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது.

ஆகவே இவ்வாறு செயற்படும் பஸ் உரிமையாளர், சாரதி மற்றும் நடத்துநர் உள்ளிட்டோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்' - என்றார். (ஐ)

## மண் அணைகள் சீரமைப்பு

தென்மராட்சி,ஜூலை 19

தென்மராட்சி பிரதேசத்தில் போர் காலத்தில் அமைக்கப்பட்ட மண் அணை கள் சீரமைக்கப்படவுள்ளன.

அதற்கென மீள்குடியமர்வு மற்றும் மறுவாழ்வு அமைச்சால் தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு நிதி வழங்கப்பட்டுள்ளது.

போர் காலத்தில் தென்மராட்சி பிரதேசத்தில் தங்கியிருந்த படையினர் பாதுகாப்பு மண் அரண்களை அமைத்திருந்தனர். பின்னர் அவற்றைக் கைவிட்டுச் சென்றுள்ளனர்.

இந்த மண் அணைகளால் மழைக் காலங்களில் வெள்ளம் வழிந்தோட முடியாமல், பல இடங்களில், வெள்ளம் தேங்கி நிற்பதாக பொதுமக்கள் பிரதேசசெயலகத்தில்முறையிட்டுள்ளனர்.

அவசியம் எனக் கருதிய சில இடங்களில் காணப்பட்ட மண் அணைகள் கடந்தவருடம் கனரக வாகனங்கள் மூலம் சீரமைக்கப்பட்டன.

தென்மராட்சி கிழக்கு மற்றும் தென்மராட்சி வடக்கு ஆகிய இடங்களில் காணப்படும் மண் அணைகளே சீரமைக்கப்படவுள்ளன.

மண் அணைகள் சீரமைப்புடன் பற்றைகளாகக் காணப்படும் மயானங்கள் மற்றும் அதற்கான வீதிகளும் சீரமைக்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

## பருத்தித்துறை, கரவெட்டிக்கு நீர் விநியோகம் தடைப்படும்

வடமராட்சி,ஜூலை 19

பருத்தித்துறை நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் நீர் பெறப்படும் நிலையங்களில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சி காரணமாக, நீர் விநியோகம் தடைப்படும் என்று தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை பிராந்திய முகாமையாளர் எந்திரி.ஏ. ஜெகதீசன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அனுப்பப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நிலத்தடி நீரின் அளவில் மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. அத்துடன் வறட்சி காரணமாக மக்களின் பாவனை வீதமும் அதிகரித்துள்ளது. இதனால் நீர் விநியோகத்துக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் மழையால் உருவாக்கப்படும் நிலத்தடி நீர்நிலைகளை நம்பியே நீர் விநியோகத்திட்டம் உள்ளது. நீர் நிலைகள் அற்றுப் போகுமானால் குடிதண்ணீர் விநியோகத்தில் தடங்கல் ஏற்படும். எனவே பாவனையாளர்கள் நீரை வீண்விரயம் செய்யாது மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்துமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

நாளாந்த நீர் வழங்கலை மட்டுப்படுத்தி வழங்குவதற்கான முன்னாயத்த நடவடிக்கைக்காக நாளை திங்கட்கிழமை தொடக்கம் காலை 6 மணியிலிருந்து, நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 8 மணி வரை முழு நேர நீர்த்துண்டிப்பு முன்னெடுக்கப்படும்.

எதிர்வரும் 21ஆம் திகதியில் இருந்து காலை 8 மணி தொடக்கம் மு.ப. 11 மணி வரை கரவெட்டி பிரதேசத்தின் குடிதண்ணீர் வழங்கல் இடங்களுக்கும் மற்றும் பருத்தித்துறையின் ஒரு பகுதியான வலயம் 107 (செட்டித்தெரு பூதவராயர் ஒழுங்கை , ஜயனார்கலட்டி, நாகலிங்க முதலியார் வீதி, பத்திரகாளி ஒழுங்கை , உடையார் வளவு, ஓடக்கரை ) வலயம் 108 (ஓடக்கரை, சுப்பர்மடம்) வலயம் 109 (சுப்பர்மடம், அம்மன் கோயிலடி, வியாபாரிமூலை, 1ம்கட்டை) வலயம் 201 (1ம்கட்டைசந்தி, கிராமக்கோடு, ஆத்தியடி, கந்தவுடையார் ஒழுங்கை , விநாயகர் முதலியார் ஒழுங்கை, கல்லூரி வீதி, கல்லூரி வீதி, தம்பசிட்டி, வட்டப்பாதி, புலோலி தென்மேற்கு , கூவில், மாயக்கை , காந்தியூர் , வாணர்குடியிருப்பு, கந்தமுருகேசனார்வீதி, மந்திகை), வலயம் 202 (வத்தனை, பூவற்கரை, நக்கீரன்வீதி), வலயம் 203 (மகாத்மாவீதி, கந்தப்பாவளவு, பாணம்பற்றை, அல்வாய் வடக்கு, அல்வாய் முத்துமாரி அம்மன் கோயிலடி), வலயம் 204 (மனோகராவீதி, அல்வாய், மாலுசந்தி) ஆகிய இடங்களுக்கும், எதிர்வரும் 21 ஆம் திகதி காலை 8மணி தொடக்கம் முற்பகல் 10 மணி வரையும் வலயம் 200 (இன்பர்சிட்டி, சக்கோட்டை, வீரபத்திரர் கோயிலடி) ஆகிய இடங்களுக்கும், பின்னர் மாலை 2.30 மணி தொடக்கம் 3.30 மணி வரை பருத்தித்துறை பிரதேசத்தின் ஏனைய குடிதண்ணீர் வழங்கல் இடங்களாகிய வலயம் 100 (புலோலி வடக்கு, விஸ்வகுலவீதி, புலோலிவடகிழக்கு, திகிரி, பல்லப்பை, மாதனை) வலயம் 101 (சவனாய், புதிய ஓடை, கலைமன்ற வீதி, அம்புலி ஓடை, பிராமணவீதி, தும்பளை வீதி மணல் ஒழுங்கை , வளலாய் ஒழுங்கை) வலயம் 102 (பெருவெட்டி ஒழுங்கை சாஸ்திரியார்வீதி, சேவில் ஒழுங்கை, திகிரி ஒழுங்கை , நீலர்வளவு, கணக்கிலாவத்தை, வளலாய் ஒழுங்கை), வலயம் 103 (பிள்ளையார் கோயிலடி , லூர்துமாதா கோயிலடி, தும்பளை, கணக்கிலாவத்தைப் பிள்ளையார் கோயிலடி). வலயம் 104 (வெளிச்சவீட்டு ஒழுங்கை, தும்பளை, நெல்லண்டை , லட்சுமணன் தோட்டம், மணியகாரன்சந்தி), வலயம் 105 (வெளிச்சவீட்டு ஒழுங்கை , கடற்கரை வீதி) ஆகிய இடங்களுக்கும் மேற்குறிப்பிட்ட நேர அடிப்படையில் நீர் வழங்கல் நடைபெறும்.

நீர் வழங்கல் நேரமானது தொடர்ச்சியாக நாளாந்தம் மேற்கொள்ளப்படும் மேலும் நீர் வறட்சிக்கு ஏற்றவாறு வழங்கும் நாள்களில் மாற்றங்கள் ஏற்படும்- என்றுள்ளது. (க)

# குருபரனுக்கு ஆதரவாக பதவி விலகவுள்ள சுரேன்

யாழ்ப்பாணம், ஜூலை 19

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சட்டபீடத்தின் விரிவுரையாளர் சட்டத்தரணி கலாநிதி குமாரவடிவேல் குருபரன் தன்னுடைய விரிவுரையாளர் பதவியிலிருந்து விலகியுள்ள நிலையில், தனது பேரவைக் குழு உறுப்பினர் பதவியில் இருந்து விலகவுள்ளார் என வட மாகாண முன்னாள் ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.



இதுதொடர்பில் அவர் தனது சமூக வலைத்தளப் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:

யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்ட பீடத்தின் விரிவுரையாளர் சட்டத்தரணி, கலாநிதி குமாரவடிவேல் குருபரன் நீதிமன்றில் முன்னிலையாவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அழுத்தத்தின் பேரில் கடந்த வருடத்தின் பிற்பகுதியில் பல்கலைக்கழக பேரவை தடை விதித்தமை காரணமாக, அவர் தன்னுடைய விரிவுரையாளர் பதவியிலிருந்து விலக வேண்டிய துரதிஷ்டவசமான நிலை ஏற்பட்டுள்ளது.

கல்விமானாக நான் அவருக்கு ஆதரவை தெரிவிப்பதோடு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பேரவைக் குழு உறுப்பினர் பதவியிலிருந்தும் விலக நான் தீர்மானித்துள்ளேன்.

உயர் கல்வி அமைச்சரை சந்தித்து எனது பதவி விலகல் கடிதத்தை கையளிப்பதுடன் கலாநிதி குருபரனுக்கு ஏற்பட்டுள்ள நிலை தொடர்பிலும் கலந்துரையாடுவதற்கு தீர்மானித்துள்ளேன். கல்விமான்களின் சுயாதீனம் பாதுகாக்கப்படவேண்டும்- என்றார். (எ)

## வெளிநாடுகளில் உயிரிழந்தவர்களின் சடலங்களை இலங்கைக்கு கொண்டுவரத் தடை

கொழும்பு, ஜூலை 19

வெளிநாடுகளில் உயிரிழந்தவர்களின் சடலங்களை இலங்கைக்குக் கொண்டுவருவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் கமல் ரத்வத்தே தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக வெளிநாடுகளில் நாற்பது இலங்கையர்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்த நிலையில் தனிமைப்படுத்தல் விதிமுறைகளுக்கு அமைய வெளிநாடுகளில் உயிரிழந்த இலங்கையர்களின் சடலங்களை நாட்டுக்குக் கொண்டுவர முடியாத நிலைமை காணப்படுகிறது. எனவே இறுதிச் சடங்குகளை அந்தந்த நாடுகளிலேயே செய்யுமாறு அறிவித்துள்ளோம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரி3)

## உயிரிழை அமைப்பின் பயனாளிகளுக்கு மருத்துவப் பரிசோதனை

மாங்குளம், ஜூலை 19

மாங்குளம் உயிரிழை அமைப்பின் பராமரிப்பு இல்ல பயனாளிகளுக்கும் மற்றும் ஏனைய பணியாளர்களுக்குமான மருத்துவப் பரிசோதனைகள் உயிரிழை அமைப்பின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன.

உயிரிழை அமைப்பின் வேண்டுகோளுக்கிணங்க மாங்குளம் வைத்திய சாலை தாதிய உத்தியோகத்தினரால் தைரொட்சின், குருதி அமுக்கம், சலரோகம், கொழுப்பு, சிறுநீர் போன்றவற்றுக்கான மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

உயிரிழை அமைப்பின் பராமரிப்பு இல்ல பயனாளிகள் அனைவரையும் வைத்தியசாலைக்குக்கொண்டுசென்று பரிசோதிப்பதில் உள்ள இடர்பாடுகள் காரணமாக இரண்டாவது தட வையும் மாங்குளம் வைத்தியசாலையினரால் இந்தச் சோதனைகள் உயிரிழை அமைப்பின் அலுவலகத்தில் இடம் பெற்றன. (ரி1-222)

## பொதுமண்டபப் பணிகள் துரிதம்!



20 லட்சம் ரூபா செலவில் கிளிநொச்சி இராமநாதபுரம் வட்டாரத்தின் மாவடி அம்மன் கிராம அலுவலர் பிரிவில் மாந்தோப்பு பகுதியிலுள்ள பொதுமண்டபத்துக்கான கட்டடப் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. இந்தக் கட்டடப் பணிகள் பிரதேச செயலகத்தால் ஒதுக்கப்பட்ட நிதியில் கிராம அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மாவடி அம்மன் கிராம அபிவிருத்திச் சங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ரி1-222)



## கையேடுகள் கையளிப்பு

சாவகச்சேரி, ஜூலை, 19

க.பொ.த . உயர்தரப் பரீட்சையில் சித்திரப் பாடத்திற்குத் தோற்றும் மாணவர்களுக்கான கற்றல் கையேடுகளைக் கையளிக்கும் நிகழ்வு சாவகச்சேரி தேவாலய வீதியில் உள்ள ரீ.பீ.ஹன்ற். நினைவு ஓவியக் கூட மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

ஓவியக்கூட நிறுவுநர் திருமதி யோகமணி அழகரத்தினத்தின் ஏற்பாட்டில் வட்டக்கச்சி மத்திய கல்லூரி ஓவிய பாட ஆசிரியை திருமதி ஆ.ஜானகியால் தொகுக்கப்பட்ட கையேடுகள் ஓவியக் கூடத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப் படவுள்ளன.

கையேடுகள் திருக்கோவில் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.சிறிதரனால் மாகாண அழகியற் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.சிவசிவாவிடம் கையளிக்கப்பட்டுள்ளன, அவை உயர்தரப் பரீட்சையில் சித்திர பாடத்திற்குத் தோற்றும் மாணவர்களுக்கு வலயங்களினூடாக வழங்கப்படவுள்ளன. (ரி1-9)

## எவ்.ஏ. கிண்ண சுற்றுப்போட்டிக்கு விண்ணப்பங்கள்

கரணவாய், ஜூலை 19

இவ் வருடம் நடைபெறவுள்ள எவ்.ஏ கிண்ணச் சுற்றுப்போட்டியில் கலந்துகொள்ளவுள்ள கழகங்கள் தமது விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு சங்கத்தின் நிறைவேற்றுக் குழுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி கால்பந்தாட்டச் சங்கத்தில் பதிவுகளை மேற்கொண்ட இலங்கைக் கால் பந்தாட்டச் சங்கத்தால் இந்த வருடம் விளையாடவுள்ள கழகங்களே இந்தச் சுற்றுப் போட்டிக்கு விண்ணப்பிக்கலாம். (ரி2)



முல்லைத்தீவு, வன்னி விளாங்குளம் ஆரம்பப் பாடசாலைக்கு கைகழுவும் இயந்திர பொறிமுறைத் தொகுதிகளும், மூன்று மாதங்களுக்கு போதுமான தொற்று நீக்கி திரவங்களும் வெளிச்சம் நிறுவனத்தின் ஊடாக நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன.

சுவிற்சர்லாந்து நாட்டின் தமிழ் பெண்கள் அமைப்பினரின் ஏற்பாட்டில் லிங்கமாஸ்டர் குடும்பத்தி னரின் நிதியுதவியில் இவை வழங்கப்பட்டுள்ளன. (ரி1-222)

## சமூக ஒப்பந்த யோசனை பிரதமரிடம் கையளிப்பு



கொழும்பு, ஜூலை 19

தேசிய இயக்கத்தால் தயாரிக்கப்பட்ட வலுவான அரசாங்கத்தை ஸ்தாபிக்கும் சமூக ஒப்பந்த யோசனை நேற்று முன்தினம் அலரிமாளிகையில் பிரதமரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.இவ்வாறான ஒப்பந்தம் சமர்ப்பிப்பது தொடர்பில், நவம்பர் 16 ஆம் திகதி தேசிய இயக்கத்துக்கு பிரதமர் தனது பாராட்டைத் தெரிவித்துள்ளார். இந்த நிலையில் ஐம்பெரும் யோசனைகள் அடங்கிய இந்த ஒப்பந்தம் தொடர்பில் கருத்து வெளியிட்ட கலாநிதி குணதாச அமரசேகர, ஐந்து வருடங்களின் பின்னர் நாட்டு மக்களுக்காக முழுமையான யோசனை ஒன்றைச் சமர்ப்பிப்பதற்கான சூழல் ஒன்று ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். அத்துடன், இந்த யோசனை செயற்படுத்தப்படும் என்ற பெரும் நம்பிக்கையிலேயே ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கையளிக்கப்பட்டது என கலாநிதி குணதாச அமரசேகர மேலும் தெரிவித்துள்ளார். இந்த சந்தர்ப்பத்தில் கலாநிதி மெதகொட அபய திஸ்ஸ தேரர் உட்பட மகா சங்கத்தினர் மற்றும் நவம்பர் 16 தேசிய அமைப்பைப் பிரதிநிதித்து வப்படுத்திய வல்லுநர்கள் சிலரும் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரி2)

# தனது விரிவுரையாளருக்காக போராடுமா யாழ்.பல்கலைக்கழகம்?

நிலாந்தன்





சில ஆண்டுகளுக்கு முன் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த மு.திருநாவுக்கரசுவின் நூல் வெளியீட்டு விழாவில் பேசிய அருட்தந்தை ஜெயசீலன் " இப்பொழுது தமிழ் மக்களுக்கு அறிவியல் சன்னியாசமே தேவைப்படுகிறது " என்று கூறியிருந்தார். அதாவது ஒரு புலமையாளர் தனது ஆன்மாவை இழந்து பதவிகளையும் பொறுப்புகளையும் பாதுகாத்துக் கொள்வதை விடவும் தனது பதவிகளையும் சுகங்களையும் துறந்து தனது ஆன்மாவை பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற பொருள்படவே அவர் அவ்வாறு கூறியிருந்தார்.

யாழ் பல்கலைக்கழகத்தின் சட்டத் துறை விரிவுரையாளரான குருபர னுக்கும் அறிவியல் செயற்பாட்டுச் சுதந்திரமா? அல்லது உத்தியோகமா? என்ற முடிவை எடுக்க வேண்டிய ஓர் அறிவியல் மற்றும் அரசியல் சூழல் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது.

பல்கலைக்கழகங்களில் ஆசிரியர்களாக இருக்கும் சட்டப் புலமையாளர்கள் தமது கடமை வேளைகளில் நீதிமன்றங்களில் வழக்குகளை முன்னெடுக்கக் கூடாது என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பரிந்துரைத்ததை முன்பிருந்த பேரவை அங்கீகரித்திருந்தது. அதற்கு எதிராக குருபரன் ஒரு வழக்கைத் தொடுத்திருந்தார். அந்த வழக்கு முடிவதற்கிடையிலேயே அவர் தன் பதவியைத் துறந்தி ருக்கிறார். அம்முடிவை எடுத்த பின் தான் முன்பைவிட நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் இருப்பதாக அவர் கூறுகிறார்.

ஈழத்தமிழர்கள் மத்தியில் சட்டத்தரணிகள் அதிகம் காணப்படும் ஒரு துறை அரசியல் துறையாகும். பெரும்பாலான தமிழ்க் கட்சிகளின் முன்னணி உறுப்பினர்களில் சட்டத்தரணிகள் பலர் உண்டு. பெரும்பாலான தமிழ் சட்டத்தரணிகள் இனப்பிரச்சினையை சட்டக் கண் கொண்டே பார்க்கிறார்கள். ஆனால் இனப்பிரச்சினை சாராம்சத்தில் ஓர் அரசியல் பிரச்சினை. அதை அரசியல் ரீதியாகத்தான் தீர்த்துக் கொள்ளலாம். அரசியல் எனப்படுவது சட்டம் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் கூட்டு ஒழுக்கமாகும். எனவே இனப்பிரச்சினைக்கு தீர்வை காண விழையும் அரசியல் தலைவர்கள் அதை முதலில் ஓர் அரசியல் பிரச்சினையாக விளங்கிக்கொள்ள வேண்டும்.

இனப்படுகொலைக்கு எதிரான நீதியைப் பெறமுடியாது என்று வாதிடும் பலரும் அதை ஒரு சட்ட விவகாரமாகவே பார்க்கிறார்கள். ஆனால் இனப்படுகொலைக்கு எதிரான பரிகார நீதியோ அல்லது நிலைமாறுகால நீதியோ இரண்டுமே சட்ட விவகாரங்கள் அல்ல. அவை அரசியல் விவகாரங்கள். இரண்டுமே அரசியல் நீதிகள் தான். ஈழத்தமிழர்கள் கேட்பது இனப்படுகொலைக்கு எதிரான பரிகார நீதியை. ஆனால் உலக சமூகமும் ஐ.நா.வும் வழங்கத் தயாராக இருப்பதோ நிலைமாறுகால நீதியை. இரண்டுமே அரசுகளின் நீதிகள்தான்.

தமிழ் அரசியலில் இப்பொழுது அதிகம் சர்ச்சைக்குள்ளாகி இருக்கும் சட்டத்தரணியாகிய சுமந்திரனும் இந்த விவகாரங்களை சட்டக் கண் கொண்டே பார்க்கிறார். நடந்தது இனப்படுகொலை என்பதனை சட்டப்படி நிரூபிக்கவேண்டும் என்று அவர் கூறுகிறார். இதுவிடயத்தில் அவர் ஒரு சட்டத்தரணியாகத்தான் காணப்படுகிறார். தனக்கு வாக்களித்த மக்களின் பிரதிநிதியாக அல்ல.

அதேசமயம் சுமந்திரனைப் போலவே கொழும்பு மையத்தில் வாழ்ந்த விக்னேஸ்வரன் அது இனப்படுகொலை என்று கூறுகிறார். இத்தனைக்கும் அவர் சுமந்திரன் இயங்கும் அதே நீதி பரிபாலன கட்டமைப்பில் மிக உயர் பதவிகளை வகித்தவர். பயங்கரவாதத் தடைச்சட்டத்தை தன்னுள் கொண்டிருக்கும் ஒரு நீதி பரிபாலனக் கட்டமைப்புக்குள் உயர் நீதிமன்ற நீதியரசராக இருந்தவர். அவர் கூறுகிறார் நடந்தது இனப்படுகொலை என்று. இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தை பயங்கரவாதம் என்று கூறுகிறது. ஆயுதம் இல்லாத போராட்டங்களையும் எப்படி பயங்கரவாத தடைச் சட்டத்துக்குள் சிக்க வைக்கலாம் என்று சிந்திக்கிறது. இலங்கை அரசாங்கம் மட்டுமல்ல உலகில் உள்ள பெரும்பாலான நாடுகள் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தை பயங்கரவாதம் என்றே கருதுகின்றன. இப்படிப்பட்ட ஒரு பின்னணியில் ஒரு முன்னாள் உயர் நீதிம்ன்ற நீதியரசர் நடந்தது இனப்படுகொலை என்று சொல்லும்போது அதற்கு அதிகரித்த அழுத்தம் இருக்கும். அந்த வார்த்தைகளுக்கு அரசியல் சட்ட மற்றும் ராஜீய அந்தஸ்தும் அதிகம் என்று மு.திருநாவுக்கரசு கூறுகிறார்.

கூட்டமைப்பு ஐநாவின் நிலைமாறுகால நீதியை ஏற்றுக் கொண்டுள்ளது. நிலைமாறுகால நீதியின் கீழ் இலங்கைத்தீவின் நீதி பரிபாலன கட்டமைப்புக்கு ரணில் விக்ரமசிங்கவோடு சேர்ந்து கூட்டமைப்பும் வெள்ளை அடித்தது. மாறாக நிலைமாறுகால நீதிச் சூழலுக்குள் இலங்கைத்தீவின் நீதிபரிபாலன கட்டமைப்பை பரிசோதிக்கும் விதத்திலான எத்தனை வழக்குகளை கூட்டமைப்பு நீதிமன்றங்களில் தாக்கல்செய்திருக்கிறது?

இவ்வாறு இலங்கைத்தீவின் நீதிபரிபாலன கட்டமைப்பின் விரிவை, நேர்மையை சோதனைக்கு உள்ளாக்கும் ஒரு வழக்கை குருபரன் முன்னெடுத்தார். நாவற்குழியில் ஒரு சுற்றிவளைப்பின் பின் காணாமல் ஆக்கப்பட்ட சாதாரண தமிழ் மக்கள் தொடர்பான வழக்கு அது.

அந்த வழக்கில் அவருடைய ஈடுபாட்டை பலவீனப்படுத்தும் நோக்கத்தோடுதான் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அவருடைய தொழில் சார்ந்து அப்படியோர் அறிவித்தலை விட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. தவிர தமிழ் பகுதிகளில் முதன் முதலாக தொடங்கப்பட்ட மூலோபாய கற்கைகளுக்கான ஒரு சிந்தனைக் குழாமான 'அடையாளம்' நிறுவனத்தின் தலைவர் என்ற அடிப்படையில் அவர்மீது அழுத்தங்களை பிரயோகிப்பதும் அரசாங்கத்தின் நோக்கம் என்று கருதப்படுகிறது.

அதாவது பொழிவாகச் சொன்னால் நிலைமாறுகால நீதியின் கீழ் இலங்கைத் தீவின் நீதி பரிபாலன கட்டமைப்பின் விரிவை, நேர்மையை பரிசோதிக்க முற்பட்ட ஒரு சட்டப் புலமையாளர் இப்பொழுது தனது தொழிலைத் துறக்கும் நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இது விடயத்தில் அவர் வேலைசெய்யும் பல்கலைக்கழக ஆசிரிய சமூகமும் மாணவ சமூகமும் அவருக்காக போராடவில்லை. ஒரு சட்டப் புலமையாளர் தனது புலமைச் செயற்பாட்டு சுதந்தி ரத்துக்காக போராடும் ஒரு விடயத்தில் யாழ் பல்கலைக்கழகம் ஏன் பேசாமல் இருந்தது?

பல்கலைக்கழகம் இது விடயத்தில் மட்டுமல்ல இதற்கு முன்னரும் கடந்த 11 ஆண்டுகளாக பேசாமல் தான் இருந்து வருகிறது. பல்கலைக்கழகத்தின் நுண்கலைத் துறையை சேர்ந்த விரிவுரையாளர் கண்ணதாசன் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் இருக்கிறார். அவர் தொடர்பாக பல்கலைக்கழகம் எந்த எதிர்ப்பையும் காட்டவில்லை. அவர் புலிகள் இயக்கத்தில் போராளியாக இருந்து புனர்வாழ்வளிக்கப்பட்டு, விடுவிக்கப்பட்டவர். ஒரே நீதி பரிபாலனக் கட்டமைப்புக்குள் ஒருமுறை புனர்வாழ்வு அளிக்கப்பட்ட அவருக்கு இரண்டாவது தடவையும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. (மறுபக்கம் பார்க்க)

**இது ஒரு தேர்தல் காலம். தேர்தலுக்கு இன்னமும் மூன்று கிழமைகளே உண்டு. ஆனால் மக்களுக்கு வழிகாட்டும் அறிக்கை எதையும் மாணவ சமூகம் இன்று வரையிலும் வெளியிடவில்லை. எப்படிப்பட்ட ஓர் அறிக்கையை வெளியிடுவது என்பதில் மாணவ ஒன்றியத்துக்குள் ஒருமித்த கருத்து இல்லை என்று கூறப்படுகிறது. தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்று ஒரு தரப்பு கேட்கிறது . இன்னொரு தரப்பு அது தேவையில்லை என்று கூறுகிறதாம். இதுதான் யாழ் பல்கலைக்கழகம். இப்படிப்பட்ட துர்ப்பாக்கியமான ஓர் அரசியல் மற்றும் அறிவியற் சூழலில் குருபரனுக்காக பல்கலைக்கழகம் போராடும் என்று எதிர்பார்க்கலாமா?**

*(தொடர்ச்சி)*

ஏனெனில் புனர்வாழ்வு ஒரு தண்டனை அல்ல என்று கூறப்படுகிறது. இது தொடர்பில் தமிழ் சட்ட விற்பன்னர்கள் யாருமே கேள்வி எழுப்பவில்லை. குறிப்பாக நிலைமாறுகால நிதியின் கீழ் ரணில் விக்ரமசிங்கவின் காலத்தில் புனர்வாழ்வு ஒரு தண்டனையா இல்லையா என்ற முடிவை எடுத்திருக்க வேண்டும். ஆனால் நிலைமாறுகால நீதிக்கு ஒப்புதலை கொடுத்த கூட்டமைப்பின் சட்ட விற்பன்னர்கள் யாருமே அதை கேள்விக்குட்படுத்தவில்லை.

கண்ணதாசனுக்காக அவருடைய மாணவர்களும் போராடவில்லை. சக ஆசிரியர்களும் போராடவில்லை. அதன்பின் முன்னாள் துணைவேந்தர் திடீரென்று பதவி இறக்கப்பட்டார். ஒரு இடைநிலைப் பள்ளியின் அதிபரைக் கூட அப்படிப் பதவி நீக்க முடியாது. மாணவர்கள் ஒழுங்கு படுத்திய ஒரு விழாவில் நாட்டுக்கு விரோதமான வாசகங்கள் எழுதப்பட்ட ஒரு விரு தைத் துணைவேந்தர் ஒரு வெளிநாட்டு விருந்தா ளிக்கு வழங்கினார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே அவ்வாறு பதவி நீக்கப் பட்டதாகக் கூறப்படுகிறது. அதற்காகவும் பல்கலைக்கழகம் போராடவில்லை.

அதன்பின் தடை செய்யப்பட்ட அமைப்பின் தலைவரின் படத்தை வைத்திருந்ததாக கூறி இரண்டு பல்கலைக்கழக மாணவ தலைவர்களின் மீது பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்பட்டது. அவர்கள் இருவரும் இப்பொழுது படிப்பை முடித்து விட்டார்கள். ஒரு மாணவ சமூகமாக இருந்த பொழுது அவர்கள் மீது தொடுக்கப்பட்ட வழக்கு இப்பொழுது அவர்கள் உதிரிகளாக வெளிவந்த பின்னரும் அவர்களைப் பின் தொடர்கிறது. அவர்களை அந்த வழக்கில் இருந்து விடுவிப்பதற்காக பல்கலைக்கழகம் போராடவில்லை. மாறாக அது விடயத்தில் மாணவ சமூகம் அரசாங்கத்தோடு ஒரு 'டீலுக்கு' போக முயற்சித்ததாகவும் தகவல் உண்டு.

கடந்த 11 ஆண்டுகளாக யாழ். பல்கலைக்கழகம் போராடத் திராணியற்று தத்தளித்துக் கொண்டிருக்கிறது. நினைவு கூர்தலை சாகச உணர்வோடு முன்னெடுத்ததைத் தவிர பல்கலைக்கழக மாணவர்கள் முன்னின்று நடத்திய பெரும்பாலான போராட்டங்கள் வெற்றிபெறவில்லை. குறிப்பாக அரசியல் கைதிகளின் விடயத்தில் சில ஆண்டுகளுக்கு முன்பு மாணவர்கள் கால்நடையாக அநுராதபுரத்துக்கு சென்றார்கள். ஆனால் கைதிகளை விடுவிக்க முடியவில்லை.

கடந்த ஆண்டு பல்கலைக்கழக மாணவர்கள் ஐந்து கட்சிகளை ஒருங்கிணைத்து ஓர் ஐக்கியத்தை ஏற்படுத்த முயற்சித்தார்கள் ஆனால் உடன்பாட்டில் கையெழுத்திட்ட கட்சிகள் உடன்பாட்டை மீறியபோது அவற்றைக் கட்டுப்படுத்த மாணவர்களால் முடியவில்லை.

ஜே.வி.பி.யின் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த சந்திரசேகரன் ஒருமுறை சொன்னார் " இலங்கைத் தீவிலேயே அதிகம் போராட வேண்டிய தேவையுள்ள ஒரு பல்கலைக்கழகம், யாழ் பல்கலைக்கழகம் தான். ஆனால் இலங்கைத் தீவிலே போராடும் சக்தியற்ற பல்கலைக்கழகமும் அதுதான்" என்ற தொனிப்பட.

இலங்கைத்தீவில் பல்கலைக்கழக விடுதியில் வசிக்கும் சிங்கள மாணவர்களுக்கு படைத்தரப்பு உணவுப் பொதிகளை வழங்கியது யாழ் பல்கலைக்கழகத்தில் தான். வெசாக் கொண்டாட்டங்களை படைத்தரப்பு முன்னின்று ஒழுங்கமைப்பதும் யாழ் பல்கலைக்கழகத்தில் தான். அரசாங்கத்துக்கு எதிராக போராடிய காரணத்துக்காக சில மாணவர்கள் புனர்வாழ்வுக்கு அனுப்பப்பட்டதும் யாழ் பல்கலைக்கழகத்தில் தான். ஒரு படத்தை வைத்திருந்ததற்காக இரண்டு மாணவர்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டதும் யாழ். பல்கலைக்கழகத்தில் தான்.

கடந்த 11 ஆண்டுகளாக யாழ் பல்கலைக்கழகம் போராட முடியாது திணறிக் கொண்டிருக்கிறது. அதற்கு தலைமை தாங்க எந்தக் கட்சியாலும் முடியவில்லை. எந்த அரசியல் இயக்கத்தாலும் முடியவில்லை. பல்கலைக்கழக மாணவர்கள் ஒரு போராட்டத்தை முழுமையாக முன்னெடுப்பதில்லை. ஓர் அரசியல் இயக்கம் அல்லது கட்சிதான் மாணவர்களை முன்னணிப் படையாக நிறுத்தி போராட்டத்தை முன்னெடுப்பதுண்டு. ஆனால் எந்த ஒரு தமிழ் கட்சிக்கும் பல்கலைக்கழகத்தில் மாணவர் அமைப்பு கிடையாது.

இது ஒரு தேர்தல் காலம். தேர்தலுக்கு இன்னமும் மூன்று கிழமைகளே உண்டு. ஆனால் மக்களுக்கு வழிகாட்டும் அறிக்கை எதையும் மாணவ சமூகம் இன்றுவரையிலும் வெளியிடவில்லை. எப்படிப்பட்ட ஓர் அறிக்கையை வெளியிடுவது என்பதில் மாணவ ஒன்றியத்துக்குள் ஒருமித்த கருத்து இல்லை என்று கூறப்படுகிறது. தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்று ஒரு தரப்பு கேட்கிறது . இன்னொரு தரப்பு அது தேவையில்லை என்று கூறுகிறதாம். இதுதான் யாழ் பல்கலைக்கழகம். இப்படிப்பட்ட துர்ப்பாக்கியமான ஓர் அரசியல் மற்றும் அறிவியற் சூழலில் குருபரனுக்காக பல்கலைக்கழகம் போராடும் என்று எதிர்பார்க்கலாமா? அறிவுஜீவியாக இருப்பதே தனது விருப்பத் தெரிவு என்று குருபரன் கூறுகிறார். ஆனால் இலங்கைத்தீவின் அரசியல் மற்றும் அறிவியல் சூழலானது அவரை ஒரு சட்டச் செயற்பாட்டாளராக வாழுமாறு தூண்டுகின்றதா?




# மாபெரும் தேரேறி வரும் மாவைக்கந்தன்

மதுரகவி காரை எம்.பி அருளானந்தன்



ஈழத்தில் பிரசித்தி பெற்று விளங்கும் முருகன் ஆலயங்களுள் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம் சிவாகம பத்ததி முறையிலான வழிபாட்டு மரபுகளை தன்னகத்தே கொண்டு விளங்கும் முருக திருத்தலமாகும். யாழ்ப்பாண திருநகரில் நல்லூர்க் கந்தசுவாமி கோவில், தொண்டைமனாறு செல்வச்சந்நிதி, மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், கந்தவனக்கடவை முருகன் ஆலயம், மண்டூர் முருகன் ஆலயம், வெருகல் சித்திர வேலாயுத சுவாமி ஆலயம் ஆகியன கீர்த்திமிக முருகத் திருத்தலங்களாகும். ஈழமணித் திருநாட்டின் சிகரமெனச் சிறந்தது அதன் வடபாலுள்ள யாழ்ப்பாணமென்னும் திவ்விய திருநகர். அந்தத் திருநகரின் கடல் மருங்கில் "கண்டகி" எனும் புனித தீர்த்தம் உள்ளது. அது கீரிமலை எனும் சிறப்புத் திருநாமத்தோடு வழங்கப்படுகின்றது.

### நகுலேஸ்வரப் பெருமான்

கீரிமுகமுடைய நகுலமுனிவர் எனப்படும் முனிசிரேட்டர் ஒருவர் அந்தத்தீர்த்தத்துள் நீராடி ,அதன் மருங்கிற் கோவில் கொண்டருளும் திருத்தம்பலேசுவரி சமேத திருத்தம்பலேசுவரப் பெருமானை வழிபட்டுத் தமது கீரிமுகம் மாறப் பெற்றார் என்பது ஐதீகம். கீரிமலை எனும் பெயருக்குக் காரணம் இந் நிகழ்சி என்பது வழக்கு. அம் முனிவரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட மூர்த்தியே நகுலேஸ்வரப்பெருமான் என்பர். ஆயினும் திருத்தம்பலேசுவரம் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்டது. இப் போதுள்ள சிவாலயம் நல்லைநகர் நாவலர் பெருமான் கருத்தினடிப்படையில் இற்றைக்கு நூறு வருடங்களில் முன் அமைக்கப்பட்டது. குன்மநோயும், குதிரை முகமும் கொண்டவனாகிய திசையுக்கிர சோழனின் மகள் மாருதப்புரவீக வல்லி என்னும் இளவரசி, சோழ நாட்டினின்றும் தரிசனம் செய்யும் நியமம் பூண்டு அதன் பயனாக நோயும் நீங்கி முகமும் மாறப் பெற்றாள் என்பது மற்றோர் வரலாறு.

### குமாரத்திபள்ளம்

அவள் தங்கியிருந்த இடம் குமாரத்தி பள்ளம் என இன்றும் வழங்கப்படுகின்றது. அவள் அரசிளங்குமாரியாதலிலால் தான் சேமமாக வாழ ஓர் அரண்மனை அமைத்திருந்தாளென்றும், அவ்வரண்மனைக்கருகே அவள் தோற்றுவித்த தடாகமே மகாஓளதாரியப் பிரபுவாகிய திரு.சர.சிவானந்த பிள்ளை அவர்களின் வீட்டின் கீழ் , தூர்ந்த நிலையில் இன்றும் காணப்படும் தடாகம் என்றும் கூறுவர்.

### மாவிட்டபுரம்


எவ்விடத்தில் அவளது குதிரைமுகம் மாறியதோ அவ்விடம் மாவிட்டபுரம் என வழங்கப்படுகிறது (மா –குதிரை ,விட்ட– நீங்கிய, புரம் – நகரம்) இளமை எழில் நலம் தனக்கு வாய்த்த போது அவளுக்கு அந்நலம் என்றும் அமைந்த முருகப்பெருமானின் எண்ணம் வந்தது போலும் அதனால் முகம் மாறிய அவ்விடத்தில் முருகனுக்கு ஆலயம் எடுக்கக் கருதி, அக் கருத்தைத் தன் தந்தைக்குத் தெரிவிக்க ,அவன் மகிழ்ந்து ஆலய அமைப்புக்கு வேண்டிய யாவற்றையும் விக்கிரகங்களையும், தொழிலாளர்களோடும், சிதம்பரம் தீட்சிதர்களாகிய பெரிய மனத்துள்ளார், சின்ன மனத்துள்ளார் என்னும் அந்தணப் பெரியார்களோடும் அனுப்பி வைத்தனர். ஆலயம் சிவாகம முறைப்படி அமைக்கப்பட்டது. அவளால் பிரதிட்டை செய்யப்பட்ட மூர்த்தியே இன்றும் நாம் வழிபாடு செய்யும் மூர்த்தியாகும். அன்றிலிருந்து சிவாகம முறைப்படி நித்திய பூசைகளும், வெள்ளிக்கிழமை, கார்த்திகை நட்சத்திரம் பொருந்திய நாள் ஆகிய காலங்களில் விசேட பூசைகளும், வருடந்தோறும் ஆடி அமாவாசையன்று இருபத்தைந்தாம் திருவிழாவாகிய தீர்த்தத் திருவிழாவும் அதற்கு முதல் நாள் தேர்த்திரு விழாவும், அமைய ஒழுங்காக நடைபெற்று வருகின்றன.

### பஞ்ச இரதங்கள்

முருகப்பெருமானின் திருவருளோடு 24வது விழாவாகத் தேர்ப்பவனி உற்சவம் நடைபெறும். சண்முகப்பெருமானின் மகோன்னதமான மாபெரும் தேரை மையமா[illegible] வைத்து முத்துக்குமார சுவாமி, மீனாட்சி சமேத சுந்தரேசர், சண்டேஸ்வரர் ஆகிய ஐ[illegible] பெரும் மூர்த்திகளும் தனித் தனித் தேர்களில் பவனிவரும் திருக்காட்சி அற்புதமான[illegible] சண்முகப் பெருமானின் அற்புதமான தேர் இலங்கையில் முதன் முதல் 1892 ல் [illegible] அடி உயரத்தோடு செய்யப்பட்டது.

### முக உத்தரதிருத்தேர்

முருகப்பெருமானின் திருவருளால் மீண்டும் 28.07.2019ல் இவ் திவ்விய திருத்[illegible]லத்தில் 21 ஆம் நூற்றாண்டின் வரலாற்று பதிவாக ஈழநாட்டின் மிகப்பெரிய இரதமா[illegible] 45 அடி உயரமாகிய "முக உத்தர" திருத்தேர் வெள்ளோட்டம் கண்டு மறுதின[illegible] மாவைக்கந்தனை சுமந்துவந்த திருக்காட்சி எல்லோர் மனங்களிலும் பதிவானது.



மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தின் தேர்த்திருவிழா இன்றாகும், அதனையொட்டி மாவிட்டபுர ஆலயத்தின் பெருமைகளைச் சொல்லும் இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.

# மாவைப்பெருங்கோயில்

■ தியாக. மயூரகிரிக்குருக்கள்
(ஆசிரியர், இந்துசாதனம்)

மா என்ற தமிழ்ச்சொல் சுமார் முப்பதுக்கும் மேற்பட்ட பொருள் தர வல்லது. யாழ்ப்பாணத்தின், பழைமையான ஊரான மாவிட்டபுரம் அதில், முக்கியமான இரண்டு பொருள் தருவதாக கொள்வர்.

மா+ விட்ட + புரம்

1. சூரனாகிய மா மரத்தை இரு கூறாக்கிய பின் இறைவன் எழுந்தருளிய தலம்.

2. மாருதபுரவீகவல்லி என்ற சோழ இளவரசியின் குதிரை (மா) முக குன்மநோய் அகற்றிய தலம்.

இத்தலம் (மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்) பொதுயுகத்துக்குப் பின் (கி.பி) 789 ஆம் ஆண்டு (8 ஆம் நூற்றாண்டு) மன்னர்களால் கட்டப்பட்டது.

அப்பொழுது மதுரையரசன் திசையுக்கிரப் பெருவழுதியின் ஆணையால் சிதம்பர தீக்ஷிதரான பெரியமனதுள்ளார் மாவிட்டபுரத்துக்கு அழைத்து வரப்பெற்றார்.

இவ்வாறு சிதம்பரத்திலிருந்து வந்த தீக்ஷிதர்களுக்கு பரம்பரையாக மாவை ஆதீன முதல்வர்களாக மாவிட்டபுரக்கோயிலை நிர்வகிக்க ஆணையும், “மஹா ராஜ ஸ்ரீ “ என்ற விருதும் உக்கிரசிங்கசேனன் என்ற சோழ அரசனால் வழங்கப்பட்டது. இந்நிலையில் 16ஆம் நூற்றாண்டில் ஆலயம் பறங்கியரால் இடித்தழிக்கப்பட்டது. மீண்டும் ஆலயம் 32ஆம் தலைமுறை சபாபதிதீக்ஷிதரால் 1782ல் கட்டப்பட்டது.

இந்த மாவையாதீன மரபில் வந்தவரே இரத்தினக் குருக்கள் என்றும் சுப்பிரமணிய தீக்ஷிதர் என்றும் அழைக்கப்பட்ட சுப்பிரமணியக்குருக் கள்.

ஓரடிப்பாதையாக இருந்த மாவிட்டபுரம் கீரிமலை பெருவீதி சுப்பிரமணியக்குருக்களின் முயற்சியால் ஆங்கிலேய அரசால் பெருவீதியாக்கப்பட்டது. மாவையாதீனத்தை நெறிப்படுத்தி கோயிலை ஒரு பெருங்கோயிலாக வளர்த்தெடுத்தது இவரே என்பர். கலை ஈடுபாடு மிக்க சுப்பிரமணியக்குருக்களால் மாவிட்டபுரம் கோயிலில் கலைநிகழ்வுகளும், கதாபிரசங்கங்களும், இசைக்கச்சேரிகளும், கிராமிய நடனங்களும் நிகழ்த்து விக்கப்பட்டன. புராண படன வல்லுனரான சுப்பிரமணி யக்குருக்கள் திருச்செந்தூர் புராணத்தில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தார். கோயிலில் ஆண்டு தோறும் ஈழத்தின் சிறந்த நாதஸ்வரக்கலைஞருக்கு “தங்க நாதஸ்வரம்” வழங்கி கௌரவிக்கும் வழக்கத்தை ஏற்படுத்தி மங்கள இசை மரபு இலங்கையில் வளர உதவினார்.


இலங்கையில், தவில் நாதஸ்வர இசை முதன்முதலில் தோன்றிய தலம் இதுவே என்பர்.

பெரும் பூச்சப்பரச் சோடனைகளை சுப்பிரமணியக்குருக் க ள் உருவாக்கினார். இந்த பூஞ்சப்பர சோடனை மாவிட்டபுரத்தில் தானாம் உருவாயிற்று.

1934ல் வள்ளி திருமணம் என்றொரு நாடகத்தை சுப்பிரமணியக்குருக்கள் தாமே எழுதி மேடையேற்றினார். இதில் வந்த வருமானம் மூலம் கோயிலில் மின்னொளி ஊட்டினார். வட மாகாணத்தில், மின் ஒளியூட்டப்பட்ட முதற் கோயில் மாவிட்டபுரமானது. ஆங்கிலேய தேசாதிபதிகள் போல இரட்டைக்குதிரை பூட்டிய வண்டிலில் சுப்பிரமணியக்குருக்கள் பயணிப்பாராம். இது அக்காலத்தில் பொதுமக்களிடையே ஒரு பிரமிப்பை தந்தது.

ஒரு கிறிஸ்தவ தம்பதியர் குருக்களின் ஆசி பெற்று பெற்ற குழந்தையை கோயிலுக்கு கொண்டு வந்தனர். அக்குழந்தைக்கு குருக்கள் சண்முகநாதன் என பெயரிட்டார். அவரே இலங்கை வானொலி புகழ் சானா என்ற சண்முகநாதன்.

சுப்பிரமணியக்குருக்கள் 1943ல் சிவப்பேறு பெற்றார். அவரது மரபார் மாவையாதீன முதல்வர்களாக மாவிட்டபுரம் பெரிய கோயில் அறங்காவலர்களாக இன்று வரை பணியாற்றுகின்ற னர். இலங்கையில் முதல் ராஜகோபுரம், முதல் வெள்ளிக் கொடிமரம் என்று மாவைப்பெருங்கோயில் பொலிவுற்றது. அக்காலத்தில், தங்கத்தாலான முத்துக்குமார சுவாமி விக்கிரகம் ஒன்றும் இருந்தாகச் சொல்கிறார்கள். இவ்வாறாக, சுமார் 70 ஆண்டுகளுக்கு முன் (1950களில்) ஈழத்தின் வேத சிவாகம மரபுத்திருத்தலங்களில் தலைமைத்தலமாக மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலே விளங்கியிருக்கிறது. 1990 களின் ஆரம்பத்தில் ஏற்பட்ட பேரிடப்பெயர்வும், தொடர்ந்து பல வருடங்கள் கோயிற்சூழலை அணுக இயலாத நிலை ஏற்பட்டமையும், இன்ன பிற காரணங்களும் கோயில் வளர்ச்சியிலும் எழுச்சியிலும் தாக்கம் செலுத்தி விட்டன.



எவ்வாறாயினும், தற்போதைய ஆதீன கர்த்தர் மஹாராஜஸ்ரீ ஷ. இரத்தினசபாபதி தீக்ஷிதரும், அவரது குமாரர் திருப்பரங்குன்றத்தில் முறையாக வேதாகமங்களை பயின்ற ஞானஸ்கந்தசர்மாவும் மீண்டும் திருக்கோயிலை பழைய நிலை நோக்கி திருப்ப பெருமுயற்சி செய்கிறார்கள்.

பெரிய பெரிய சுதை வடிவங்கள், நெடிதுயர்ந்த மதில்கள், என்று பழைய பெரு வடிவத்திலேயே கோயில் மீளுருவாக்கம் செய்யப்பட்டு வருகிறது.


பழைமையான மகோத்திர மகாரதம் யுத்த காலத்தில் அழிவடைந்ததால், சென்ற ஆண்டு (2019) அதை விட உயரமாக, தனித்துவமாக மகோத்திரப் பெருந்தேர் அமைக்கப்பட்டு வெள்ளோட்டம் கண்டிருக்கிறது.

கடந்த மூன்று தசாப்தங்களாக மகாகும்பாபிஷேகம், கொடியேற்ற மகோத்ஸவம் என்பவற்றை காணாதிருக்கும் மாவைப்பதி வரும் ஆண்டுகளிலேனும் அவற்றை காண வேண்டும் என்பதே அனைவரதும் அவா.

மாவைப்பெருமானை பாடாத யாழ்ப்பாணப்புலவர் இல்லை என்ற அளவுக்கு இப்பெருமான் பேரில் பல்வேறு பிரபந்தங்கள் நிரம்பவே இருக்கின்றன. அருணகிரியார் காலத்தில் இத்தலம் அருக்கொணாமலை என வழங்கியது என்றும், அவ்வாறே திருப்புகழ் அருளினார் என்றும் ஒரு குறிப்பும் உண்டு.

தணிகைமணி வ.சு.செங்கல்வராய பிள்ளையின் குறிப்பும் (நகுலேசுவரம் அருகில்) அவ்வாறே கருதுவதாக உணர முடிகிறது.

துரகானன விமோசன புரி என்றும் போற்றப்படும். இத்தலம் மாருதப்புரவீகவல்லி என்ற சோழ இளவரசியின் குதிரை முகம் (மாமுகம்/துரகானனம்) காட்டிய குன்ம நோய் விலகிய தலம். அது மட்டுமல்ல, இந்து மகா சமுத்திரத்தில், சூரபதுமனான மா மரத்தை அறுத்து வெற்றி பெற்ற வெற்றி பெருமான் எழுந்தருளிய மகா ஸ்தலம். இத்தல பெருவிழா ஆடி அமாவாசையை நிறைவு நாளாக கொண்டு 25 நாட்கள் நிகழ்வது வழமை. அவ்வகையில், இந்த (2020) ஆண்டு நடைபெற்று வரும் பெருவிழாவில், இன்று (19.07.2020) ஞாயிறன்று மகோத்திர மகாரத பவனியும், திங்கட்கிழமை கண்டகி மகா சமுத்திர தீர்த்த விழாவும் நிகழவுள்ளன. நம் பெருமானான வள்ளி மணாளன் மாவைக்கந்தன் அருளால் அவனடியார்கள் உலகில் நோயற்ற வாழ்வும் வளமும் காண பிரார்த்திப்போம். ■



## புகைப்பிடித்தலை குறைத்தது கொரோனா

லண்டன், ஜூலை 19

கொரோனாத் தொற்று பரவியதைத் தொடர்ந்து 2 மில்லியனுக்கும் அதிகமானோர் புகைப்பிடிப்பதை நிறுத்தியுள்ளனர் என ஆய்வில் தெரியவந்துள்ளது.

பிரித்தானிய பல்கலைக்கழகமொன்றினால் ஏப்ரல் 15 ஆம் திகதி முதல் ஜூன் 20 ஆம் திகதி வரையான காலப்பகுதியை அடிப்படையாகக் கொண்டு 10,000 பேரிடம் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இதில் கடந்த 4 மாதங்களில் 41 வீதமானோர் புகைப்பிடிக்கும் பழக்கத்தை கைவிட்டுள்ளனர் என தெரியவந்துள்ளது. புகைப்பிடிப்பதால் கொரோனா தொற்று வேகமாகப் பரவும் அபாயமுள்ளதாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பலர் புகைப்பிடிப்பதைக் கைவிட்டுள்ளனர் என ஆய்வின் முடிவுகளில் கண்டறியப்பட்டுள்ளது. (ரி1)

# பிரிட்டன் திரும்பவுள்ள ஷமீமா பேகம்

### கைதுசெய்யக் காத்திருக்கும் அரசு

**லண்டன், ஜூலை 19**

**பிரிட்டன் குடியுரிமை பறிக்கப்பட்ட ஷமீமா பேகம் நாடு திரும்ப வேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்துவிட்ட நிலையில் அவரைக் கைது செய்ய பிரிட்டன் அரசு காத்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.**



இங்கிலாந்தை சேர்ந்தவர் ஷமீமா பேகம் 15 வயதில் மாணவியாக இருக்கும் போது ஐ.எஸ் அமைப்பில் சேருவதற்காக சென்றார். அங்கு ஒருவரை மணந்து அவரது மூன்று பிள்ளைகளுக்குத் தாயான ஷமீமாவின் இங்கிலாந்து குடியுரிமையை உள்துறை அலுவலகம் பறித்தது.

ஆனால், அவரது சார்பில் சிவில் உரிமைகள் குழு ஒன்று அவரது குடியுரிமை பறிக்கப்பட்டமை சர்வதேச விதிகளின்படி சட்டவிரோதம் என்று கூறி வழக்கு தொடர்ந்தது.

மேல் முறையீட்டு நீதிமன்றம் ஷமீமாவுக்கு சாதகமாக குடியுரிமை தொடர்பான வழக்குக்காக அவர் இங்கிலாந்து திரும்ப வேண்டுமென்று தீர்ப்பளித்துள்ளது.

அதேநேரத்தில் ஷமீமா பிரிட்டனுக்குள் நுழைந்ததும் ,பயங்கரவாத குற்றங்களுக்காக அவர் கைது செய்யப்பட்டு விசாரணைக் குட்படுத்தப்படுவார் என தகவல்கள் வெளியாகியுள்ளன. (ரி1)

## சீனாவில் 22 புதிய தொற்று

சீனாவில் புதிதாக 22 பேருக்குக் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சீனாவில் கடந்த 24 மணி நேரத்தில் 22 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. மேற்குப் பகுதியில் உள்ள சின்ஜியாங் மாகாணத்தின் உரும்க்யூ நகரில் 16 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் 11 பேருக்கு எந்த வித அறிகுறியும் இல்லாமல் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது. இவர்கள் அனைவருக்கும் உள்ளூரிலேயே கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி1)

## முகக்கவசம் அணிய உத்தரவிடேன்



### ட்ரம்ப் பிடிவாதம்

வொஷிங்டன், ஜூலை 19

முகக்கவசம் அணிவதை கட்டாயப்படுத்தப்போவதில்லையென அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

முக்கவசம் அணிதல் கட்டாயமென அமெரிக்க வைத்திய குழுவின் பிரதானி என்டனி பௌசி அறிவித்திருந்தார். எனினும் அவரது கருத்துக்கு தன்னால் இணங்க முடியாதென அமெரிக்க ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். இதேவேளை அமெரிக்க மாநில ஆளுநர்கள், முகக்கவசம் அணியுமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ரி1)

## 24 மணி நேரத்தில் 2,37,743 பேருக்குத் தொற்று

கடந்த 24 மணி நேரத்தில் உலகம் முழுவதும் 2,37,743 பேருக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து உலக சுகதார அமைப்பு வெளியிட்ட அறிக்கையில், உலகம் முழுவதும் கடந்த 24 மணி நேரத்தில் இதுவரை இல்லாத அளவு அதிகபட்சமாக 2,37,743 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1.4 கோடியாக அதிகரித்துள்ளது. (ரி1)



### கொரோனாவால் விபரீதம்

## 1 இலட்சம் 'மின்க்'கள் கூண்டோடு சமாதி!

மாட்ரிட், ஜூலை 19

ஸ்பெய்னின் வடகிழக்குப் பகுதியில் உள்ள பண்ணையொன்றில் உள்ள சுமார் ஒரு இலட்சம் மின்க் எனப்படும் அரை நீர்வாழ் உயிரினங்களைக் கொல்லுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த மே மாதத்தில் பண்ணை ஒன்றில் வேலை செய்யும் ஊழியர் ஒருவரின் மனைவிக்கு தொற்று ஏற்பட்டதையடுத்து, பெண்ணின் கணவருக்கும் ஆறு பண்ணை ஊழியர்களுக்கும் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதனையடுத்து, அங்கு வளர்க்கப்படும் மின்க் உயிரினங்கள் அனைத்தும் தனிமைப்படுத்தி தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டன.

இந்த நிலையில், கடந்த 13 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில், குறித்த பண்ணையிலிருந்த மின்க்களில் 87 வீதமானவைக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் அந்தப் பண்ணையிலுள்ள 92,700 விலங்குகளையும் கொல்லுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. விலைமதிப்பில்லாத உரோமத்துக்காக இவை வளர்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ரி1)

### அதே கறுப்பினத்தவர்

## அதே கைது!

லண்டன், ஜூலை 19

ஜோர்ஜ் பிளொயிட்டைக் கைது செய்தது போன்று லண்டனில் கறுப்பினத்தைச் சேர்ந்த ஒருவரை கைது செய்யும் காணொலி வெளியானது. இந்த காணொலி பொதுமக்கள் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தியிருந்தது. அதைத் தொடர்ந்து காணொலியிலுள்ள பொலிஸ் அதிகாரி ஒருவர் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். (ரி1)



## சமூக வலைத்தளங்களின் அழுத்தம் மரண தண்டனையை நிறுத்திய ஈரான்

தெஹ்ரான், ஜூலை 19



ஈரானில் இளைஞர்கள் மூவருக்கான மரணதண்டனை சமூக வலைத்தளங்களினூடான தொடர்ச்சியான அழுத்தங்களால் நிறுத்தப்பட்டுள்ளது.

கடந்த வருடம் நவம்பர் மாதம் ஈரானில் பெற்றோல் விலையேற்றத்துக்கு எதிராகவும், அரசாங்கத்துக்கு எதிராகவும் போராடிய இளைஞர்கள் மூவர் கைதுசெய்யப்பட்டனர். அவர்களுக்கு எதிராக தேசத்துரோக வழக்கு பதிவுசெய்யப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டது. அதற்கு எதிராக சமூக வலைத்தளத்தில் தொடர்ச்சியான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன.

25 லட்சத்துக்கும் மேற்பட்டோர் தமது கருத்துக்களை பதிவுசெய்திருந்தனர். இதனால் மூவரினது மரணதண்டனையை ஈரான் அரசாங்கம் இடைநிறுத்தி வழக்கை மீள விசாரிக்க உத்தரவிட்டுள்ளது. (ரி1)

## நுழைவாயில் பந்தல்கள் இளைப்பாறுவதற்கே!

யாழ்ப்பாணம்,ஜூலை 19

நல்லூர் நுழைவாயிலில் அமைக்கப்படும் பந்தல்கள் பக்தர்கள் இளைப்பாறுவதற்கு மட்டுமானது. அங்கு தாகசாந்திகள் வழங்குவதற்கு தடை செய்யப்பட்டுள்ளது என்று யாழ்.மாநகர பதில் முதல்வர் து.ஈசன் தெரிவித்தார்.

நாட்டில் தற்போது நிலவும் கொரோனா அச்சம் காரணமாக மக்கள் ஒன்றுகூடுவதைத் தவிர்க்குமாறு சுகாதாரத் திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நல்லூர் உற்சவம் எதிர்வரும் 25 ஆம் திகதி ஆரம்பமாகின்றது. இங்கு திருவிழாக் காலத்தில் மக்கள் அதிகம் கூடுவர்.

எனினும் மண்டப படி வைத்தல், பிரசாதங்கள் வழங்கல், தாகசாந்தி வழங்கல், தானங்கள் வழங்கல், அன்னதானம் வழங்கல் போன்றவை ஆலயச் சூழலில் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன.

தற்போது ஆலயச் சூழலில் கொடிக்கம்பங்கள் நடப்பட்டுள்ளதுடன், ஆலய வீதியின் நுழைவாயிலில் பந்தல்கள் அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இது தொடர்பில் பதில் முதல்வருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, சுகாதாரப் பிரிவினால் விடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் நடைமுறையில் இருக்கும். அமைக்கப்படும் பந்தல்கள் பக்தர்கள் இளைப்பாறுவதற்கு மட்டுமே எனப் பதிலளித்தார். (க)

# நல்லூர் உற்சவ காலத்தில் கடைப்பிடிக்க வேண்டியவை



நல்லூர்,ஜூலை 19

**கொ**விட் - 19 தொற்று அபாயமுள்ள தற்போதைய சூழ்நிலையில் இடம்பெறவுள்ள நல்லூர் உற்சவ காலத்தில் பொது மக்கள் கடைப்பிடிக்க வேண்டியவை தொடர்பில் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையினரால் சில அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

அவை வருமாறு:

நல்லூர் ஆலய வளாகத்தினுள் நுழையும் பக்தர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்படும்.

இதை நடைமுறைப்படுத்துவதற்கு பாதுகாப்பு பிரிவினருக்கு, பக்தர்கள் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அனைத்து பக்தர்களும் முகக் கவசம் அணிந்திருத்தல் கட்டாயமானதாகும்.

பக்தர்கள் அனைவரும் தனிநபர் இடைவெளியைப் பேணுதல் அவசியமாகும்.

பக்தர்கள் கோயில் சூழலில் மிகக் குறைந்த நேரத்தை மாத்திரம் செலவிடவேண்டும் என்பதுடன், தேவையற்ற விதத்தில் உலா வருவதைத் தவிர்த்துக் கொள்ளல் சிறந்தது.

வயோதிபர்கள், சுகவீனமுற்றோர் ஆலயத்துக்கு வருகை தருவதைத் தவிர்த்துக் கொள்ளல் சிறந்தது.

குழுக்களாக ஒன்றுகூடி ஆராதனை செய்தல்(பஜனை) தடை செய்யப்பட்டுள்ளது.

சுயதனிமைப்படுத்தல், கட்டாயத் தனிமைப்படுத்தலைப் பூர்த்தி செய்தோர் (உதாரணமாக வெளிநாடுகளில் இருந்து வருகை தந்தோர்)அதற்குரிய சான்றிதழை ஆலயச் சூழலில் நடமாடும் சந்தர்ப்பத்தில் தம்முடன் வைத்திருத்தல் வேண்டும்.

மண்டப படி வைத்தல், பிரசாதங்கள் வழங்கல், தாகசாந்தி வழங்கல், தானங்கள் வழங்கல், அன்னதானம் வழங்கல் ஆலயச் சூழலில் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளன.

அடியார்கள் அங்கப்பிரதட்சணம் செய்தல்,காவடி எடுத்தல்,தூக்குக் காவடி எடுத்தல்,கற்பூரச் சட்டி எடுத்தல் மற்றும் அடி அழித்தல் போன்ற நோய்க்கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க முடியாத வழிபாட்டு முறைகள் அனைத்தும் தடை செய்யப்பட்டுள்ளன.

ஆலய வீதிகளில் சூழவுள்ள மண்டபங்களில் கூடுப்பிரார்த்தனை, பிரசங்கங்கள் , தெய்வீகச் சொற்பொழிவுகள், தெய்வீக இசையரங்குகள் மற்றும் கலை நிகழ்வுகள் அனைத்தும் தடை செய்யப்பட்டுள்ளன.

ஆலய வீதிகளில் பொழுதுபோக்குக்கான அனைத்து நிகழ்வுகளும் தடை செய்யப்பட்டுள்ளன.

குறித்த அனைத்து சந்தர்ப்பங்களிலும் மேலதிக சுகாதார நடைமுறை தளர்வுகள்ஏற்படும்வரை அனைத்து விதமான சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றுவது கட்டாயமானதாகும்.

சுகாதார அமைச்சின் எதிர்கால அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப மேலதிக அறிவுறுத்தல்கள் எம்மால் வழங்கப்படும்.

அதேவேளை கொவிட் -19 தொற்று நோய்த் தாக்கத்தில் இருந்து மக்களைப் பாதுகாக்கும் கடமை ஒவ்வொரு முருக பக்தர்களுக்கும் இருப்பதனால், ஆலய நிர்வாகத்தினரின் வழமையான செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்தாது இருக்கும் வகையில் இந்த வருடத் திருவிழாவில் பக்தர்கள் இயன்ற வரை நேரடியாகப் பங்கு பற்றுவதைத் தவிர்த்து, வீட்டில் இருந்தவாறே முருகப்பெருமானை வழிபடுவது பொருத்தமாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)



யாழ்ப்பாணம் கரித்தாஸ் கியூடெக் நிறு வனத்தால், யாழ் போதனா மருத்துவமனைப் பாவனைக்காக அதன் இயக்குநர் அருட்பணி ச.இயூஜின் பிரான்சிஸ் அடிகளாரால்,யாழ்.போதனா வைத்திய சாலை பணிப்பாளர் வைத்தியகலாநிதி த.சத்திய மூர்த்தியிடம், சுகாதார தொற்று நீக்கிதிரவம், முகக்கவசங்கள், தனிப்பட்ட பாதுகாப்பு உடைகள், சுகாதார விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்கள் என்பன அண்மையில் கையளிக்கப்பட்டன. (க)

## ஆலய வீதி சீரமைப்பு

சாவகச்சேரி,ஜூலை 19

குன்றும் குழியுமாகக் காணப்பட்ட சாவகச்சேரி விளைவேலி துர்க்கை அம்பாள் கோவில் வீதி சீரமைக்கப்பட்டுள்ளது.

எமது கோரிக்கைக்கு அமைவாக ஒரு வார காலத்தில் ஆலய வீதியைச் சீரமைத்து தந்தமைக்கு சாவகச்சேரி நகரசபையின் தவிசாளர் மற்றும் வட்டார உறுப்பினர் ஆகியோருக்கு பக்தர்கள் நன்றிகளைத் தெரிவித்துள்ளனர். (ஐ)

## பட்டக்கற்கையை தொடர வாய்ப்பு

வடமராட்சி,ஜூலை 19

கல்விமாணி பட்டக்கற்கை நிகழ்ச்சித் திட்டக் கற்கை நெறியின் கல்வியாண்டில் பகுதி - I, பகுதி II பரீட்சைக்குத் தோற்றி, பின்னர் பகுதி III பரீட்சைக்குத் தோற்றாமல் (கற்கை நெறியைப் பிற்போடப்பட்டவர்கள் மற்றும் வரவு குறைவு காரணமாக பரீட்சை எழுதாதவர்கள்) 2017/2020 கல்வியாண்டில் மூன்றாம் வருட கற்கையைத் தொடர்வதற்கு வாய்ப்புக் கிட்டியுள்ளது.

இவ்வாறான தகுதியுள்ள நெல்லியடி மத்திய கல்லூரி இணைப்பு நிலையத்தில் கற்கை நெறியைத் தொடர்ந்த ஆசிரிய மாணவர்கள் இணைப்பாளர் க.செந்தில் வடிவேலுவுடன் (தொலைபேசி இல 0779789464) தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க)



## ஞானோதயா வித்தியாலய புதிய கட்டடம் திறப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 19

வலிகாமம் வடக்கில் இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்ட தெல்லிப்பழை பிரதேச செயலகத்துக்குட்பட்ட மயிலிட்டி தெற்கு ஞானோதயா வித்தியாலயத்தில் புதிய கட்டடமொன்று நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் தி.ஸ்ரீதரன் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் மதிப்புறு விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸால் கட்டடம் திரைநீக்கம் செய்யப்பட்டது.

கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன், வடமாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன், வடமாகாண கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார், மேலதிக மாவட்டச் செயலர் எஸ்.முரளிதரன், வலிகாமம் வடக்கு பிரதேச சபை செயலர் ச.சிவஸ்ரீ, மயிலிட்டி தெற்கு கிராம சேவையாளர், சமுர்த்தி அலுவலர், பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், பாடசாலை பழைய மாணவர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ம)

## ‘எழுதாரகை’யை அப்புறப்படுத்த நடவடிக்கை

அனலைதீவு இறங்குதுறையில் தரித்து நிறுத்தப்பட்டுள்ள எழுதாரகை படகை அப்புறப்படுத்துவதற்கு கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

பல்வேறு சர்ச்சைகளுக்கு மத்தியில் வடக்கு மாகாண சபையால் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட படகு நீண்ட காலமாக சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளது. அது அனலைதீவு இறங்குதுறையில் நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் பொது மக்கள் பல்வேறு அசௌகரியங்ளை எதிர்கொள்வதுடன், சிலருக்கு காயங்களும் ஏற்பட்டுள்ளன.

மக்கள் விடுத்த கோரிக்கையை அடுத்து படகை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்ட அமைச்சர், மக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் படகை உடனடியாக அப்புறப்படுத்தி மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு அதிகாரிகளுக்குத் தெரிவித்துள்ளார். (க)

# கொரோனா கட்டுப்படுத்தல் இலங்கை முன்னிலையில்!

## உலக சுகாதார ஸ்தாபனம் பாராட்டு



கொழும்பு, ஜூலை 19

பெரும் தொழில்நுட்ப வசதிகளைக் கொண்ட நாடுகளையும் மிஞ்சி கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டு செயற்பாடுகளில் முன்னிலை வகிக்கும் நாடுகளில் இலங்கையும் முன்னணியில் உள்ளது என்று உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி ராஷியா பெண்டிஷே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அரசு தொற்று நோய் பரவல் தொடர்பான கண்காணிப்புச் செயற்பாடுகளை முன்னெடுக்க நடைமுறைப் படுத்தியுள்ள திட்டம் சாத்தியமளித்துள்ளது. உரிய நேரத்தில் வைரஸ் பரவலைத் தடுப்பதற்கான செயற்பாடுகளை இலங்கை மருத்துவ நிபுணர்கள் முன்னெடுத்திருந்தனர். பரிசோதனை, மருத்துவமனைகளைப் புதிதாக நிறுவல் உள்ளிட்ட செயற்பாடுகளில் இலங்கையின் செயற்பாடு பாராட்டத்தக்கது.

வெளிநாட்டில் இருப்பவர்களை அழைத்து வந்து அவர்களைத் தனிமைப்படுத்தி சரியான முறையில் முகாமைத்துவம் செய்யப்படுகிறது. அரசுடன் மற்றைய தரப்புகள் இணைந்து செயற்பட்டிருக்காவிட்டால் வைரஸ் பரவல் கட்டுப்பாட்டுக்குள் வந்திருக்காது.

இவ்வாறிருக்கும்போது கொரோனா வைரஸின் நடத்தையைச் சரியாக அறிந்துகொள்ள நாம் ஒன்றுபட வேண்டியது அவசியம். வைரஸிலிருந்து விடுபட்டு வழமைக்குத் திரும்புவதற்கான இயலுமை மந்த நிலையிலேயே காணப்படுகின்றது-என்றார். (க)



# நவீன வசதிகளுடன் வங்கி இடமாற்றம்

யாழ்ப்பாணம்; ஜூலை 19

இலங்கை வங்கியின் மந்திகைக் கிளை, நவீன தொழில் நுட்ப வசதிகளுடன், சாவகச்சேரி வீதி, மந்திகை சந்தை அருகாமை, மந்திகை என்னும் முகவரிக்கு இடமாற்றப்பட்டுள்ளது.

இலங்கை வங்கியின் வடக்கு மாகாண உதவிப் பொது முகாமையாளர் திருமதி சுமங்கலா பிரபாகரன் தலைமையில் கிளை திறக்கப்பட்டது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கையின் விற்பனை மற்றும் ஊடக வழி முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பொது முகாமையாளர் சி.அமரசிங்க, சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் பதில் மருத்துவ அத்தியட்சகர் மருத்துவர் வி. கமலநாதன், செயற்பாட்டு முகாமையாளர் சி. ஆனந்தராஜா, யாழ்.கிழக்குப் பிரதேச முகாமையாளர் திருமதி நித்தியா சுரேந்திரராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். (க)

# சிலிண்டரை வெடித்து முதியவர் உயிரிழப்பு

மட்டக்களப்பு, ஜூலை 19

வீட்டில் இருந்த எரிவாயு சிலிண்டரை வெடிக்க வைத்து முதியவர் உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்.

இந்தச் சம்பவம் மட்டக்களப்பு நகர், இருதயபுரம் கிராமத்தின் 4ஆம் குறுக்கு வீதியில் உள்ள வீடொன்றில் நேற்று நடந்துள்ளது. சம்பவத்தில் தம்பிராசா பத்மராசா (வயது65) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணையை மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (க)

# பொலிஸ் துறையே ஊழலில் முதலிடம்

## வெரைட் ஆய்வு நிறுவனம் அதிர்ச்சி தகவல்

பொதுச் சேவைத் துறையில் பொலிஸ் துறையே மிகவும் ஊழல் நிறைந்த நிறுவனமாகப் பதிவாகியுள்ளதாக ஆய்வு ஒன்றில் தெரிய வந்துள்ளது. முன்னணி ஆய்வு நிறுவனமான வெரைட் ஆய்வு நிறுவனத்தின் ஆய்வில் இந்த விடயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பொலிஸ் திணைக்களத்திற்கு அடுத்தபடியாக ஊழல்வாதிகளாக நாடாளுமன்றம் உள்ளிட்ட அரச மற்றும் உள்ளூராட்சி மன்ற அதிகாரிகள் பதிவாகியுள்ளனர்.

பொதுச் சேவைத் துறையில் ஏறத்தாழ அரைவாசி ஊழல் செயற்பாடுகளுக்கு பொலிஸ் துறையே பொறுப்புக்கூற வேண்டும் என இலங்கையிலுள்ள நிறுவனங்களில் இடம்பெறும் ஊழல் மோசடி தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு கூறுகின்றது. நாட்டின் பொதுத்துறையில் மிகவும் குறிப்பிடத்தக்க அளவில் ஊழல் மோசடிகள் இடம்பெறுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பொலிஸ், உள்ளூராட்சி அரசு மற்றும் கட்டுப்பாட்டுப் பணியாளர்களுக்கு குறிப்பிடத்தக்க அதிகாரமும் பொறுப்பும் காணப்படுவதே அதற்குக் காரணமாக அமைந்துள்ளதாக வெரைட் ஆய்வு நிறுவனம் கூறியுள்ளது.

பொலிஸாரே, அதிகளவில் ஊழலில் ஈடுபடுகிறார்கள் என 50 வீதமானவர்கள் கூறியுள்ளதுடன், அதற்கு அடுத்தபடியாக நாடாளுமன்றத்தில் உள்ளவர்கள் ஊழலில் ஈடுபடுகின்றனர் என வெரைட் நிறுவனம் நடத்திய ஆய்வில் பங்குபற்றியவர்கள் தெரிவித்துள்ளனர். (ப)

# தேர்தல் சட்ட மீறல்கள்; 3,684 முறைப்பாடுகள்

கொழும்பு, ஜூலை 19

நாடாளுமன்ற தேர்தல் சட்டத்தை மீறிச் செயற்பட்டவர்கள் தொடர்பாக 3,684 முறைபாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவிலுள்ள முறைப்பாட்டு பிரிவுக்கு 16 ,17 ஆம் திகதிகளில் மேற்படி முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இவற்றில் தேர்தல் முறைப்பாடுகள் தொடர்பான மத்திய நிலையத்துக்கு 17 முறைபாடுகளும், மாவட்ட தேர்தல் முறைபாடுகள் தொடர்பான நிலையத்துக்கு 151 முறைபாடுகளும் 16 ஆம் திகதியன்று பதிவாகின.

அத்துடன் 17 ஆம் திகதியன்று தேர்தல் முறைப்பாடுகள் தொடர்பான மத்திய நிலையத்துக்கு 801 முறைபாடுகளும், மாவட்ட தேர்தல் முறைபாடுகள் தொடர்பான நிலையத்துக்கு 2,883 முறைபாடுகளும் பதிவாகின என்று ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ)

# வேட்பாளர்கள் – ஊடகவியலாளர் மட்டக்களப்பில் கலந்துரையாடல்

மட்டக்களப்பு, ஜூலை 19

கிழக்கு மகாண ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், ஊடகவியலாளர் மற்றும் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் பிரதான கட்சிகளில் இருந்து போட்டியிடும் வேட்பாளர்களுக்கிடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்று மட்டக்களப்பு கல்லடியில் அமைந்துள்ள வொய்ஸ் ஒவ் மீடியா ஊடக வளங்கள் மற்றும் ஆய்வுக்கான நிலையத்தில் இடம்பெற்றது.

கலந்துரையாடலில் ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும், கடந்த காலங்களில் படுகொலை செய்யப்பட்ட மற்றும் காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு இதுவரையும் நீதி கிடைக்காதிருப்பது பற்றியும், கலந்துரையாடப்பட்டது.

"இதுவரை காலமும் ஊடகவியாலாளர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும், அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுத்து வரும் நாம், எமது வெற்றியின் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு உரிய நலநோம்புத் திட்டங்கள், அநீதிக்கு எதிரான நீதி விசாரணைகளை முன்னெடுத்தல், உள்ளிட்ட அனைத்து விடயங்களிலும் முன்னின்று செயற்படுவோம்" என்று இதன்போது வேட்பாளர்கள் தெரிவித்தனர்.

கலந்துரையாடலில், வேட்பாளர்களான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கி. துரைராசசிங்கம், ஞா. சிறிநேசன், கோ. கருணாகரம் (ஜனா), ஐக்கிய மக்கள் சக்தியின் எம். எஸ். எஸ். அமீரலி, தமிழர் விடுதலைக் கூட்டணியின் அருண் தம்பிமுத்து, திருமதி. சந்திரகாந்தா மகேந்திரநாதன், ஐக்கிய சமாதானக் கூட்ட மைப்பின் பஷீர் சேகுதாவுத், மற்றும் கொழும்பிலிருந்து வருகைதந்த பிரெடி கமகே, மீபுர, கிழக்கு மாகாண ஊடகவியலாளர்கள் எனப் பலரும் இதன்போது கலந்து கொண்டனர். (ப)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பாடம் கற்பிக்க வேண்டுமாம்

## இ.அ.பொ. ஊ.ச.தலைவருக்கு வந்த ஆசை

மக்கள் இம்முறை தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தகுந்த பாடம் ஒன்றைக் கற்பிக்க வேண்டும் என்று அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் எஸ்.லோகநாதன் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் காரைதீவு பகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

'வடக்கு கிழக்கு மாகாணத்தில் ஏதாவது பிரச்சினை ஏற்படுகின்ற போது சம்பந்தனுக்கோ அல்லது மாவை சேனாதிராசாவுக்கோ தொலைபேசியில் தொடர்பை நாம் மேற்கொள்ளும் போது தாங்கள் ஒரு கூட்டத்தில் இருப்பதாக கூறி இரவு வேளையில் தொடர்புகொள்ளுமாறு கேட்பார்கள்.

ஆனால் இரவு வேளையில் தொலைபேசியினூடாக தொடர்பு கொள்ள முயற்சித்தால் தொடர்பை துண்டித்து விடுவார்கள். செல்வம் அடைக்கலநாதனும் அப்படித்தான் எம்மைப் புறக்கணித்தார்.

அடுத்ததாக இவர்களுக்கு அனுப்பும் கடிதங்களுக்கு கூட பதிலளிப்பதில்லை. கூட்டம் கலந்துரையாடல் என மக்களின் பிரச்சினைகளுக்கு எவ்வித தீர்வுகளையும் காணாது இவர்களது செயற்பாடு அமைந்துள்ளது.

தேர்தல் காலங்களில் மாத்திரம் வட, கிழக்கு மக்களை ஏமாற்றி அதை செய்ய போகின்றோம் இதைச் செய்யப்போகின்றோம் என்று கூறி இனப்பிரச்சினை தீர்ப்பது தொடர்பாக தொடர்ச்சியாக ஏமாற்றி வந்திருக்கின்றது. இன்று மக்கள் கண்ணீரும் கம்பலையுமாக இருக்கிறார்கள் - என்றார் (ஐ)

# திறந்த பல்கலைக்கழகத்தை தனியார் மயப்படுத்த திட்டமா?

## திறந்த பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் சந்தேகம்

கொழும்பு, ஜூலை 19

**திறந்த பல்கலைக்கழகத்துக்கு ஒதுக்கப்படவேண்டிய நிதியில் அரசாங்கம் பெரியளவில் குறைப்புச் செய்துள்ளமை பல்கலைக்கழகத்தை தனியார் மயப்படுத்துவதற்காக மேற்கொள்ளும் அரசாங்கத்தின் திட்டமா என்ற சந்தேகம் எழுவதாக திறந்த பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.**

திறந்த பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த சங்கத்தின் தலைவர் கலாநிதி பீ.டி. விதாரண குறிப்பிடுகையில்,

நாட்டில் இருக்கும் பல்கலைக்கழகங்களில் திறந்த பல்கலைக்கழகத்தில் மட்டுமே உயர் கல்வியைத் தொடர்பவர்களுக்கு வயதெல்லை இல்லை. அவர்கள் தொழில் புரிந்துகொண்டே தமது மேற்படிப்பை மேற்கொள்ள முடியும்.

1980 இல் ஆரம்பிக்கப்பட்ட இந்த பல்கலைக்கழகம் முதல்தடவையாக நிதிப்பிரச்சினைக்கு ஆளாகி இருக்கின்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வழிநடத்தப்பட்டு வரும் இந்தப் பல்கலைக்கழகத்தின் கொள்கையின் அடிப்படையில் இங்கு சேவை புரிபவர்கள், கட்டுமான மற்றும் அடிப்படைத் தேவைகளுக்கு அரசாங்கத்தினாலே நிதி ஒதுக்கப்படுகின்றது. கல்வி கற்கும் மாணவர்களிடம் செலவாகும் தொகையில் மூன்றில் ஒரு பகுதியே அறவிடப்படுகின்றது. சுமார் 40 ஆயிரம் மாணவர்கள் இங்கு கல்வி பயின்று வருகின்றனர். சுமார் ஆயிரத்து 200 நிரந்த பணியாளர்கள் பணிபுரிகின்றனர்.

இவ்வாறான நிலையில் கடந்த ஒரு வருடமாக பல்கலைக்கழகத்துக்கு ஒதுக்கப்படவேண்டிய நிதி பாரியளவில் குறைப்புச் செய்யப்பட்டிருக்கின்றது. இந்த நிதி பல்கலைக்கழகத்தில் நிரந்தர சேவையில் இருக்கும் ஊழியர்களின் மாதச் சம்பளத்தை வழங்கவும் போதாது. எஞ்சிய நிதியை மாணவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் நிதியில் இருந்து பெற்றுக்கொள்ளுமாறே வற்புறுத்தப்பட்டிருக்கின்றது. இந்த நிலைமையை இனியும் மேற்கொள்ள முடியாது என பல்கலைக்கழக உபவேந்தர் ஊழியர் சபைக்கு அறிவித்திருக்கின்றார்.

அரசாங்கம் இந்த பல்கலைக்கழகத்துக்கு ஒதுக்கப்படவேண்டிய நிதியில் இவ்வாறு பெரிய குறைப்புச் செய்திருப்பது, இதனை தனியார் மயப்படுத்துவதற்கான திட்டமா அல்லது அரச அங்கீகாரத்தை இல்லாமாக்குவதற்கான திட்டமா என்ற சந்தேகம் எழுகின்றது. அதனால் இப் பல்கலைக்கழகத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு நாட்டு மக்கள் அனைவருக்கும் இருக்கும் பொறுப்பாகும். அதன் பிரகாரம் எமது ஆசிரியர் சங்கம் இதற்கு எதிர்ப்பை தெரிவிப்பதுடன் இதனைப் பாதுகாப்பதற்கு நிபந்தனையின்றி ஆதரவளிக்கவும் தயாராக இருக்கின்றது.

எனவே திறந்த பல்கலைக்கழகம் ஊடாக பட்டம் பெறவேண்டுமென எதிர்பார்ப்புடன் இருக்கும் மாணவர்கள் இதுதொடர்பாக தங்களின் எதிர்ப்பை அரசாங்கத்துக்கு தெரிவித்து, தேவையான நிதி ஒதுக்கீட்டை பெற்றுக்கொடுக்க அழுத்தம் கொடுக்கவேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (ரி3)

# தனிமைப்படுத்தலை முடித்த 219 பேர் வீடு செல்ல அனுமதி

முல்லைத்தீவு, ஜூலை 19

முல்லைத்தீவு கேப்பாபிலவு விமானப் படைத்தள தனிமைப்படுத்தல் கண்காணிப்பு நிலையத்தில் தனிமைப்படுத்தலில் இருந்த 219 பேர் தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவு செய்து வீடு திரும்பியுள்ளனர்.

கடந்த 2ஆம் திகதி தென்கொரியாவில் இருந்து நாடு திரும்பியவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து தனிமைப்படுத்தலுக்காக முல்லைத்தீவு விமானப் படைத்தளத் தனிமைப்படுத்தல் கண்காணிப்பு நிலையத்துக்குக் கொண்டுவரப்பட்டிருந்தனர்.

இவர்கள் 14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்டுடன், அவர்களுக்குப் பி.சி.ஆர்.பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டது.

அவர்களின் தனிமைப்படுத்தல் காலம் நிறைவடைந்த நிலையில், இன்று அதிகாலை அவர்கள் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அவர்களில் கர்ப்பிணிப் பெண் ஒருவர் உட்பட 6 பெண்களும் 3 சிறுவர்களும் 210 ஆண்களும் அடங்குகின்றார்கள். (எ-19)

# தேர்தல் விதிகளை மீறிய வாகனம் பொலிஸ் வசம்

மன்னார், ஜூலை 19

தேர்தல் விதிகளை மீறிக் கட்சியின் சின்னம் மற்றும் வேட்பாளரின் சுவரொட்டியைக் காட்சிப்படுத்திய வாகனம் ஒன்று மன்னார் தேர்தல் முறைப்பாட்டுக் குழுவினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. வாகனத்தின் சாரதியும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று காலை நடந்துள்ளது. வாகனத்தில் வேட்பாளர் பயணிக்காத நிலையில், கட்சிச் சின்னமும், சுவரொட்டியும் கொண்டு செல்லப்பட்டமையை அடுத்தே தேர்தல் முறைப்பாட்டுக் குழுவினரால் வாகனம் கைப்பற்றப்பட்டுள்ளது.

அதேவேளை, நேற்று இரவு ஒன்பது மணியளவில் மன்னார் வயல்வீதியில் வேட்பாளர் ஒருவரின் சுவரொட்டிகளை ஒட்டிய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், மூவர் தப்பிச் சென்றுள்ளனர் என்றும் மன்னார் மாவட்ட தேர்தல் முறைப்பாட்டுக் குழு தெரிவித்தது

இது தொடர்பாக மன்னார் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ஜெ.ஜெனிற்றன் தெரிவித்ததாவது: தேர்தல் விதிமுறைகளை அனைத்துக்கட்சி வேட்பாளர்களும் உறுப்பினர்களும் கடைப்பிடிக்க வேண்டும். மீறுவோர் மீது இனிவரும் நாள்களில் பாரபட்சமின்றி கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்-என்றார் (எ-213)

# ஹெரோய்னுடன் இளைஞன் கைது!

வவுனியா, ஜூலை 19

16 கிராம் ஹெரோய்ன் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த இளைஞர் ஒருவர் வவுனியா காத்தார் சின்னக்குளம் பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் குறித்து தெரியவருவதாவது:

வவுனியா காத்தார்சின்னக்குளம் பகுதியில் போதைப்பொருள் வியாபாரம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது என வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தம்மிக்க பிரியந்தவின் கீழ் செயற்படும் போதை ஒழிப்புப் பிரிவினருக்கு இராணுவத்தினரால் தகவல் வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் நேற்றுமுன்தினம் இரவு குறித்த பகுதிக்குச் சென்ற பொலிஸார் அதே பகுதியைச் சேர்ந்த 23வயதுடைய இளைஞனை கைதுசெய்து 16கிராம் 40 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப் பொருளையும் மீட்டுள்ளனர். (ரி1-110)

# 135,519 பி.சி.ஆர். சோதனைகள்

கொழும்பு, ஜூலை 19

இலங்கையில் இதுவரை 135,519 பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. மேலும், நேற்றுமுன்தினம் மாத்திரம் 2,723 பி.சி.ஆர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்ட டன எனவும், இதுவே இலங்கையில் ஒரே நாளில் முன்னெடுக்கப்பட்ட அதிக எண்ணிக்கையிலான பி.சி.ஆர் சோதனைகள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)

# ஆலயத்துக்கு பின்னால் இறைச்சிக் கொட்டகை!

## சுற்றிவளைப்பில் மூவர் கைது

கொழும்பு, ஜூலை 19

சட்டவிரோதமான முறையில் நடத்தப்பட்டு வந்த இறைச்சிக் கொட்டகை ஒன்று பொலிஸரால் வெள்ளவத்தைப்பகுதியில் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியிலுள்ள ஆலயம் ஒன்றுக்குப் பின்னால் குறித்த இறைச்சிக் கொட்டகை இயங்கி வந்துள்ளது. சுற்றிவளைப்பில் அந்த கொட்டகையை நடத்தி வந்த மூவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி1)



# பிரதமரைச் சந்தித்தார் புதிய கடற்படைத் தளபதி

கொழும்பு, ஜூலை 19

புதிதாக நியமிக்கப்பட்ட இலங்கைக் கடற் படையின் 24ஆவது கடற்படை தளபதியான வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகே தென்ன பிரதமர் மஹிந்த ராஜபக்சவை நேற்றுமுன்தினம் சந்தித்தார். கடற்படைத் தளபதி தனது கடமைகளை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றதன் பின்னர் அலரிமாளிகையில் பிரதமர் மஹிந்த ராஜபக் ஷவை சந்தித்துள்ளார்.

கொழும்பு றோயல் கல்லூரியின் பழைய மாணவரான நிஷாந்த உலுகேதென்ன புதிய பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு முன்னர் கடற்படையின் தலைமை அதிகாரியாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரி2)

# மேலும் இரு கடற்படையினர் குணமடைவு

நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளான கடற்படையினரில் இருவர் பூரண குணமடைந்து வைத்தியசாலையில் இருந்து வெளியேறியுள்ளனர் என இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

இதன்மூலம், கொரோனாத் தொற்றுக்குள்ளாகி குணமடைந்த கடற்படையினரின் மொத்த எண்ணிக்கை 901 ஆக உயர்வடைந்துள்ளமையுடன், தொற்றுக்குள்ளான 906 கடற்படையினரில் 5 பேர் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர். நாட்டில் கொரோனாத் தொற்றால் மொத்தமாக 2,697 பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களில் 2,012 பேர் குணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி3)

# 3 ஆயிரம் தொற்றாளர்களை 300க்குள் நிறுத்தியிருக்கலாம்

## அரசின் மீது மனோ குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 19

வெளிநாட்டுக் கதை வேண்டாம். இந்த நாடு ஒரு தீவு என்பதால் எமக்கு இயற்கையான பாதுகாப்பு கிடைத்தது. அதனால்தான், நோயாளர் தொகை மூவாயிரத்துக்குள் நிற்கிறது. ஆனால், நாட்டை முன்கூட்டியே மூடி 'லொக் டவுன்' செய்து 3 ஆயிரம் கொரோனா நோயாளர்களை 300க்குள் நிறுத்தி இருக்கலாம். நீங்கள் மார்ச் 19, தேர்தல் வேட்பு இறுதி தினம் வரை, அதாவது பிரதான எதிர்க்கட்சி உடைவது உறுதியாகும்வரை, அரசியல் இலாபத்தை மனதில் கொண்டு, நாட்டை திறந்து வைத்தீர்கள். இதனால்தான் முழு நாடும் இன்று பாடுபடுகிறது என முன்னாள் தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு, இந்து சமய விவகார அமைச்சரான மனோ கணேசன் தெரிவித்தார்.

தனியார் தொலைகாட்சியில் நேற்றிரவு பிரபல சிங்கள மொழி அரசியல் விவாத நிகழ்வு நடைபெற்றது. ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் மனோ கணேசன், அளவதுவள, அரசு தரப்பில் அருந்திக பெர்னாண்டோ, காஞ்சன விஜயசேகர ஆகிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இந்த விவாதத்தில் மனோ கணேசன் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி, மார்ச் 2ஆம் திகதியன்று நாடாளுமன்றத்தைக் கலைத்து, வேட்புமனு மற்றும் தேர்தல் திகதிகளை அறிவித்தார். இதற்கு பதில் அவர் நாடாளுமன்றத்தை ஒத்திவைத்துவிட்டு, முழு நாட்டையும் கொரோனாவை எதிர்த்து போராடும் தயார் நிலைக்குக் கொண்டு சென்று இருக்கலாம். இதை அவர் செய்யவில்லை.

பொறுப்பற்ற நிலையில் வேட்புமனு மற்றும் தேர்தல் திகதிகளை அறிவித்ததால், நாடு திறந்த நிலையில் இருந்தது. கட்சிகளின் இலட்சக்கணக்கான ஆதரவாளர்கள் நாடு முழுக்க ஆங்காங்கே கட்சி அலுவலகங்களில் கூடினார்கள். அதற்கிடையில் கொழும்பில் பல்லாயிரகணக்கானோர் கூடும் ரோயல்தோமியன், ஆனந்தநாலந்த கல்லூரிகளின் இறுதிப்போட்டிகளையும் நடத்த விட்டு, அதில் ஜனாதிபதி மற்றும் அரசியல் பிரமுகர்கள் கலந்துக்கொண்டு கொரோனாவை வளரவிட்டீர்கள். வேட்புமனு முடிந்த மறுநாளே, அதாவது 20ஆம் திகதியே நாட்டை 'லொக்டவுன்' செய்தீர்கள். அதாவது வரும் ஆபத்து பற்றி தெரிந்து கொண்டே அரசியல் இலாபம் கருதி செயற்பட்டார்கள்.

பெப்ரவரி 25ஆம் திகதியும், மார்ச் 5ஆம் திகதியும் என இரண்டு முறை அன்றைய எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச நாடாளுமன்றத்தில், கொரோனா ஆபத்து பற்றி கேள்வி எழுப்பி, உரை நிகழ்த்தினார். அப்போது நாடு கொரோனா பற்றி அறிந்திருக்கவில்லை. ஆனால், சஜித் சபையில் பிரதமரையும், சுகாதார அமைச்சரையும் இதுபற்றி எச்சரிக்கை செய்தார். நாட்டை மூடி, விமான நிலையங்களை மூடி நாட்டை தயார் நிலையில் வைக்கச் சொன்னார். நீங்கள் சபையில் அவரை கிண்டல் செய்தீர்கள். அவர் சொன்னதைக் கணக்கில் எடுக்கவில்லை.

இன்று கொரோனா ஒரு சுகாதார பிரச்சினை மட்டும் இல்லை. அது வீட்டுப் பொருளாதாரத்தையும், நாட்டு பொருளாதாரத்தையும் நாசமாக்கி விட்டது. நோயில் இறந்து, நோயால் சுகவீனமடைந்து, வருமானம் இழந்து, தொழில்கள் நலிவடைந்து, குடும்ப நிகழ்வுகள்கூட நடத்த முடியாமல் தவிக்கும் அனைவருக்கும் நீங்கள் பொறுப்புக் கூறவேண்டும். இனி கொரோனா இரண்டாம் அலை வந்தால் நிலைமை மோசமடையும். அதற்கும் நீங்கள் பொறுப்புகூற வேண்டும்.

இங்கே நான் அர்ப்பணிப்புடன் செயற்படும் சுகாதார துறையினரை குறை கூறவில்லை. இந்நிலையிலும் பொறுப்புடனும், தியாக உணர்வுடனும் செயற்படும் சுகாதார, இராணுவ, பொலிஸ் அதிகாரிகளை நாம் மனதார பாராட்டுகிறோம். அவர்களுக்கு வேண்டிய தேவைகளை கூட நீங்கள் ஒழுங்காக நிறைவேற்றவில்லை. மார்ச் முதலாம் திகதியன்றே நாட்டை 'லொக் டவுன்' செய்யாமல் திறந்து வைத்து, அரசியல் இலாபத்தை மனதில் கொண்டு இங்கே பொறுப்பற்று செயற்பட்டது, உங்கள் அரசுதான். இதை வரலாறு பதிவு செய்யும் - என்றார். (ம)

பாராளுமன்றத் தேர்தல் – 2020 – யாழ்ப்பாணம் மாவட்டம்



# வடக்குக் கடற்பரப்பில் பாதுகாப்பு பலப்பட்டது

வடக்கு கடற்பரப்பில் பாதுகாப்பை மேலும் பலப் படுத்தியுள்ளதாக கடற்படையின் வடக்கு கட்ட ளைத் தலைமையகம் தகவல் வெளியிட்டுள் ளது.

கடந்த 15ஆம் திகதியில் இருந்து மேலதிக கடற் படைக் கப்பல்கள், படகுகளுடன் கடற்படையி னர் பாதுகாப்பை அதிகரித்துள்ளனர் என்றும் சந்தேகத்துக்குரிய படகுகளை சோதனையிடும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகவும் கடற்படை தெரிவித்துள்ளது.

இந்தியாவில் வசிக்கும் இலங்கை தமிழ்அகதி கள் மூலமாகவும், போதைப்பொருள் கடத்தல் காரர்கள் மூலமாகவும் கொரோனா தொற்று பரவுவதை தடுக்கும் நோக்கிலேயே கடலில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக கடற்படை யின் தகவல்கள் கூறுகின்றன. (ம)






# வாழ்வாதார உதவிகளும் அன்பளிப்புகளும்



கிளிநொச்சி மாவட்டச் செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில், வருமான இழப்பைச் சந்தித்துள்ள 50 சிறுதொழில் முயற்சியாளர்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (க-222)



சுசீலன் பௌண்டேசன் கல்வி மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, வற்றாப்பளை மகா வித்தியாலய மாணவர்கள் 50 பேருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (க-222)



கிளிநொச்சி பெரியகுளம் கட்டைக்காட்டு பகுதியில் மாற்றுத்திறனாளி ஒருவருக்கு வாழ்வாதாரமாக நீர் இறைக்கும் இயந்திரம் வழங்கப்பட்டது. தருமபுரம் பஞ்சமுக ஆஞ்சநேயர் ஆலயத்தினர் இயந்திரத்தை வழங்கினர். (க-113)





காணாமல்போன கணவனைத் தேடித் தேடி அலைந்து நோய்வாய்ப்பட்ட நான்கு பிள்ளைகளின் தாய் ஒருவரின் மருத்துவ வைத்திய சிகிச்சைக்கென, இத்தாலி மனித நேய சங்கத்தின் பொறுப்பாளர் மகேஸ்வரநாதன் கிருபாகரனின் ஒழுங்கமைப்பில், தமிழ் விருட்சம் அமைப்பினால் நிதி உதவி வழங்கப்பட்டது. (க)



கதிரேசு பொன்னம்மா நற்பணிமன்றத்தால், துணுக்காய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட உயிலங்குளம் மற்றும் ஐயங்கன் குளம் கிராம சேவகர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட மாற்றுவலுவுள்ளோர் சுய உதவிக்குழுக்கள் இரண்டுக்கு நிபந்தனை அடிப்படையிலான வாழ்வாதார நிதி உதவி வழங்கப்பட்டது. (க-222)



பிரான்ஸ் நாட்டில் வசிக்கும் ஜெஸ்டின் ஜெகதீஸ்வரன் தனது 60 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு முல்லைத்தீவு தண்டுவான் அ.த.க. பாடசாலையைச் சேர்ந்த ஐந்து மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகளை அன்பளிப்பாக வழங்கினார். (க-222)



பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்ட 30 குடும்பங்களுக்கு வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தால் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (க)



மன்னார் மடு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கல்மடு கிராமத்தைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 5 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. லண்டன் வாழ் சமூக சேவையாளர் கந்தப்பிள்ளை திலீபனின் நிதியில் இருந்து பொதிகள் வழங்கப்பட்டன. (க-222)



வவுனியா ஓமந்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் ஆலோசனைக்கு அமைவாக, தெரிவு செய்யப்பட்ட 25 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (க-18)



### ஐ.தே.கட்சி வெற்றி பெற்றால்

# 5,000 பி.சி.ஆர். நாளொன்றுக்கு

### கூறுகின்றார் ரணில்



கொழும்பு, ஜூலை 19

பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிபெற்று ஆட்சியமைக்கும் பட்சத்தில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நாளொன்றுக்கு 5,000 பி.சி.ஆர் பரிசோதனைகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார்.

கண்டியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பொதுத் தேர்தல் பிரசாரக்கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது கொரோனா வைரஸ் பரவலும், பொருளாதார நெருக்கடியுமே நாட்டில் காணப்படும் மிகப்பிரதானமான பிரச்சினை களாகும். கொரோனா வைரஸ் தற்போது வேகமாகப் பரவிக்கொண்டிருக்கிறது. அதனைக் கட்டுப்படுத்தாமல் நாடு என்றவகையில் நாம் முன்நோக்கி ச்செல்ல முடியாது. எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஆட்சியமைத்து நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதே எமது மிகமுக்கிய இலக்காக இருக்கிறது.

எமது ஆட்சியில் பாடசாலைகளுக்கும், உயர்கல்வி நிறுவனங்களுக்குமாக ஒரு கோடி முகக்கவசங் களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அதுமாத்திரமன்றி சுயபாதுகாப்பு அங்கிகளை மக்களும் கொள்வனவு செய்யக்கூடிய வகையில் எமது நாட்டிலேயே அவற்றைப் பெருமளவில் உற்பத்தி செய்வதற்கும், 2000 செயற்கை சுவாசக்கருவிகளைக் கொள்வனவு செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது

இது இவ்வாறிருக்க கடந்த ஜனவரி மாதம் தொழில்வாய்ப்பொன்றைக் கொண்டிருந்தவர்கள் கூட தற்போது வேலைவாய்ப்பை இழந்திருக்கிறார்கள். எதிர்வரும் பொதுத் தேர்தலில் நாங்கள் அரசாங்கத்தை அமைக்கும் பட்சத்தில் அவர்களுக்கான நிவாரணக் கொடுப்பனவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்போம்- என்றார். (ஐ)

## இயற்கைகடன்கழிக்கவும் தேவை அமைச்சுப் பதவி

### கிண்டலடிக்கிறார் ரத்னாயக்க

கொழும்பு, ஜூலை 19

அமைச்சு பதவி இல்லாமல் சிலருக்கு இயற்கை கடனை முடிப்பது கூட கஷ்டம்தான். கட்சி தாவும் தவளைகள் எமது பக்கமும் உள்ளன. அவை எந்நேரத்திலும் பாயக்கூடும். அத்துடன், சுற்றுலாப் பறவைகளும் வருகின்றன. ஓகஸ்ட் 5ஆம் திகதிக்கு பிறகு அவை பறந்துவிடும். ஆனால், இந்த வீட்டுக்குருவிதான் உங்களுடன் இருக்கப்போகின்றது. என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நுவரெலியா மாவட்ட வேட்பாளர் சீ.பி. ரத்னாயக்க தெரிவித்தார்.

பத்தனை பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

'வாக்கு என்பது உங்கள் உரிமை. அந்த வாக்குதான் ஆட்சியை தீர்மா னிக்கப்போகின்றது. மக்களின் இறைமையே நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும். எனவே உரிமையை எவரும் களவாடமுடியாது. முன்னர் கள்ள வாக்கு போட்டவர்கள் இருந்தனர் இ.சாராயத்துக்கும் சாப்பாட்டுக்கும் வாக்குகள் அளித்தவர்களும் இருந்தனர். இந்த காலம் தற்போது மலையேறிவிட்டது. கள்வர்கள் மற்றும் கொள்ளையர்களும் நாடாளுமன்றம் தெரிவானமையால் நல்லவர்களையும் மக்கள் திட்டினர். 225 பேருக்கும் இடிவிழ வேண்டும் எனவும் விமர்சித்தனர். சிலருக்கு அமைச்சு பதவி இல்லாவிட்டால் காலைக்கடனைகூட நிறைவேற்ற மனம்வராது. அவர்கள்தான் அந்தபக்கம் இந்த பக்கம் என தாவுகின்றனர். நாளை எந்த பக்கம் தாவுவார்கள் எனவும் தெரியாது. எமது பக்கத்திலும் இருக்கின்றனர். இவர்களுக்கு உங்கள் புள்ளடி மூலம் சிறந்த பதிலடியை கொடுக்கவேண்டும் - என்றார்.' (ஐ)

## கருவேப்பிலையா மாமனிதர் மனைவி?

### இப்படிக் கேட்கிறார் வாசுகி

யாழ்ப்பாணம், ஜூலை 19

மாமனிதர் ரவிராஜின் தியாகத்தை நான் மதிக்கின்றேன். ஆனால் அவரது உயிரிழப்பை அடுத்து அவரது மனைவியை அழைத்து கூட்டமைப்பு அரசியல் அந்தஸ்த்தை வழங்கியிருக்கவேண்டும்.

அவ்வாறு வழங்க தயாராக இல்லாத கூட்டமைப்பு தற்போது தமது தோல்வி பயத்தில் மாமனிதர் தியாகத்தை விற்பனை செய்ய முற்பட்டுள்ளது. இதற்கேதுவாகவே மாமனிதர் ரவிராஜின் மனைவியை தேர்தல் களமிறக்கியுள்ளனர். இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பெண் வேட்பாளர் திருமதி வாசுகி சுதாகர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் நேற்று ஊடக சந்திப்பு நடைபெற்றது.

இதன்போது 'கூட்டமைப்பு மாமனிதர் ஒருவரது மனைவியை களமிறக்கியுள்ளது. அதே போல கூட்டணி காணாமல் ஆக்கப்பட்ட போராளியொருவரது மனைவியை களமிறக்கியுள்ளது. இந்நிலையில் முன்னணி எவ்வாறு மகளிரது வாக்குகளை பெறமுடியும்" என்று ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

'எனது வாழ்வியலின் பெரும் பகுதியை வன்னியில் செலவிட்டுள்ளேன். குறிப்பாக போர்க் காலத்திலும் அதன் பின்னராகவும் வன்னி மக்களிடையே ஆற்றுப்படுத்தலை முன்னெடுத்திருந்தேன் எனவே மக்களது தெரிவு ஓய்வு ஒழிச்சலின்றி மக்கள் சேவையாற்றும் எனக்காகவே இருக்கும் என்றார். (ஐ-20)

## வாக்களிக்கத் தவறியோருக்கு மீண்டும் சந்தர்ப்பம்

கொழும்பு, ஜூலை 19

தபால் மூலம் வாக்களிக்கத் தவறியவர்கள் நாளை 20 ஆம் திகதி மற்றும் நாளைமறுதினம் 21 ஆம் திகதிகளில் வாக்களிக்க முடியும் என்று சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்கெடுப்பு கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகி நேற்றுமுன்தினம் நிறைவடைந்தது.




மேற்குறித்த தினங்களில் தவிர்க்க முடியாத காரணத்தால் வாக்களிக்க முடியாமல் போனவர்களுக்கு 20 மற்றும் 21 ஆம் திகதி காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை வாக்களிக்கச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

எனினும் இந்த இரு தினங்களும் தெரிவத்தாட்சி அலுவலகம் அமைந்துள்ள மாவட்டத்தின் மாவட்ட தேர்தல் அலுவலகத்திலேயே வாக்களிக்க முடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (ஐ)

## அம்பாறை மாவட்டத்துக்கு ஜனாதிபதி விஜயம்

பொதுத் தேர்தலில் போட்டியிடுகின்ற பொதுஜன பெரமுனவின் வேட்பாளர்களின் வெற்றியை உறுதிசெய்யும் வகையில் ஜனாதிபதி கோத்தாபாய ராஜபக்ஷ அம்பாறை மாவட்டத்துக்கு நேற்றுமுன்தினம் பயணம் மேற்கொண்டார்.

இதன்போது மகாவலி காணி தொடர்பாக மக்கள் முன்வைத்த பிரச்சினைகளை தீர்ப்பதற்கு குழுவொன்றை நியமிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

பிரதேசத்தின் குளங்கள் மற்றும் சிறிய நீர்ப்பாசன கால்வாய்களை புனர்நிர்மாணம் செய்வதற்கும், காட்டு யானைகள் கிராமத்தினுள் வருவதை தடுப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.

தொழில்வாய்ப்பின்மை தொடர்பாக மக்கள் முன்வைத்த கருத்துக்களுக்கு பதிலளித்த ஜனாதிபதி, சுபீட்சத்தின் நோக்கு பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ளவாறு தேர்தலின் பின்னர் ஒரு இலட்சம் வேலைவாய்ப்புகளை பெற்றுத் தருவதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். (ஐ)

## அபிவிருத்தியுடன் இணைந்த சமூகக் குரலாகவே இருப்பேன்

### என்கிறார் ஐ.ம.ச வேட்பாளர் இம்ரான்

கொழும்பு, ஜூலை 19

அபிவிருத்தியுடன் இணைந்த சமூக குரலாகவே எனது பயணம் தொடரும் என்று திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளருமாகிய இம்ரான் தெரிவித்தார்.

திருகோணமலை குச்செவெளியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;


'நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றத்தால் நாடு புதியதொரு அரசியல் கலாசாரத்தை நோக்கி நகர்கிறது.

இந்த புதிய அரசியல் கலாசாரத்தில் சிறுபான்மை சமூகங்களின் இருப்புக்கு பாரிய அச்சுறுத்தல் காணப்படுவதை இலகுவாக ஊகிக்கலாம்.

கிழக்கு மாகாணத்துக்கு அமைக்கப்பட்ட தொல்பொருள் செயலணியில் சிறுபான்மை பிரதிநிதிகள் யாரையும் உள்வாங்காதது எதிர்காலத்தில் இப்போதுள்ள அரசு ஆட்சி அமைக்கும் சந்தர்பத்தில் அந்த அரசில் சிறு பான்மையினர் எவ்வாறு நடத்தப்படுவார்கள் என்பதற்கு சிறந்த உதாரணமாகும்.

ஆகவே சிறுபான்மையினரான நாம் எதிர்கொள்ளவுள்ள இந்த சவாலை எதிர்கொண்டு எமது இருப்பை உறுதி செய்துகொள்ள நாடாளுமன்றத்தின் உள்ளேயும், வெளியேயும் சரியான சந்தர்பத்தில் குரல் கொடுக்க கூடிய ஒரு பிரதிநிதி எமக்கு அவசியம். எனவே அபிவிருத்தியுடன் இணைந்த சமூக குரலாகவே எனது பயணம் தொடரும் - என்றார். (ஐ)

## மரண அறிவித்தல்



### குமாரசாமி கிருஷ்ணசாமி (கிட்டுணர் பத்தர்)

பொற்றொழிலாளர் வீதி, சங்கத்தானை சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட குமாரசாமி கிருஷ்ணசாமி (கிட்டுணர் பத்தர்) கடந்த (17.07.2020) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - இராசமணி தம்பதியினரின். அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - நல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் இராசகுமாரியின் அன்புக் கணவரும் சோபனா ஜீவனா கிருஷ்ணகுமார் கலப்பனா தீபா சயந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அருள்மாதவன் நேசராசா சுதாகரன் பானுசா ஹரிகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் மதுஷா குலவர்மன் கஜலக்ஷன் தருக்ஷிகா டக்சிதா கிருத்திகா பினுஷா ஆத்விகா, அத்விகா ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.07.2020) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.30 மணிக்கு பூதவுடல் தகனக் கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொற்றொழிலாளர் வீதி
சங்கத்தானை, சாவகச்சேரி.

தகவல் :-
குடும்பத்தினர்

பாடசாலைகள்...

முதல் ஜுலை 24ஆம் திகதிவரை விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. நாட்டில் தற்போது கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்படுவதால் இந்த விடுமுறையை கல்வி அமைச்சு நீடித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தன, பாடசாலைகள் மீண்டும் அடுத்த வாரம் ஆரம்பமாகும் என்று அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ,எ)

## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி சரவணமுத்து

(ஓய்வுபெற்ற நெசவு ஆசிரியை, இணுவில் கிளை முகாமையாளர், சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்)



மண்ணில் 27.05.1938
விண்ணில் 15.07.2020

இணுவில் கிழக்கு சிவகாமி அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி சரவணமுத்து கடந்த (15.07.2020) புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - செல்லம் தம்பதிகளின் கனிஸ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான சந்திரசேகரம் பிள்ளை – தெய்வானை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சரவணமுத்து அவர்களின் அன்பு மனைவியும் சிறீ மகேஸ்வரன் (கனடா), நடனசபேசன் (கல்விசாரா ஊழியர், யா/ஸ்கந்த வரோதயக்கல்லூரி, கந்தரோடை, சுன்னாகம்) மற்றும் காலஞ்சென்ற கேதாரகௌரி ஆகியோரின் பாசமிகு தாயாரும் கஜானி, கீதராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஸிவானியா, வாசகி, யுகன், லுக்சன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான கமலம், இரத்தினம், மீனாம்பாள், கயிலாயநாதன், சிதம்பரேஸ்வரி மற்றும் தங்கேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், கந்தையா (ஓய்வுபெற்ற அதிபர்), தருமலிங்கம், மகேஸ்வரி, நடராசா, சோமசுந்தரம் மற்றும் சரஸ்வதி (ஓய்வுபெற்ற ஆசிரியை - கனடா), லக்சுமி (ஓய்வு பெற்ற ஆசிரியை - கனடா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கடந்த (16.07.2020) வியாழக்கிழமை அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவகாமி அம்மன் கோயிலடி,
சின்னத்தம்பி புலவர் வீதி,
இணுவில் கிழக்கு, இணுவில்.

தகவல்:-
திரு.ச. நடனசபேசன் (மகன்)
077 460 4329

## மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 03 . 1946



மறைவு 17 . 07 . 2020

### முத்துவேலு கந்தசாமி

(ஓய்வு பெற்ற தபால் ஊழியர் , அக்கராயன்)

பளையைப் பிறப்பிடமாகவும், இல:123, ஸ்கந்தபுரம், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும், தற்போது கச்சாய் வீதி, கொடிகாமத்தில் வசித்துவந்த முத்துவேலு கந்தசாமி (ஓய்வுபெற்ற தபால் ஊழியர், அக்கராயன்) 17.07.2020 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துவேலு - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், மகேஸ்வரியின் அன்பு பெறாமகனும், வசந்தலாதேவியின் அன்புக் கணவரும், பிரதீபா, பமிலா(லண்டன்), பிரசன்னன் (சுவிஸ்), ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்வகுமார் (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்- கிளிநொச்சி), வசீகரன் (லண்டன்), சோபிகா (சுவிஸ்), ஆகியோரின் மாமனாரும் செல்வராணி(லண்டன்), சரஸ்வதி (மணி- லண்டன்), காலஞ்சென்ற செல்வராசா, காலஞ்சென்ற நவரத்தினராசா, ஸ்ரீஸ்கந்தராசா(நெதர்லாந்து), இராஜேஸ்வரி, யோகராசா, யோகேஸ்வரி (கனடா), ஜெகதீஸ்வரி (சுவிஸ்), சக்திவேல், சித்திரவேல் (லண்டன்), ஈஸ்வரி(கனடா), ரேவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் அபிதாப், அபிசாரங்கன், அபிசாதனா, சகாஸ்(லண்டன்), பமேஸ் (லண்டன்) ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.07.2020) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 01.00 மணிக்கு கச்சாய் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று கச்சாய், பாலாவித்தாள் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


கச்சாய் வீதி,
கொடிகாமம்.

தகவல்:
குடும்பத்தினர்

077 641 2064

## மரண அறிவித்தல்

மலர்வு 20 . 11 . 1932



உதிர்வு 17 . 07 . 2020

### தம்பிப்பிள்ளை காந்திமதி

மாவடி வளவு கரணவாய் வடக்கு நவிண்டிலை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பிப்பிள்ளை காந்திமதி அவர்கள் 17-07-2020 வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - செல்லம்மா தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், மற்றும் சரவணபவன் (கனடா) , சண்முகநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதிப்பிள்ளை, கமலாம்பிகை, மின்னல்கொடி மற்றும் புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு சகோதரியும், சுகந்தினி(கனடா) அவர்களின் பாசமிகு மாமியாரும் பவித்திரன் (கனடா) அவர்களின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19-07-2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளிற்காக எள்ளங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: மகன் - (கனடா)
மற்றும் குடும்பத்தினர்

0016 472 925 422, 077 071 1377

## வீடு வாடகைக்குண்டு
யாழ். இந்துக்கல்லூரிக்கு அருகில் சிறிய குடும்பத்திற்கு ஏற்ற புதிய வீடு வாடகைக்குண்டு.
077 608 7687

## வேலையாள் தேவை
யாழ்நகரில் இயங்கும் நிறுவனம் ஒன்றுக்கு Cleaning வேலைசெய்யக் கூடிய ஆண் தேவை.
அடிப்படைச்சம்பளம் 16 000/= (5 நாள்)
021 222 8093

## வீடு வாடகைக்கு
கொழும்புத்துறை பிரதான வீதியில் 3 படுக்கை அறை; இரண்டு குளியல் அறை, சமையல் அறை, கோல் இரண்டுடன் புதிய வீடு வாடகைக்குண்டு.
076 042 4511

## வீடு வாடகைக்கு
இல.93/14, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள 3 அறை, இரண்டு குளியல் அறை, சமையலறை, Dining அறை பெரிய Hall கொண்ட வீடு வாடகைக்குண்டு.
பார்வையிடும் நேரம்: 2pm - 6pm ஞாயிறு
தொடர்பு: 077 538 6435

## சேவை
நீங்கள் அடகுவைத்து மீட்டெக்க முடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகுவைத்த நிறுவனத்திற்கு வருகைதந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப் பணம் அவ்விடத்தி லேயே தரப்படும்.நாடளாவிய ரீதியில் சினேகபூர்வமான சேவை
**AAA Gold Centar**
தொடர்பு: 076 568 4346

## வீடு வாடகைக்கு
யாழ். நகருக்கு அருகில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு விடப்படும்.
300000 முற்பணம், வாடகை 20,000
(அரச உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.
077 990 6867, 077 214 0220

## வீடு வாடகைக்கு
கோண்டாவில் பஸ் டிப்போவிற்கு முன்பாக பலாலி வீதியில், நல்ல புதிய வீடு வாடகைக்கு உண்டு. (அரச உத்தியோகத்தவர்கள் விரும்பத்தக்கது)
077 728 0268

## வீடு வாடகைக்கு
யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் யாழ் பல்கலைகழகத்திற்கு அண்மித்த பகுதியில் ஏழு அறைகளுடன் வாகன தரிப்பிடத்துடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. **Professionals Preferred**
மாத வாடகை **30,000/=**
முற்பணம் **300,000/=**
தொடர்பு 0714275384

## கடை விற்பனைக்கு
யாழ்ப்பாணம் நல்லூர் கோயில் சூழலில் ஏற்கெனவே மருந்தகமாக (PHARMACY & GROCERY) ஆகப் பாவிக்கப்பட்ட கடை விற்பனைக்குண்டு.
U.K. 0044 7311 868 453

## IPS
**இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள்**

**பிரிவு-26**
- ✓Diploma in Spoken English
- ✓Diploma in English
- ✓Diploma in MS-Office/ICT/ Website Development

**காலம் : 3 மாதங்கள்**
**அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்**
ஆரம்பம்
25.07.2020, 10.00AM

IPS
To your future
யாழ்.பல்கலைக் கழகத்திற்கு அண்மையில் (Mengos கட்டடத்தில்)
076 685 2529
077 602 1794
021 434 0229

## வீடு வாடகைக்கு
யாழ்.அரசடி வீதியில் வீடு வாடகைக்குண்டு (நிறுவனங்களுக்கும் ஏற்றது)
077 658 9009

## தேவை
யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு நன்கு அனுபவமும், திறமையும், வேலைத் தளத்தை முகாமைத்துவம் செய்யும் ஆளுமை உடைய சிவில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (T.O) தேவை.
077 592 5371,077 985 1946
E.mail: carrers@decon.lk

## வீட்டுடன் காணி விற்பனைக்கு
மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயிலுக்கு அருகில் 4பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.
077 6778359/ 077 4167634

## காணி தேவை
சாவகச்சேரிக்கும். அரியாலைக்கும் இடையில் 3-5 பரப்பு காணி தேவை.
**தொடர்புக்கு:- ராஜா 077 376 8043**
தரகர் தேவை இல்லை

மல்லாகத்துக்கும். இணுவிலுக்கும் இடையில் 2-5 பரப்பு காணி தேவை
**தொடர்புக்கு:- செல்வா 077 365 3989**
தரகர் தேவை இல்லை.

## கிளிநொச்சி
**கம்பஸ் மரங்கள்**
வீட்டு கூரைகளுக்கு தேவையான கம்பஸ் மரங்கள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 1117881 / 077 377 1696

## மணமகன் தேவை
யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1986 இல் பிறந்த 160 cm உயரம் உடைய Ph D (USA), BSc Engineering (Sri Lanka) தகைமை உடைய தற்போது USA இல் பணிபுரியும் மணமகளுக்கு தகுந்த வரனை வெளிநாட்டில் (USA விரும்பத்தக்கது) எதிர்பார்க்கின்றனர்.
077 996 3133, 011 236 3747, 001 650 334 6116

## மணமகள் தேவை
சீதாராம சர்மா என்பவர், தன்னுடைய மகனுக்கு அதே குலத்தில் மணப் பெண்பார்க்கிறார். மகன் கொழும்பில் MBBS Doctor, Final Year Student ஆக இருக்கிறார். 1993 இல் பிறந்தவர் உத்திராடம், 7 இல் செவ்வாய் உண்டு.A/L படித தவர்களும் விண்ணப்பிக்கலாம்.
077 539 3728

## விற்பனைக்கு
மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, யம்பு, பசன்புறுட், ரகன் புறுட், தென்னங்கன்று, செவிழை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்சா மா, கோப்பி, பட்டர்புறூட், ரம்பிட்டான், கறுவா, கராம்பு, மங்குஸ்த்தான், ஏலக்கா, சிதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலை வேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காளி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: நியூ லங்கா பாம் பலாலி வீதி, ஊரெழு மேற்கு பிள்ளையார் கோயில் வீதி, கணேசா பாடசாலை அருகில் 077 612 9343**

**கிளை: K.K.S. வீதி, இணுவில்**

## வேலையாள்கள் தேவை
யாழ் நகரில் சைவ உணவகம் ஒன்றிற்கு கீழ்வரும் வேலையாள்கள் தேவை.
**(கவர்ச்சிகரமான சம்பளம், தங்குமிட வசதியுடன்)**

1. உணவு பரிமாறுபவர்கள் (ஆண்/ பெண்)
2. ரொட்டி வேலை
3. தோசை போடுபவர்
4. சமையல் உதவியாளர்
5. சமையலாளர்
6. அரையல் வேலையாளர்
7. சுத்திகரிப்பாளர்

தொடர்புகளுக்கு:-
077 791 7753, 021 568 1660

## வேலையாள்கள் தேவை
கடையில் வேலை செய்யக்கூடிய அனுபவமுள்ள வேலையாள்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது.
**தொடர்பு:- 076 116 5106**


## மணமகள் தேவை
1974ம் ஆண்டு பூரநட்சத்திரம், 8ல் செவ்வாய் உள்ள **USA** ல் வசிக்கும் மணமகனுக்கும், 1980ம் ஆண்டு கேட்டை 4ம் பாதம் லக்கினத்தில் செவ்வாய் உள்ள வைத்தியருக்கும் மணமகள் தேவை .
**தொடர்புகளுக்கு 0772987506**

## பணியாளர்கள் தேவை
**யாழ்நகரில் இயங்கும் பிரபல ஹோட்டல் ஒன்றிற்கு சமையல் தெரிந்தவர், பார்சல் கட்டுபவர், உணவு பரிமாறுபவர்** உடனடியாகத் தேவை.
021 221 6779

## பணிப்பெண் தேவை
யாழ்ப்பாணத்தில் உள்ள அரச உத்தி யோகத்தர் குடும்பம் ஒன்றுக்கு வீட்டு வேலை செய்ய பணிப்பெண் தேவை.
சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.
077 960 4079, 077 086 8634

## வாடகைக்கு
யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரும் யாழ்தேவி A/C ரயில் தரித்து நிற்கும் வெள்ள வத்தை ரயில் நிலையத்துக்கு முன்பாக இல.8 புகையிரத வீதி, வெள்ளவத்தையில் அமைந்துள்ள லொட்ஜில் தனி அறைகள் இணைந்தகுளியலறையுடன் கூடிய அறைகள் நாள், கிழமை மாத வாடகைக்குண்டு.
011 250 4281, 071 299 1256

## ES Printers
மக் பிரிண்ட் (MUG) 450/=



# 357, Kasthuriyar Road, Jaffna.
021 492 7471 / 021 492 7472

## லக்சுமி மணிமண்டபம்
- திருமண வைபவம்
- பூப்புனித நீராட்டு விழா
- பிறந்த நாள் விழா
- விசேட ஒன்று கூடல் நிகழ்வுகள்

போன்ற நிகழ்வுகளுக்கு நீங்கள் நாடவேண்டிய இடம்
**லக்சுமி மணி மண்டபம்**

**இ.அன்னலக்சுமி**
விளையாட்டு அரங்கு வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
அன்னலக்சுமி - 077 125 7796 சயந்தன்- 077 845 6481
சுமன் - 077 010 9368

## இந்தியத் துணைத் தூதரகம்
### யாழ்ப்பாணம்
### மோட்டார்வண்டியை பகுதிகளாக்கி இரும்புக்கழிவுகளையும் அதன் உதிரிப்பாகங்களையும் விற்றல்

இந்தியத் துணைத்தூதரகத்தின் அலுவலகப் பயன்னாட்டில் இருந்த குண்டு துளைக்காத மோட்டார்வண்டி BMW Model X5, Petrol, 4395.00CC இயந்திர வலுவுடைய கறுப்பு நிற மோட்டார்வண்டி கழிவுகளாக (Scrap) விற்கப்படவுள்ளது. வாகனத்தை நீங்களே வெட்டி இரும்புக் கழிவுகளையும் அதன் உதிரிப்பாகங்களையும் பெற்றுக்கொள்வதற்குமான தங்களால் வழங்கக்கூடிய அதிகூடிய விலைக்கான கோரல்களை விருப்பமுள்ள வர்கள் சமர்ப்பிக்கலாம்.

**(குறிப்பு :** தெரிவு செய்யப்பட்ட கொள்வனவாளர் மேற்படி பாகங்களுக்கான (கழிவு இரும்பு விலைக்கான) செலுத்தப்பட வேண்டிய சுங்கவரி மற்றும் வரிகளை செலுத்த வேண்டும். எனவே விண்ணப்பதாரிகள் தங்களால் செலுத்தக் கூடிய அதி கூடிய பெறுமதியை வரிகள் நீங்கலாக குறிப்பிட வேண்டும்).

விண்ணப்பப்படிவங்களை மூடிய காகித உறையினுள் இட்டு,**“மோட்டார் வண்டியை பகுதிகளாக்கி நீக்குதல்” என்று தலைப்பிட்டு,**

**நிர்வாக அதிகாரி,**
**இந்தியத் துணைத் தூதரகம்**
**14, மருதடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**

எனும் முகவரிக்கு 10 ஓகஸ்ட் 2020 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கவும். விலைக்கோரலுக்கு முன்பதாக மோட்டார் வண்டியைப் பார்வையிட விரும்புபவர்கள் முன் அனுமதி பெற்று பார்வையிடலாம். 0769277778 என்ற கைபேசிக்கு அழைப்பதன் மூலமாகவோ அல்லது admn.jaffna@mea.gov.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின் னஞ்சல் அனுப்பவதனூடாகவோ வாகனத்தை பார்வையிடுவதற்கான முன் அனுமதிகளை பெற்றுக்கொள்ளலாம்.

**கூறுவிலைகள் சமர்ப்பித்தோர் 12/08/2020 அன்று 10 மணிக்கு தூதரக வளாகத்திற்கு அவர்கள் முன்னிலையில் உறைகளைத் திறக்க அழைக்கப்படுகிறார்கள்.**

**குறிப்பு :** இறுதி முடிவுகள் அனைத்தும் விற்றலுக்கான தூதரக குழு தீர்மானிக்கும்.

**மணமகள் தேவை**
யாழ் இந்து கௌரவ குடும்பம் பிரான்சில் வதிவிடம் பெற்ற விவாகரத் துப்பெற்ற மணமகனுக்கு இந்து சமயத்தைச் சேர்ந்த, நன்கு படித்த, 40-45 வயதுடைய மணமகள் தேவை. உள்நாட்டிலும், வெளி நாட்டிலும் விரும் பத்தக்கது. தொடர்புகொள்ள வேண்டிய நேரம் : கிழமை நாள்களில் 5.30 இற்கும் பின்பும் சனி, ஞாயிறில் எந்த நேரமும் தொடர்புகொள்ளவும்.
வசந்தன்
091 733 964 5110. 0033 753742021
No.01, Souare De Toulon, 95380, Loures , France.

## உடல் எடை குறைய வேண்டுமா?

- எடை கூடுகிறதா?
- வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
- உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

**பால்மா குளிசை** - வயிறு, மார்பு குறைக்கும் கிறீம்
15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா?
➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா?➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா?
➤பொன்னாங்காணி? கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணெய் குளிசை
இந்த எண்ணையைப்பாவித்து பயனடைய
077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

## திருத்தம்

18.07.2020 ஆம் திகதி எமது பத்திரிகையில் வெளியாகிய யாழ்ப்பாண பல்கலைக்கழக ஏல விற்பனை தொடர்பான விளம்பரத்தில் (பக்கம் 23) மாடுகளின் இனம் தவறுதலாக ஜமுனாபாரி கலப்பு என அச்சிடப்பட்டுள்ளது. அதனை " ஜேர்சி கலப்பு ' என திருத்தி வாசிக்கவும்.

பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்

## வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் விவசாய உற்பத்தி பொருள்கள் சேகரிப்பு நிலைய கட்டடம் அமைத்தலுக்கான கேள்வி கோரல்

எமது சங்கத்திற்கான விவசாய உற்பத்தி பொருள்கள் சேகரிப்பு நிலைய கட்டடம் அமைப்பதற்கான கேள்வி கோரல்கள் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடம் இருந்து கோரப்படுகின்றது. இது தொடர்பான விவரங்களை சங்க அலுவலக நேரத்தில் பெற்றுப் பார்வையிடலாம். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மீளளிக்கப்படாத வைப்பாக ரூபா 1000.00 செலுத்தி கேள்விப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம் கேள்வி கோரல்களை 24.07.2020 இற்கு முன்னதாக **"பொதுமுகாமையாளர் வேலணை பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் வேலணை"** என்னும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கவும்

**குறிப்பு** - அலுவலக நேரம் (காலை 8.30- மாலை5.00 மணிவரை)

0212211522

பொதுமுகாமையாளர்
வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
வேலணை

## நிறைவாழ்வு மையம்

**Centre For Holistic Healing**

நிறைவாழ்வு மையத்தினால் கீழ்வரும் தேவை உடையவர்களிற்கு ஆற்றுப்பணி வழங்கப்படுகிறது.

CENTRE FOR HOLISTIC HEALING
J.D.C.S.I

- மனவழுத்தம் உள்ளவர்கள்
- பலதரப்பட்ட சவால்களை எதிர்கொள்ள விழைவோர்
- குடும்பத்தில் உறவுசிக்கல் உள்ளவர்கள்
- இழப்புகளால் ஏற்படும் மனச்சோர்வினை மேற்கொள்ள விழைவோர்.
- வாழ்வில் ஏற்படும் சிக்கல்களிற்கு முடிவெடுக்க முடியாமல் தவிப்போர்

தொடர்புக்கு:
Jaffna College Undergraduate Department,
464, Hospital Road, Jaffna.
T.P:0777370494, 021 222 3382

### வரலாற்று...

யில், இராவணன் மற்றும் ஆகாய மார்க்கமாக இழக்கப்பட்ட புராதன தொல்பொருள் உரிமைகள் தொடர்பில் ஆய்வுகளை ஆரம்பிக்கவிருப்பதாகவும், அதற்கு உதவக்கூடிய வகையில் இராவணன் பற்றிய வரலாற்று நூல்கள் மற்றும் ஆவணங்கள் இருப்பின் மக்கள் அவற்றைத் தந்துதவ முடியும் என்றும் சுற்றுலாத்துறை மற்றும் விமானசேவைகள் அமைச்சின் கீழான இலங்கை விமானசேவைகள் அதிகாரசபை அறிவித்திருக்கிறது.

விமானசேவைகள் அதிகாரசபையின் சுற்றாடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவினால் 'இராவண அரசன் மற்றும் ஆகாயமார்க்கமாக நாம் இழந்த புராதன தொல்பொருள் உரிமைகள்' என்ற விடயம் தொடர்பான ஆராய்வுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அதன் முதற்கட்டமாக இராவண அரசன் பற்றிய வரலாறு மற்றும் தரவுகள், அவை பற்றிய புத்தகங்களைச் சேகரிப்பதற்கு அதிகார சபை தீர்மானித்திருக்கிறது.

இராவணன் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் அடங்கிய ஆவணங்களை எமக்குத் தந்துதவுமாறு பொது மக்களைக் கேட்டுக்கொள்கின்றோம். அவ்வாறு வரலாற்று ஆவணங்களைத் தந்துதவ விரும்பும் பட்சத்தில் இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பாக 076 6317110 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலமாக அதுகுறித்துத் தகவல் தரப்பட வேண்டும். இவ்வாறு எம்மிடம் தரப்படும் வரலாற்று நூல்கள் மற்றும் ஆவணங்களுக்காகப் பொருத்தமான தொகை கொடுப்பனவாக வழங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ,5)

### தமிழ்த்...

சமுதாயம் வாக்கு என்னும் ஆயுதத்தைப் பயன்படுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றியை உறுதிப்படுத்த வேண்டும் என்று ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா அழைப்பு விடுத்தார்.

கந்தர்மடத்தில் நேற்று மாலை இடம்பெற்ற, தமிழ்த் தேசியத்தில் தீவகத்தின் வகிபாகம் என்ற தொனிப்பொருளிலான கலந்துரையாடலிலேயே மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எம்மை யாராலும் சிறுபான்மை என்று கூற முடியாது. எமக்கென தாயக பூமி உண்டு. எமக்கென தனியான தமிழ் மொழியுண்டு. நாம் அங்கீகரிக்கப்பட்ட தேசிய இனம். வடக்கும் கிழக்கும் தமிழர்களின் தாய் மண். தமிழ் எமது தாய் மொழி. எந்தச் சந்தர்ப்பத்திலும் எம்மை சிறுபான்மை என்று நாமம் சூட்ட எவருக்கும் இடமளிக்கக் கூடாது.

நாம் வெள்ளையர் ஆட்சியிலேயே போராட்டம் நடத்தியவர்கள். 1931ஆம் ஆண்டு டொனமூர் நிர்வாகத்தின்போது யாழ். இளைஞர் அமைப்பை உருவாக்கினார்கள். அங்கு சுதந்திரம், சமத்துவம், அபிலாசை என்பன உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று அறிக்கையிட்டனர். அரசு ஏற்கவில்லை. அதனால் அப்போது நடைபெற்ற தேர்தலைப் புறக்கணித்தனர். ஆனால் ஜீ.ஜீ.பொன்னம்பலம் தனித்துப் போட்டியிட்டு தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டு தோல்வியடைந்தார்.

1936ஆம் ஆண்டில் சிங்களமும் தமிழும் சமத்துவம் என ஏற்கப்பட்டது. ஆனால் 1956ஆம் ஆண்டு எஸ்.டபிள்யூ பண்டாரநாயக்காவால் ஏற்படுத்தப்பட்ட தனிச்சிங்கள சட்டத்தால் சமத்துவம் அழிக்கப்பட்டது. நாம் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டோம். இளைஞர்கள் தாமாக ஆயுதம் தூக்கவில்லை. மாறி மாறி வந்த சிங்கள அரசுகளே எம்மை ஆயுதம் ஏந்த வைத்தன.

எமக்கென சொந்த மண் உண்டு. சொந்தமான மொழி உண்டு. நாமும் இந்த மண்ணுக்கு சொந்தக்காரர்கள். இதனை எவராலும் நிராகரிக்க முடியாது. அதனை நாம் பாதுகாக்க வேண்டும்.

தென்னிலங்கை அரசுகளால் அங்கீகரிக்கப்பட்டு பேரம்பேசும் ஒரு சக்தியாக இருப்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே. ஒருவர் இருவராக சென்று அங்கே எதையும் சாதித்து விட முடியாது.

எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குப் பேரம் பேசும் சக்தியை வழங்க வேண்டும். இளைஞர், பெரியோர், முதியோர் என்று அனைவரும் கட்டாயமாக வாக்களிக்க வேண்டும். எமது வாக்களிப்பு வீதம் 70 வீதமாக அதிகரிக்க வேண்டும். இதன்படி வாக்களித்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூடுதலான ஆசனங்களைப் பெற முடியும். இதனை மனதில் கொண்டு எல்லோரும் வாக்களிக்க வேண்டும். வாக்களிப்பு விகிதாசாரத்தை அதிகரிக்கச் செய்ய வேண்டும், என்றார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபை தவிசாளர் சி.வி.கே.சிவஞானம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், யாழ்ப்பாண மாநகர மேயர் இ.ஆனல்ட் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஒ,2)

### சுவரொட்டி...

ஏற்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது. வாக்குவாதம் முற்றி அது கைகலப்பானது.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-9)

## Doctor on Call Home Visit

இயலாதவர்கள், படுக்கை நோயாளிகள், முதியோர்கள் வீட்டிலேயே வைத்தியர்களின் அடிப்படை சிகிச்சைகளைப் பெறமுடியும்.

அழையுங்கள்:- **077 316 4617**

**Lava Hospital**
85, Clock Tower Road, Jaffna

## பணியாளர்கள் தேவை

யாழ் நகரில் இயங்கும் சுப்பர் மார்கட் ஒன்றுக்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.
01. காசாளர் - பெண் (நேரம் 8 am to 9 pm) சுழற்சிமுறை)
(யாழ் நகரை அண்மித்தவர் விரும்பத்தக்கது)

தொடர்புகள்: 021 492 7080, 077 6231295
நேரில் சமூகமளிக்கவும் 20.07.2020 - 25.07.2020
9.00 - 4.00 மணி வரை
அன்னை நாகபூட்சிற்றி
இல. 175 கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்.

## பணியாளர்கள் தேவை

யாழ் நகரில் இயங்கும் உற்பத்தி நிறுவனம் ஒன்றுக்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.
01. சமையல், பலகாரம் வேலை செய்ய தெரிந்தவர்கள் - பெண்
02. சமையல் , பலகாரம் வேலை செய்ய ஆர்வம் உள்ளவர்கள் - பெண்

தொடர்புகள்: 077 3638149
நேரில் சமுகமளிக்கவும் 20.07.2020 - 25.07.2020
9.00 - 4.00 மணி வரை
அன்னை நாகபூட்சிற்றி
இல. 175 கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்.

**தார்**
BITUMEN|තාර



சாலை கட்டுமானத்திற்கு
தேவையான தார் உங்கள் வேலைத்தளத்திற்கு

**BITUMIX**
இடம் இருந்து
தார் 60/ 70, 80/ 100
எமல்ஸின் CSS 1, CRS 1, CRS 2
கட்பாக் MC 30
Contact us
0777 996 908 / 0777 999 062

www.bitumix.lk
Bitumix Private Limited
BITUMIX (PRIVATE) LIMITED

எம் இதயத்தில் துயில்கொள்ளும் எமது அன்புத் தந்தையின்

## இரண்டாம் ஆண்டு நினைவு நாள்



### அமரர் செல்லத்துரை கார்த்திகேசு

திதி: சதுர்த்தசி (19.07.2020)

அன்பை விதைத்து பாசத்தைபொழிந்து
பண்புடன் நாம் வாழ வழிதந்ததெய்வம்!
மெழுகாய் உடல் உருகி உழைத்து
வாழ்வில் ஒளியேற்றிய பிதா
ஆண்டுகள் புரண்டோடும்போதும்
மாண்டுவிடா உங்கள் நினைவுகளை ஏற்று
உங்கள் ஆசிவேண்டித் துதிக்கின்றோம்
எமக்கு நல்வழி காட்டிடுவீர்.

உங்கள் பிரிவால் துயருறும் தங்கள்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

மலர்வு 01.08.1940 — உதிர்வு 10.08.2018

8 ஆம் வட்டாரம்
மண்டைதீவு யாழ்ப்பாணம்.

## 5 ஆம் ஆண்டு நினைவலைகள்

### அமரர் சுரேஸ் சர்வாஜினி

(முன்னாள் விஞ்ஞான ஆசிரியை
யூனியன் கல்லூரி தெல்லிப்பழை.
வேலணை நடராஜா
வித்தியாலயம்)



மலர்வு
16.07.1971

உதிர்வு
12.08.2015

திதி: துவாதசி (19.07.2020)

உம் விழிமூடி ஐந்தாண்டுகள் விரைந்தே போனது
வழி எங்கும் உம் நினைவில் எம் வாழ்வே
தொடருது உம் கனிவும் கருணை
உம் நேர்மை எம் நினைவில் நிழாய் தொடருது
உம் ஆத்மா சாந்தியடைய பிரார்க்கின்றோம்.

சிலும்பிலாட்டி,
ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.

என்றும் நீங்காத நினைவுகளுடன்
கணவர், கேதினி, கீர்த்தனி
(பிள்ளைகள்), சகோதரர்கள்,
பெற்றோர், உறவினர்கள்.

(cs33071) (13.17)

## 31ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்

### அமரர் செல்லம்மா இராசரத்தினம்



கடந்த 22.06.2020 அன்று சிவப்பேறெய்திய எமது அன்புத் தாயார் அமரர் செல்லம்மா இராசரத்தினம் அவர்களின் அந்தியேட்டி நிகழ்வு நாளை (20.07.2020) திங்கட்கிழமை காலை 6.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், 22.07.2020 புதன்கிழமை 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் தொடர்ந்து மதியபோசன நிகழ்வும் நடைபெறும்.

தங்கள் அனைவரையும் மேற்படி நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அதே வேளை எமது தாயாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும், மலர் வளையம் சாத்தியோருக்கும், கண்ணீர் அஞ்சலியினைப் பிரசுரித்தோர்க்கும் எம் துயரில் பங்கு பற்றி ஆறுதலளித்த அன்புள்ளங்களிற்கும் எம் குடும்பத்தினர் சார்பில் மனமார்ந்த நன்றியினை சமர்ப்பிக்கின்றோம்.

கச்சாய் வடக்கு,
கொடிகாமம்.

குடும்பத்தினர்.

### மாணவன்...

விஞ்ஞான பீட இறுதியாண்டு மாணவர்கள் தங்கியிருந்த நிலையில் அவர்களுக்கு இடையே கைகலப்பு ஏற்பட்டுள்ளது. கைகலப்பில் ஒருவர் மற்றொருர் மீது கத்தி கொண்டு தாக்குதல் நடத்த முயன்றுள்ளார். அதைத் தடுக்க முயன்ற பெரும்பான்மை இன மாணவரே கத்திக் குத்துக்கு இலக்காகியுள்ளார். கழுத்துப் பகுதியில் காயமடைந்த அவர் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

கைலப்பில் ஈடுபட்டவர்கள் வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். மாணவர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அதேவேளை, விஞ்ஞானபீட இறுதி ஆண்டு மாணவர்களுக்கு பரீட்சைகள் நடைபெற்று வருகின்றது குறிப்பிடத்தக்கது. (ஒ,5,26)

### நன்மை...

அடிப்படையிலேயே வன்னியில் நிலைபெற்றுள்ளார்கள் என்பதை நாம் மறத்தல் ஆகாது. பல இளம் சகோதர சகோதரிகள் வறுமையின் நிமித்தம் இவர்களின் பிடிக்குள் அகப்பட்டுள்ளார்கள்என்பதை அவர்களே தெரிந்து கொள்ளாதிருக்கின்றார்கள். அவர்களுக்குஒரு மாற்று வாழ்வாதாரத்தை நாம் வழங்க முன்வர வேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி சந்தை மைதானத்தில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

'நாளுக்கு நாள் எம் மத்தியில் படையினர் தொகை அதிகரித்து வருகின்றது. எமது ஜனாதிபதி ஒரு முன்னைய இராணுவவீரர். எனவே வருங்காலம் எப்படி அமையும் என்பதில் பலத்த கரிசனை பலர் மத்தியில் இப்பொழுது எழுந்துள்ளது. இம்முறை நடத்தவிருக்கும் தேர்தல் சரியாக, முறையாக, ஜனநாயக முறைப்படி நடத்தப்படுமா என்ற கேள்வி எழுந்துள்ளது. காரணம் கொரோனாவைச் சாட்டி இராணுவ பிரசன்னம் தற்போது அளவுக்கதிகமாக வட மாகாணத்தில் ஏற்பட வழி அமைத்திருப்பதேயாகும்'- என்றார். (ஒ,5)

## பதவி ஆளணி தேவை


ஆவரங்கால், புத்தூரில் அமைந்துள்ள **"பிள்ளையார் மெடிக்கல் கிளினிக்"** இல் கீழ்க்காணும் பதவி ஆளணிக்கு பொருத்தமானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

விண்ணப்பங்கள் மற்றும் ஆவணங்களை 25.07.2020 க்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைக்கவும்.

- **நிர்வாக மற்றும் விற்பனை முகாமையாளர் - ஆண்**
  **(SALES & ADMIN MANAGER)**
- **களஞ்சியப் பொறுப்பாளர் - ஆண் / பெண்**
  **(STOCK KEEPER)**
- **வரவேற்பாளர் - பெண்**
  **(RECEPTIONIST)**

**தொடர்பு:- பிள்ளையார் மெடிக்கல் கிளினிக்**
**ஆவரங்கால் புத்தூர் - 077 778 9317**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் இரத்தினம் தவமணி (பெரியவள்)

தோற்றம்
20.05.1942

மறைவு
30.07.2019

ஓராண்டு சென்றாலும்
உங்கள் நினைவுகள் எம்மை விட்டு விலகாது
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கிறோம்.

3ஆம் சந்தி,
கெருடாவில் தெற்கு,
தொண்டைமானாறு.

உங்கள் நினைவில்வாடும்
குடும்பத்தினர்

(ant.1160) (13.17)

## மரண அறிவித்தல்

### திருமதி. திருத்தணிகை நவரத்தினம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை, யாழ்/ தந்தை செல்வா தொடக்கநிலைப்பள்ளி, தெல்லிப்பளை)



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், தெல்லிப்பளை துரையப்பா வீதியினை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. திருத்தணிகை நவரத்தினம் நேற்று (18.07.2020) சனிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகப்பிள்ளை அபிராமி தம்பதிகளின் புத்திரியும் காலஞ்சென்ற வல்லிபுரம் நவரத்தினம் (ஓய்வுபெற்ற பிரதம லிகிதர், யாழ்.மாவட்ட செயலகம்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் முத்து தம்பதியினரின் அன்பு மருமகளும் தவம், காலஞ்சென்றவர்களான புஸ்கலாதேவி, வாசிநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் நவதர்ஷனி (விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்), நவரஜனி (ஆசிரியை, அல் ஹிக்மா மகா வித்தியாலயம், கொழும்பு 12), உதயனி (மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர், யாழ் மாவட்ட செயலகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கருணாகரன் (அதிபர், கைதடி விக்னேஷ்வரா மகா வித்தியாலயம்), மேவின் டோசன் (வர்த்தகர், கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும் ராமிலன் (மாணவன், யாழ்.இந்துக் கல்லூரி), கிருஸ்ணிகா, (யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.07.2020) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 02.00 மணிக்கு இல.8/3, கற்பக விநாயகர் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவதர்ஷனி : 0718617947
உதயனி : 0774937640

தகவல்:
குடும்பத்தினர்

## சமஷ்டி...

தமிழ் அரசுக் கட்சி கோரி நிற்கின்றது. தமிழ் மக்கள் ஒரு தேசிய இனத்துக்குரிய அனைத்து அம்சங்களையும் கொண்டவர்கள் என்பதால் தமிழர் ஒரு தனித்துவமான தேசிய இனம், அந்த அடிப்படையில் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது தேர்தல் அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கை யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியிலுள்ள உள்ள இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்றுக் காலை வெளியிடப்பட்டது. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா தேர்தல் அறிக்கையை வெளியிட்டார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்றத் தேர்தல் வேட்பாளர்கள் அனைவரும் அதில் கலந்துகொண்டனர்.

தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:

**இராணுவமயமாக்கல்**

பல்வேறு நோக்கங்களுக்காக பணிக் குழுக்களை நியமிப்பதில் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளை ஈடுபடுத்துதல் போன்ற அரசின் தற்போதைய நடவடிக்கைகள் தொடர்பில் நாம் அதிக அக்கறை கொள்கின்றோம். ஜனநாயக வெளி மற்றும் நிறுவனங்களைத் துரிதமாக மீள் இராணுவமயமாக்கலுக்கு எதிராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் சவால் விடுக்கும். பல வழிமுறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் இராணுவமயமாக்கலை நீக்குவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழைப்பு விடுக்கும்.

இராணுவத்தில் சரணடைந்தும் காணாமல்போன பலருக்கு என்ன நடைபெற்றது என்ற கேள்வி இன்னமும் உள்ளது. இந்த விடயங்களில் உண்மை கண்டறியப்பட வேண்டும், நீதி வழங்கப்பட வேண்டும் மற்றும் இழப்பீடு கொடுக்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்துகின்றது.

தமிழ் சமூகம் அனுபவித்த பாகுபாடு மற்றும் வன்முறை ஆகியன எந்தவொரு நிலைமாறுகால நீதிச் செயல்முறையிலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

**சர்வதேசப் பொறிமுறை**

ஒரு சுயாதீனமான சர்வதேசப் பொறிமுறையைத் தொடர்ந்து ஆதரிப்பதுடன், இலங்கையில் நடந்துகொண்டிருக்கும் ஆள்கொணர்வு மனு வழக்குகள் போன்றவற்றில் செயற்படுவது போலவே, நீதி வழங்கப்படாத சந்தர்ப்பங்களில், இலங்கை தன் ஆணையைச் சரிவர நிறைவேற்ற வேண்டும் என்பதை வலியுறுத்திக் கொண்டிருக்க வேண்டும்.

வரலாற்று இழப்புக்களையும், பெண்கள், போரால் பாதிக்கப்பட்டவர்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியவர்கள் போன்ற மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள குழுக்களின் தேவைகளையும் கணக்கில் எடுத்துக் கொள்ளும் ஒரு விரிவான முழுமையான இழப்பீட்டுத் திட்டம் ஒன்று வகுக்கப்பட வேண்டும்.

**நினைவேந்தல்**

தமிழ் மக்களை நினைவுகூரும் உரிமை மதிக்கப்பட வேண்டும் என்றும், அவர்கள் போர் முடிவடைந்ததில் இருந்து நடைபெற்றுவருவதைப் போலவே அவர்கள் நினைவுகூரலில் ஈடுபடும்போது மிரட்டல், துன்புறுத்தல் மற்றும் அச்சுறுத்தல்களுக்கு ஆளாகக்கூடாது. மேலும் நினைவுக் கிரியைகளில் ஈடுபடுவதைத் தடுக்கக் கூடாது என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கோருகின்றது.

சிவில் சமூக அமைப்புக்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் ஆகியோர் கண்காணிப்பு, துன்புறுத்தல் மற்றும் அச்சுறுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதையும், சிவில் சுதந்திரம் முடக்கப்படுவதற்கான முயற்சிகள் இடம்பெறுவதையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கவனத்தில் கொள்கின்றது. இந்த அடக்குமுறை நடவடிக்கைகளுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிராக இருக்கும்.

**அடிப்படைப் பிரச்சினைகள்**

போர் முடிந்து ஒரு தசாப்தத்துக்கும் மேலாகியும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கிட்டத்தட்ட 90 பேர் சிறைகளில் உள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவர்களை விடுதலை செய்வதற்கும், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ரத்துச்செய்வதற்கும் அழுத்தம் கொடுத்து வருகின்றது. இந்த நோக்கத்தைக் கடுமையாக தொடர்ந்து முன்னெடுக்கும்.

போரின்போது வடக்கு கிழக்கில் இடம்பெயர்ந்த மக்கள் தாமதமின்றித் தங்களின் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும். மேலும் இவர்களுக்கு வீட்டு மற்றும் வாழ்வாதார வசதிகள் அவர்களுடைய சுயமரியாதையை மதிக்கும் வகையில் வழங்கப்பட வேண்டும். இராணுவக் கட்டுப்பாட்டின் கீழுள்ள தனியார் நிலம் விடுவிக்கப்பட்டு, ஆக்கிரமிப்புக் காலத்துக்குரிய இழப்பீடு உரிமையாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும். தென்னிந்தியாவில் சுமார் ஒரு லட்சம் அகதிகளின் மீள்வருகை துரிதப்படுத்தப்பட்டு இவர்களின் மீள்குடியேற்றம் மற்றும் மறுஒருங்கிணைப்புக்கு தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

**சிங்களமயமாக்கல்**

தொல்பொருள் இடங்களைப் பாதுகாத்தல் என்றபோர்வையில் பிராந்தியத்தைச் சிங்களமயமாக்கும் முயற்சிகளையும், பிராந்தியத்தின் சமூகங்களின் மத வழிபாட்டுத் தலங்களை அழிப்பதையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்த்து நிற்கும்.

போர் முடிந்ததையடுத்து ஒரு தசாப்தத்துக்கும் மேலாக அரச புனர்வாழ்வு திட்டங்களுக்கு அனுப்பப்பட்டவர்கள் தங்கள் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதில் பல தடைகளை எதிர்கொள்கின்றனர். அவர்கள் அரசால் துன்புறுத்தல் அல்லது அச்சுறுத்தல்களுக்கு ஆளாகாமல் இருப்பதை உறுதி செய்யப்பட வேண்டும். அத்தோடு அவர்கள் முற்றுமுழுதாக சமூகத்துக்குள் உள்வாங்கப்படுதலும் வேண்டும்.

பெண்கள் தலைமையிலான குடும்பங்கள் பல காரணிகளால் மாறுபட்ட பிரச்சினைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். இவ்வர்க்கத்தினருக்கு சிறப்பு நடவடிக்கைகள் கிடைக்கப்பெற வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்துகின்றது.

**ஐ.நா. தீர்மானம்**

அரசின் இணை அனுசரணையுடன் நிறுவப்பட்ட ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குத் தீர்மானங்களான 30/1, 34/1 மற்றும் 40/1 முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம்.

யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை தேர்தல் மாவட்டங்களில் வாழும் வாக்காளர்கள் அனைவரும் ஒன்றுபட்டு வடக்கு, கிழக்கு மக்களின் உரிமைகள் மற்றும் அபிலாசைகளுக்காகத் தொடர்ந்து குரல் எழுப்ப, செயலாற்ற முழுமையாகத் தமது வாக்குகளை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி என்ற பெயரிலும், வீட்டுச் சின்னத்திலும் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து தமிழ் மற்றும் தமிழ் பேசும் மக்களது அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் இந்தத் தேர்தல் அறிக்கையில் முன்மொழியப்பட்டிருக்கும் செயற்றிட்டங்களுக்குத் தங்கள் ஜனநாயக ஆணையைப் பூரணமாக வழங்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேண்டி நிற்பதாக அந்தக் கட்சியின் தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டுள் ளது. (ஒ,எ)

## தமிழீழத்தையே...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கை நேற்று வெளியிடப்பட்டது. அதில், சமஷ்டி அடிப்படையிலான தன்னாட்சியே தீர்வு என்று வலியுறுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர்கள் மேற்கண்டவாறு கூறினார்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது,

வடக்கு, கிழக்கில் சமஷ்டி அடிப்படையில் கூட்டமைப்பு கேட்கும் தன்னாட்சி தீர்வு தனிநாட்டையும் தனி அரசையும் பறைசாற்றுகின்றது.

தமிழர்கள் இந்த நாட்டின் பிரஜைகள், அவர்கள் தேசிய இனத்தவர்கள் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம். அதற்காக அவர்கள் தனியாக நின்று உரிமைகளைக் கேட்க முடியாது; தீர்வைக் கேட்க முடியாது.

இலங்கையிலுள்ள மூவினத்தவர்களுக்கும் நாடு ஒன்று அரசு ஒன்று அரசமைப்பு ஒன்று. எனவே, மூவினத்தவர்களுக்கும் ஒரே விதமான உரிமைகளையும், ஒரே தீர்வையும்தான் வழங்க முடியும். தமிழர்கள் தனித்துவமான இனம் என்று அவர்களுக்குத் தனியாக எதையும் வழங்க முடியாது.

அவர்கள் கோரும் உரிமைகளும், தீர்வும் தனித் தமிழீழத்தையே பிரகடனப்படுத்துகின்றது.

வடக்கு, கிழக்கு தமிழர்களுக்குச் சொந்தமான மாகாணங்கள் அல்ல. அதில் மூவின மக்களும் வாழ்கின்றார்கள். இதை உணர்ந்து கூட்டமைப்பினர் செயற்பட வேண்டும்.

நாட்டின் அரசமைப்புக்கு முரணான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் அல்லது அதைத் தூக்கிக் குப்பையில் வீச வேண்டும், என்றனர். (ஒ,5,22)

## 500 பேரை...

சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் அனில் ஜயசிங்கவுக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச பணிப்புரை விடுத்துள்ளார்.

நல்லூர் ஆலயத் திருவிழா எதிர்வரும் 25ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. கொரோனா வைரஸ் பரவலை அடுத்து அறிவிக்கப்பட்டுள்ள, சுகாதார வழிகாட்டுமுறைகளுக்கு அமைவாக, 50 பக்தர்கள் மட்டுமே, ஆலயத் திருவிழாவில் பங்கேற்க முடியும்.

நல்லூர் கந்தன் ஆலய திருவிழாவில் வழக்கமாக இலட்சக்கணக்கான பக்தர்கள் பங்கேற்பது வழக்கம் என்ற போதும், கொரோனாத் தொற்று அச்சம் மற்றும், தனிமைப்படுத்தல் சட்டவிதிகளின் காரணமாக அதிகளவானோர் பங்கேற்க முடியாத நிலை காணப்பட்டது.

இந்த விடயம் பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் கவனத்துக் கொண்டு செல்லப்பட்டது.

இராணுவத் தளபதி, சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோருடன் தொலைபேசி ஊடாக பிரதமர் நேற்றுப் பேச்சுக்களை நடத்தினார்.

நல்லூர் ஆலயத் திருவிழாவுக்கு போர்க் காலத்திலேயே லட்சக் கணக்கில் பக்கதர்கள் செல்வது வழமை என்று பிரதமர் தெரிவித்துள்ளார். நல்லூர் ஆலயம் பெரியளவு விஸ்தீரணம் கொண்டது என்பதால், அதிகளவு பக்தர்கள் ஒரே நேரத்தில் ஆலயத்தில் நின்றாலும், சமூக இடைவெளியைப் பேண முடியும் என்று பிரதமர் குறிப்பிட்டுள்ளார். ஆலயச் சூழலை நேரடியாக அவதானித்து, அதற்கு ஏற்ற வகையில் சுகாதார ஒழுங்குகளுடன் ஆகக் குறைந்தது 500 பேரையாவது அனுமதிப்பதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கும், இராணுவத் தளபதிக்கும் பணித்துள்ளார்.

இதன்போது இராணுவத் தளபதி சவேந்திரசில்வா, தான் யாழ்ப்பாணத்தில் நிற்பதாகவும், இது தொடர்பில் நேரடியாக ஆராய்வதாகவும் குறிப்பிட்டுள்ளார். (ஒ,5)

## வீட்டுத்...

கார சபையின் நிதியில் புங்குடுதீவில் அமைக்கப்பட்ட வீட்டுத் திட்டத்தை பயனாளிகளுக்கு கையளித்தார். சவேந்திர சில்வாவின் யாழ்ப்பாண வருகையை முன்னிட்டு குடாநாட்டின் பாதுகாப்பு பன்மடங்கு அதிகரிக்கப்பட்டிருந்தது. வீதிகள் தோறும் இராணுவத்தினர் நிறுத்தப்பட்டிருந்தனர். அத்துடன் இராணுவத்தினரின் மோட்டார் வாகன படைப் பிரிவும் சுற்றுக் காவல் நடவடிக்கையில் ஈடுபட்டது.

புங்குடுதீவில் வீட்டுத் திட்டத்தை கையளித்த பின்னர் அங்கு கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையில் கொரோனா தொற்று முற்றாக நீங்கவில்லை. வடக்கு மக்களிடம் ஒருகோரிக்கையை முன்வைக்கின்றேன். நீங்கள் சுகாதார அமைச்சால் வெளியிடப்படும் சுகாதார நடைமுறைகளைக் கட்டாயமாகப் பின்பற்ற வேண்டும். கட்டாயம் முகக்கவசம் அணிந்தே வீதிகளில் பயணிக்க வேண்டும். நீங்கள் கைகளைக் கழுவி உங்களுடைய சுகாதார நடைமுறைகளைப் பேணுவது அவசியமாகும்.

போர் முடிந்த பின்னர் வடக்கில் இராணுவத்தினரால் பல வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகன்றன. இராணுவத்தினர் மட்டுமல்ல முப்படையினரும் இணைந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கான வேலைத் திட்டங்களை மேற்கொண்டுவருகின்றேம். வடக்கில் உள்ள அப்பாவித் தமிழ் மக்களுக்காக இராணுவத்தினர் தற்போது வீதிகளில் இறங்கி வேலை செய்வதை நீங்கள் பார்க்க கூடியதாக இருக்கும்.

கொரோனா வைரஸ் பரவலை முற்றுமுழுதாக ஒழிக்காவிட்டாலும், முப்படையினரைக் கொண்டு பூரண கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளோம், என்றார்.

தேசிய வீடமைப்பு அதிகார சபையால் 14.8 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட வீட்டுத் திட்டமே பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டது. 2017ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த வீட்டுத் திட்டம், இராணுவத்தினரின் பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்டது. வடமாகாண ஆளுநர் எஸ்.எம் சார்ள்ஸ், இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா, யாழ். மாவட்டச் செயலர் க.மகேசன், யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி ருவான் வணிகசூரிய ஆகியோர் பெயர்ப் பலகையைத் திரைநீக்கம் செய்தனர். (ஒ,எ,111,26)

# மே.இ.தீவுகள் - இங்கிலாந்து மழையால் ஆட்டம் பாதிப்பு



மன்செஸ்டர், ஜூலை 19
மேற்கிந்தியத் தீவுகள் இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டம் மழையால் கைவிடப்பட்டது. ஒரு பந்துகூட வீசப்படாத நிலையில் நேற்றைய ஆட்டம் கைவிடப்பட்டது.

இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 9 இலக்குகளை இழந்து 469 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. பதிலுக்குக் களமிறங்கிய தீவுகள் ஓர் இலக்கை இழந்து 32 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. (ம)

---

## தமிழர்களின்...

துள்ளார்.

'வடக்கு கிழக்கு மாநிலம் தமிழர்களின் தாயகம் என்ற வகையிலே அவர்கள் தங்கள் மாநிலத்துக்கு தமிழீழம் என்று பெயர் சூட்டுவதில் எவ்வித முரண்பாடோ தடையோ கிடையாது' என்று வாசுதேவ நாணயக்கார கூறியுள்ளதாகத் தெரிவித்த அவர், மேற்படி கருத்தை வெளியிட்டுள்ளார்.

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் நேற்று இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் ஜனநாயக போராளிகள் கட்சியின் பிரதிநிதிகள் இணைந்து நடத்திய ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் விடுதலையை முன்கொண்டு செல்கின்ற ஒரு கட்சியாக இருக்கின்றது. ஜனநாயகப் போராளிகளின் ஆதரவு, அனுசரணை என்பது தொடர்ந்து அந்த விடுதலைப் பயணத்தை ஜனநாயக வழியிலே மேற்கொள்வதற்கு உறுதுணையாக இருப்பது மகிழ்வளிக்கிறது.

எழுபதுகளில் தென்னிலங்கையில் இளைஞர் குழு ஆயுதமேந்திப் போராடியது. அது ஈவிரக்கமின்றி அடக்கப்பட்டது. பின்னர் எண்பதுகளில் அது மீளுயிர்ப்புக் கொண்டது. அதனையும் இலங்கை அரசு தன் இரும்புக் கரம் கொண்டு அடக்கியது.

காலவோட்டத்திலே அவர்கள் ஜனநாயக நீரோட்டத்தில் கலந்துவிட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டது. அவ்வாறு ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்த ஜனதா விமுக்தி பெரமுன என்ற கட்சி எந்தவித இடைஞ்சல்களுமின்றி தன்னுடைய அரசியல் பயணத்தை அந்தந்த பிரதேசத்தைச் சேர்ந்த ஏனைய கட்சிகளுடன் சேர்ந்து அல்லது தனித்து செயற்படுத்திக்கொண்டு வருகின்றது.

ஆனால், ஜனநாயகப் போராளிகள் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குக் கொடுக்கின்ற ஆதரவை வேறொரு சாயம் பூசி அவர்களை ஓரங்கட்டி, எங்களை வேறுவித சட்ட நடவடிக்கைகளுக்குள்ளே இழுக்கும் வகையில் தென்னகத்தில் இருந்து பல கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

போராளிகள் ஜனநாயக நீரோட்டத்திற்கு வருகின்றபோது அவர்கள் உரிய கௌரவத்தோடு வரவேற்கப்படுவதும், ஜனநாயகக்கட்சியோடு அவர்கள் இணைந்து செயற்படும்போது அதே கௌரவம் வழங்கப்படுவதும் உலக நாட்டுச் சரித்திரங்கள் எமக்கு எடுத்துச் சொல்லுகின்ற பாடங்கள். இவை புதிய விடயங்கள் அல்ல. ஜனநாயகப் போராளிகள் தமிழ் தேசியக் கூட்டமைப்போடு சேர்ந்து இந்த விடுதலைத் தீபத்தை தொடர்ந்து கொண்டு செல்வதற்கு அனுசரணை வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

அடக்கப்பட்ட ஒரு இனம் தன்னுடைய விடுதலைப் பாதையினை வெவ்வேறு விதமாக அமைத்துக் கொண்டாலும் இலட்சியம் ஒன்றாகத்தான் இருக்கின்றது.

தமிழீழம் தொடர்பாக வாசுதேவ நாணயக்கார ஒரு முறைகுறிப்பிடுகின் போது, வடக்கு- கிழக்கு மாநிலம் தமிழர்களின் தாயகம் என்ற வகையிலே அவர்கள் தங்கள் மாநிலத்துக்கு தமிழீழம் என்று பெயர் சூட்டுவதிலே எவ்விவித முரண்பாடும், தடையும் கிடையது, என்று சொல்லியிருந்தார்.

அவர் அந்த விடயத்தைத் தற்போது மறுக்க முடியும். ஆனால் தமிழீழம் என்பது தமிழ் மாநிலம் என்ற வகையிலே ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். அத்தகைய, தமிழீழத்தை நோக்கியே எமது செயற்பாடு நடைபெறுகின்றது, என்றார். (ஒ,5)

**வேலையாள்கள் தேவை**
யாழ்ப்பாணத்தில் இயங்கும்
**விருந்தினர் விடுதிக்கு**
பின்வரும் ஆள்கள் உடனடியாக தேவை.
1. **சமையல் ஆள்** (பகுதி நேரமாக - பெண்/ ஆண்)
2. Receptionist, Cleaner (பெண்)
**077 700 3617** (c.34590) (13.17)

**Your Royal Auto Mobile**
எமது **வாகன சுத்திகரிப்பு நிலையத்திற்கு வேலையாட்கள் தேவைப்படுவதால்**
உடன் தொடர்புகொள்ளவும்.
தொடர்பு எண்: **077 776 3533**
இவ்வேலையில் அனுபவம் உள்ளவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும்

**மணமகள் தேவை**
யாழ். இந்து 1985 அனுச நட்சத்திரத்தில் பிறந்த A/L படித்த 12 வருடமாக பிரான்சில் சுயதொழில் புரியும் மணமகனுக்கு 1986 - 1992 பிறந்த படித்த சைவபோசன அழகிய மணமகள் தேவை. பிரான்சில் வசிப்பவர்களும் பிரான்சிற்கு சென்று வசிப்பதற்கு சம்மதிப்பவர்களும் தொடர்புகொள்ளவும்.
**077 572 4306** (cs.32662) (13.17)

**பண்ணை குத்தகைக்கு**
யாழ். இளவாலையில் 22 பரப்புக் காணியில் அமைந்துள்ள ஆடு / மாடு வளரப்பதற்குரிய வீட்டுடன் கூடிய பண்ணை குத்தகைக்கு உண்டு.
**077 711 2269, 077 361 1301**

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் **FRENCH EMBASSY** கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் **ALLIANCE FRANCAISE** மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட **CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)**
- யாரும் படிக்கலாம்.



www.ambafrancelk.org
**021 222 8093** 17, Kandy Road, Jaffna

**த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ் ஸ்தாபனத்தில்**

**மாபெரும் ஆடிமாத மலிவு விற்பனை**
- சாறி வகைகள்
- பஞ்சாபி வகைகள்
- கண்டாங்கி வகைகள்
- சன்சூட் வகைகள்
- பாட்டி புறக் வகைகள்



**30%** விலைக் கழிவு
மேற்குறித்த வகைகளுக்கு மாபெரும் ஆடிமாத மலிவு விற்பனை **16.07.2020** தொடக்கம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.
**த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்**
**44,42, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.**



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.07.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.